வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளை மழை பெய்யக் கூடும்.

# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 035 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 15, புதன்கிழமை 31.12.2014

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
A/L 2017
தொழில் நுட்ப பிரிவு
ஆரம்பம்
01.01.2015
மு.ப 8.00 மணி
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு : 021 320 7315
077 2487774

## அலையெனத் திரண்டனர் மக்கள்

### பொது எதிரணியின் பரப்புரைக் கூட்டத்தில்



யாழ்ப்பாணம், டிசெ. 31
பொது எதிரணியால் நேற்று வடக்கில் நடத்தப்பட்ட பரப்புரைக் கூட்டங்களுக்கு, மக்கள் அலையென தாமாகத் திரண்டு வந்து பேராதரவு வழங்கியுள்ளனர். மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டங்களில் லட்சக் கணக்கான மக்கள் பேரெழுச்சியுடன் நேற்றுத் திரண்டனர்.
ஜனாதிபதித் தேர்தலுக்கான, பொது எதிரணியின் முதலாவது பரப்புரைக் கூட்டம் வடக்கு மாகாணத்தில் நேற்று இடம்பெற்றது. மன்னாரில் தனியார் பஸ் நிலைய தரிப்பிடத்திலும், வவுனியாவில் வைரவப் புளியங்குளம் பக்.26

## பிரபாகரன் நாமம் கேட்டதும் ஆர்ப்பரித்த மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 31
பிரபாகரன் என்ற நாமத்தை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறியதும், பரப்புரை கூட்டத்தில் கூடியிருந்த ஆயிரக் கணக்கானோர் விண்ணதிரக் கோஷம் எழுப்பி மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தனர். பக்.26

**நாளைய 'உதயனுடன்' நான்கு வர்ண நாள்காட்டி!**

# பறிக்கப்பட்ட காணிகள் மீளளிக்கப்படும்



யாழ்ப்பாணம், டிசெம்பர் 31
இந்த அரசு அத்துமீறிப் பறித்த உங்கள் காணிகள் திரும்பவும் கொடுக்கப்படும். உங்களின் மீள்குடியமர்வு என்பது சரியான முறையில் மேற்கொள்ளப்படும். அத்துடன் தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ்மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கியே தீர்வு காணப்படும் – இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.
ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து, கிட்டுப் பூங்காவில் நேற்று மாலை இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"கடந்த 30 வருடமாக துன்பங்களை அனுபவித்த நீங்கள் இப்போது ஓரளவு மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள். எனது அரசு, 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட பக்.25

## பொய் கூற வேண்டாம் பொன்சேகா! மக்கள் கூட்டத்தில் சத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 31
மக்களுக்குப் பெருமளவு இழப்பின்றிப் போரை நடத்தினேன் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சித் தலைவருமான சரத் பொன்சேகா, கிட்டுப்பூங்காவில் நேற்றுக் கூறியபோது, பொய் சொல்ல வேண்டாம் என்று தமிழிலும், சிங்களத்திலும் மக்கள் குரல் எழுப்பினர். பக்.26

## வாக்களிக்கும் உரிமையை இழந்துவிட வேண்டாம்

வெளியே கூறப்படும் எந்தக் கட்டுக் கதைகளையும் நம்பி, வாக்களிக்கும் உரிமையை இழந்து விடவேண்டாம் – என்று தெரிவித்துள்ளது தேர்தல்கள் திணைக்களம். குறிப்பாக யாழ். மாவட்ட வாக்காளர்கள் எந்த அச்சுறுத்தலும் இன்றி வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளது. பக்.02

## கூட்டத்தை குழப்பிய பாம்பு, பூச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 31
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கூட்டத்தை பாம்பும், பூச்சிகளும் நேற்றுக் குழப்பின. இருந்தும் கூட்டம் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பங்கெடுத்த பரப்புரைக் கூட்டம் கிட்டுப் பூங்காவில் நேற்று மாலை இடம்பெற்றது. குறித்த நேரத்துக்கு கூட்டம் ஆரம்பமாகவில்லை. தாமதமாகவே ஆரம்பமாகியது. இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றி பக்.25

## மஹிந்த அரசின் கையில் இரத்தக்கறை



கொழும்பு, டிசெ. 31
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் கையில்தான் இரத்தக் கறை இருக்கின்றது என்று, ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"விடுதலைப் புலிகளின் எச்சமாக இருப்போருடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு தொடர்புகளை வைத்துள்ளது. மைத்திரி ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும், அவர்களைக் கைது செய்து நிச்சயம் தண்டிக்கும். புலிகளின் தலைவராகப் பக்.26

## அதிகாரத்தை பயன்படுத்த தெரியவில்லை வடக்குக்கு

### குற்றஞ்சாட்டுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 31
வடக்கு மாகாண சபை தேவையானதை செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதனைப் பயன்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபையினர் திறமையற்றவர்களாக இருக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.
தமிழகத்திலிருந்து ஒளிபரப்பாகும் தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"தேவையான எதையும் செய்வதற்குரிய சுதந்திரம் பக்.26

## தீர்வு காண்பதில் மஹிந்த தோல்வி

### மைத்திரிக்கு ஆதரவை அறிவிக்கும் மாநாட்டில் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31
ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பக்.25

கூட்டமைப்பின் அறிக்கை 22 ஆம் பக்கத்தில்

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# செய்திகள்

## திஸ்ஸவிடம் ரி.ஐ.டியினர் விசாரணை

கொழும்பு, டிசெ.31

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளரும் தற்போதைய சுகாதார அமைச்சருமாகிய திஸ்ஸ அத்த நாயக்கவிடம் குற்றப்புலனாய்வு விசாரணை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவினர் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் நேற்று செவ்வாய்க்கிழமை வாக்குமூலம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அண்மையில் ஊடக சந்திப்பொன்றை நடத்திய திஸ்ஸ அத்தநாயக்க, ரணில் – மைத் திரி இடையே செய்து கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் என்று கூறி ஆவணம் ஒன்றை காண்பித்தார். அதன்பின் அந்த ஆவணம் பொய்யானது என்றும் அதில் உள்ள தனது கையெழுத்து போலியாக இடப்பட்டுள்ளதென் றும் தெரிவித்து எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்க பொலிஸ் அதிபருக்கு கடிதம் அனுப்பி இது தொடர்பில் உரிய விசாரணை நடத்து மாறு கேட்டிருந்தார்.

அதன் அடிப்படையில் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ந)

## வாக்களிக்கும் உரிமையை இழந்துவிட வேண்டாம்

### தேர்தல்கள் திணைக்களம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ. 31

வெளியே கூறப்படும் எந்தக் கட்டுக் கதைகளையும் நம்பி, வாக்களிக்கும் உரிமையை இழந்துவிடவேண்டாம் – இவ்வாறு பொதுமக்களிடம் தேர்தல்கள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. குறிப்பாக யாழ். மாவட்ட வாக்காளர்கள் எந்த அச்சுறுத்தலும் இன்றி வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்டத் தேர்தல்கள் திணைக்கள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

விரிவு

மக்கள் தங்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று எது வித அச்சுறுத்தலும் இன்றி வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

வெளியில் சொல்லப்படும் கட்டுக் கதைகளை நம்பி, பொது மக்கள் தங்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்து விடக்கூடாது. – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் அச்சுறுத்தல் இன்றி வாக்களிப்பதற்குரிய உத்தரவாதத்தை தேர்தல்கள் ஆணையாளரும், யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களும் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இதனையும் மீறி ஏதாவது ஒரு வாக்களிப்பு நிலையத்தில் அச்சுறுத்தலோ, இடையூறோ ஏற்படுத்தப்பட்டால் வாக்கெடுப்பு நிலையம் உடனடியாக இடைநிறுத்தப்படும். வாக்களிப்பதற்குரிய விழிப்பூட்டும் நடவடிக்கைகள் பொது மக்களுக்காக மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிராமசேவையாளர் அலுவலகம், பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது. – என்றும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு பொதுமகனும், வாக்களிப்பதற்கு அசௌகரியம் என்று கருதினால் யாழ். மாவட்ட தேர்தல்கள் திணைக்கள 0212222655 என்ற இலக் கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். மேலதிக நடவடிக்கை தேர்தல்கள் திணைக்களத்தி னால் மேற்கொள்ளப்படும் – என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ந–5)



## அதிசயிக்கத்தக்க மனிதர் மஹிந்த

### சல்மான்கான் புகழாரம்

கொழும்பு, டிசெ.31


இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிசயிக்கத்தக்க மனிதர் என்று புகழாரம் சூட்டியுள்ளார் பொலிவூட் நடிகர் சல்மான் கான்.

ஆங்கில இதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இலங்கையின் கலைஞர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து அறியவில்லை என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். தாம் மும்பாயில் இருந்து வந்துள்ளமையால் இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை அறிய முற்படவில்லை என்று கூறியுள்ள அவர், தனது பயணம் அரசியலுடன் தொடர்புடையதல்ல என்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவே வந்ததாகவும் கூறியுள்ளார்.

தாம் சந்தித்த மனிதர்களில் மஹிந்த ராஜபக்ஷ மிகவும் பணிவான மனிதராகும். அத்துடன் மனிதாபிமானமுள்ள மனிதராகும் என்றும் சல்மான்கான் புகழாரம் சூட்டியுள்ளார். (ந)

## வடக்கில் பொது எதிரணியின் தேர்தல் பரப்புரைக் காட்சிகள்

யாழ்ப்பாணத்தில்















மன்னாரில்






வவுனியாவில்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்கள் செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். சமூகத்தில் நல்ல வரவேற்புப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிப் பணி இனிய அனுபவம் தரும்.

**இடபம்:** உங்கள் செயல் நிறைவேறுவதைத் தடுக்க, சிலர் முயற்சி செய்வர். புதிய முயற்சியை பின்னர் சிறந்த நாளில் ஆரம்பிக்கலாம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட தன்மை இருக்கும். தகுந்த ஓய்வு எடுப்பதால், உடல் நல ஆரோக்கியம் சீராகும்.

**மிதுனம்:** உத்வேகமுடன் செயற்படுவீர்கள். பணிகள் நிறைவேற பூர்வ புண்ணிய நற்பலன் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை வியத்தகு முன்னேற்றம் பெறும்.

**கடகம்:** உங்களின் முயற்சிக்கு உரிய பயன் கிடைக்கும். நண்பர், உறவினர் உங்கள் தனித்திறமையைப் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில், திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும்.

**சிங்கம்:** நீங்கள் நல்லவரையும் சந்தேக மனதுடன் பார்க்கும் இக்கட்டான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயற்படுவது நல்லது. வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் இருக்கும்.

**கன்னி:** பணிகளில் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. பொது இடங்களில், அதிக நேரம் எவருடனும் பேச வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சீராக, புதிய அணுகுமுறை அவசியம்.

**துலாம்:** உங்களின் நற்செயலால் பலரிடமும் நன்மதிப்பைப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய பரிமாணம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** பொதுநலப் பணிபுரிவதில் ஆர்வம் கொள்வீர்கள். சமூகத்தில் உங்களைப் பற்றிய நல்ல மதிப்பீடு வளரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணவரவும் அதிகரிக்கும்.

**தனுசு:** உங்கள் மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும். அடுத்தவர் விவகாரத்தில் கருத்துச் சொல்லத் தயங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகளை, கூடுதல் உழைப்பால் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** நீண்ட நாள்களாகத் தள்ளிப்போன காரியங்களை முடிப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்:** நீங்கள் புதிய பாதையில் நடைபோடுவீர்கள். பெற்றோரின் ஆலோசனை நல்வழி நடத்தும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சிறந்து வாழ்க்கைத் தரம் உயரும்.

**மீனம்:** அதிக வேலைப்பளுவால் சிரமம் ஏற்படலாம். சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை சரி செய்வீர்கள்.

# முக நூலில் சுட்டது

பல பற்கள் சேர்ந்து அரைத்து தருவதை ஒற்றை நாக்கு ருசிக்கிறது!! முதலாளித்துவத்துக்கு சிறந்த உதாரணம்

வைக்கப்படவேண்டிய ஒரு புள்ளி வைக்கப்படவில்லை என்றால் வரைந்த கோலம் முழுமை பெறாது



உங்களது ஒரு வாக்கும் அப்படித்தான் வாக்களியுங்கள், நம் நாட்டின் கோலத்தை மாற்றலாம்! தேர்தல் நாள் ஜனவரி 8



திறமை உள்ளவன் திண்டாடுறான்



காசு உள்ளவன் கொண்டாடுறான்

# முடிச்சுக் கட்டுவாரா முமைத்கான்



தெலுங்கு மற்றும் தமிழில் ஏராளமான படங்களில் குத்தாட்டம் போட்டவர் முமைத்கான். இவரது ஆட்டத்தை பார்த்து புளித்துப் போனதால் ரசிகர்கள் புதிய குத்தாட்ட நடிகைகளுக்கு வரவேற்பு காட்டினர். இதனால் முமைத்கானுக்கு பட வாய்ப்பு குறைந்து கொண்டே வந்து ஒரு கட்டத்தில் வாய்ப்பே இல்லாமலாகிவிட்டது.

இழந்த வாய்ப்பை மீண்டும் பெற முடிவு செய்த முமைத், இசை அல்பம் தயாரித்து வெளியிட்டார். அது எடுபடவில்லை. இதையடுத்து கவர்ச்சிப் படங்களை இணையத் தளத்தில் பரவவிட்டார். அதுவும் சரிவரவில்லை. ஆனாலும் சோர்ந்து போகாமல் கடைசியாக, போதை ஏற்றும் வகையில் புதிதாக கவர்ச்சி படங்களுக்கு போஸ் கொடுத்து தனது இணைய தளத்தில் வெளியிட்டிருக்கிறார். இதுவும் கைகொடுக்கவில்லையென்றால் அவர் மும்பைக்கு மூட்டைகட்டிக்கொண்டு போக முடிவு செய்துள்ளாராம்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்....

கணவன் : புதுசா வாங்கின மோட்டார் சைக்கிளில், உன்னுடைய பெயரை எழுத சரியான இடம் 'கிக்கர்' தாண்டி
மனைவி : ஏன் அங்கே எழுத வேண்டும் என்று சொல்லுறிங்க
கணவன் : தக்காளி, எத்தனை நாளைக்கு தான் நானே உதை வாங்குறது.
மனைவி : ?????

நண்பர் 1 : உங்கள் மனைவி, ஏன் எப்போதும் கோபமாவே இருக்கிறாங்க?
நண்பன் 2 : கோபத்தில கூட நீ அழகா இருக்கிறாய் என்று ஒரு நாள் தெரியாமல் சொல்லிட்டேன் அதுதான்.
நண்பர் 1 : ????

கணவன் : (மனைவியிடம்) இன்றைக்கு நீ ஒரு கறுப்பு நாய்க்கு சோறு வைச்சியா ?
மனைவி : ஆமாங்க ஏன் கேக்குறீங்க ?
கணவன் : தெரு ஓரத்தில ஒரு கறுப்பு நாய் செத்துக் கிடந்தது. அதான் கேட்டன்
மாணவி : ????

# ஆறுதல் தரும் கூகுள் கிளாஸ்

கூகுள் கிளாஸ் தாய்மார்களின் வேதனைக்கு ஆறுதல் வழங்கும் விதமாக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இன்றைய நவீன ஸ்மார்ட் கைத்தொலை பேசிகள், எத்தகைய வசதிகளைத் தருகின்றனவோ, அந்த வசதிகள் அனைத்தையும் ஒரு கண்ணைசவில் தருகின்றது கூகுள் கிளாஸ்.

கூகுள் கிளாசைப் பயன்படுத்தி குழந்தையைப் பெற்ற தாய் ஒருவர், தனது குழந்தை அவசர சிகிச்சை பிரிவில் இருந்தாலும் குழந்தையின் அசைவுகளைப் பார்க்க முடியும். இதன் மூலம் எண்ணற்ற தாய்மார்களின் வேதனையை தீர்க்கவிருக்கிறது கூகுள் கிளாஸ்.



# செய்திகள்

# மஹிந்தவை ஆதரித்தால் நிரந்தர நியமனம்

## மன்னாரில் புதிதாக உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 31

புதிதாக உள்வாங்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் கிடைக்க வேண்டுமாக இருந்தால், ஜனாதிபதிக்கே வாக்களிக்க வேண்டும் என்று அச்சுறுத்தப்பட்ட சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்கள் வடக்கில் அதிகரித்துச் செல்கின்றன. வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவான பரப்புரை நடவடிக்கைகளில் பகிரங்கமாக ஈடுபடுவதுடன், அரச உத்தியோகத்தர்களை அவ்வாறு ஈடுபடுமாறு வலியுறுத்தி வருகின்றார்.

இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்துக்குச் சென்ற வடக்கு மாகாண ஆளுநர் அங்கு புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். இதன்போது, நீங்கள் நிரந்தர நியமனம் பெறவேண்டுமாக இருந்தால் நான் தான் பரிந்துரை செய்யவேண்டும்.எனவே ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மஹிந்தவை ஆதரிக்க வேண்டும் என்று அங்கு வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)



# கடையில் இரவு தீ லொறியும் எரிந்தது

## சங்கானையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

சங்கானையில் உள்ள கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு தீ பிடித்ததால் கடையின் ஒரு பகுதியும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் பின் பகுதியும் எரிந்து நாசமாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடையில் கொப்பறா தேங்காய்களை அரைத்து எண்ணெய் பெறப்பட்டு வருகிறது. அதனால் அங்கு கொப்பறாக்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் தீ பிடித்துள்ளது. அதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பாக இருந்தது. பின்னர் தீயணைப்புப் பிரிவினர் சென்று தீயைக் கட்டுப்படுத்தினர். எனினும் அங்கு வெறுமையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியிலும் தீ பிடித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)




முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வருமானம் குறைந்த குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 24 பாடசாலை மாணவர்களுக்கு தம்பையா அன்ரன் ரமேஷ் நிதி அனுசரணையில் நல்லூர் றோட்டறிக் கழகத்தினரால் சைக்கிள்கள் வழங்கபட்டன.இதில் ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (த)

# கரையோரப் பகுதிகளில் பெரும் சுகாதாரச் சீர்கேடு



யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் கழிவுப் பொருள்கள் அதிகளவில் தேங்கியுள்ளதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் ஆபத்து உள்ளது.

குறிப்பாகக் குருநகர் பிரதேசத்தில் கடந்த சில நாள்களாகக் கழிவுகள் அகற்றப்படாது தேங்கிக் காணப்படுகின்றன.

மக்கள் நெருக்கமாக வாழும் இந்தப் பிரதேசத்தில் கழிவுகள் வீதியோரங்களில் தேங்கிக் காணப்படுகின்றன. மழை காலத்தில் இந்தக் கழிவுகள். தேங்குவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதோடு துர்நாற்றமும் வீசுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள கால்வாய்களும் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாமல் காணப்படுகின்றன.

கால்வாய்களில் அதிகளவில் சேறுகள், கழிவுகள் தேங்குவதால் அவற்றில் இருந்து நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மக்கள் செறிந்து வாழும் இந்தப் பிரதேசத்தின் கழிவுகளை உடன் அகற்றவும், கால்வாய்களைத் துப்புரவுசெய்யும்உரியதரப்பினர் உடன்நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

## கல்வீரன்குளம் உடைக்கும் அபாயம்

வவுனியா, டிசெ. 31

கல்வீரன்குளம் உடைக்கும் அபாயத்தில் உள்ளது. இந்தக் குளத்துக்கு அருகில் நின்ற சுமார் 50 வருடங்கள் பழைமைவாய்ந்த ஆலமரம் நேற்று அதிகாலை அடியுடன் சாய்ந்து குளத்தினுள் விழுந்துள்ளது. மரம் விழுந்துள்ளமையால் குளம் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளது.

நீண்ட காலமாக இந்தக் குளம் புனரமைக்கப்படாமல் இருந்தமையை சம்பந்தப்பட்ட திணைக்களம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் கவனத்துக்கு கொண்டுவந்தபோதும்,இக்குளம் புனரமைப்பதற்கான எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஏனைய பகுதிகளிலுள்ள குளங்கள் புனரமைக்கப்பட்டபோதும் இந்தக் குளம் புனரமைக்கப்படாமையால் உடைப்பெடுக்கும் மேற்படி குளப்பகுதிக்கு கீழ் வசிக்கும் 75க்கு மேற்பட்ட குடும்பங்கள், விவசாய நிலங்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்க நேரிடும் என அந்தப் பகுதி மக்கள்தெரிவிக்கின்றனர். (த-421)

# உடுவிலில் கடை உடைப்பு

## ரூபா 2 லட்சம் பெறுமதியான பொருள்கள் நள்ளிரவு திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 31

உடுவில் மகளிர் கல்லூரியை அண்மித்துள்ள பலசரக்குக் கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடைக்காரர் கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற பின்னர் நேற்றுக் காலை கடையைத் திறப்பதற்காகச் சென்றபோதே கடையின் முன்பக்கப் பூட்டு உடைக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது. உள்ளே சென்ற திருடர் அரிசி, மா, உள்ளிட்ட பலசரக்குப் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். அவற்றைக் கடையின் பின்பக்க கதவினூடாக வெளியே எடுத்துக்கொண்டு சென்றுள்ளனர். சில கடைத் தொகுதிகள் சேர்ந்ததாக அந்தக் கடையின் கட்டடம் காணப்படுகிறது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. திருடியவர்கள் யார் என்று தெரியவில்லை. விசாரணைமுன்னெடுப்பதாகப்பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# கிளிநொச்சி காளி கோயிலில் 16 பவுண் நகைகள் திருட்டு

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி 55ஆம் கட்டை சந்தியில் ரயில் நிலைய வீதிக்கு அருகாமையில் உள்ள காளி கோயிலில் 16 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை பூசை வழிபாடுகள் முடிவடைந்த பின் கோயிலின் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு கோயிலின் கதவுகள் உடைக்கப்பட்டு நகைகள் களவாடப்பட்டுள்ளன.

ரயில் நிலைய வீதியில் வழமையாகக் காவலாளிகள் கடமையில் இருப்பார்கள்.அதேபோன்று நேற்று முன்தினமும் காவலாளி ஒருவர் கடமையில் இருந்துள்ளார். இந்த நிலையில் திருடர்கள் கோயில் கதவை உடைத்து நகைகளை களவாடியுள்ளதாகவும், நேற்றுக் காலை பூசைக்காகச் சென்றபோதே பூசகர் இதனைக் கண்டதாகவும் கூறப்பட்டது.

இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (த-21)

# செய்திகள்

## கட்சி தாவிய எவருக்கும் மீண்டும் இடமளிக்கோம்

### மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.31

கட்சி தாவியோர் எவரும் மீண்டும்கட்சியில்இணைந்துகொள்ள இடமளிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

"மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சித் தாவிய எவருக்கும் இனி அரசில் இடமில்லை. ஆளும் கட்சியில் இணைந்து கொள்வோருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வோர் பற்றி சொல்வதற்கில்லை."– என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதல் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் வரையிலான பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ஆளும் கட்சியை விட்டு விலகி வருகின்றனர். இவ்வாறான பின்னணியிலேயே மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார். (ந)

## மஹிந்தவைப் பிரதமராக்க சந்திரிகாவுடன் முரண்பட்டேன்

### மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்க தாம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் முரண்பட்டேன் என்று பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டளவில் தாம் இந்த நெருக்கடியை அவருக்கு வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார். தேர்தல் பரப்புரை ஒன்றில் உரையாற்றிய அவர், முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பண்டாரநாயக்க மற்றும் தமது பெயர் பிரேரிக்கப்பட்டபோது தாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று மைத்திரிபால குறிப்பிட்டுள்ளார். (ந)



# செய்திகள்

## யாழ்.கூட்டுறவுச் சங்க வியாபாரத்தை மேலும் அதிகரிக்க வேண்டும்

### பணியாளர்களின் ஒத்துழைப்பை கோருகிறார் சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வியாபார நடவடிக்கைகள் கடந்த ஆறு மாத காலத்தில் அதிகரித்துள்ளன. இந்த வியாபாரத்தை 2015 இல் மேலும் அதிகரிக்க பணியாளர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று சங்கத்தின் தலைவர் மு.ஜெகஜிந்திரன் கேட்டுள்ளார்.

சங்கத்தின் பரிசளிப்பு மற்றும் ஒளிவிழா நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

"சங்கப் பணியாளர்களின் தேவை மற்றும் அவர்களின் கொடுப்பனவுகள் யாவும் உரிய முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

வியாபார நடவடிக்கைகள் தற்போது அதிகரித்துக் காணப்படுவதோடு இந்தச் சங்கம் 2015 ஆம் ஆண்டில் வியாபார நடவடிக்கைகளில் முதன்மை பெற்றுத் திகழ்வதற்கு பணியாளர்கள் முழுமையான பங்களிப்பை வழங்கவேண்டும்.

கிளை நிலையங்களில் கூடிய வியாபாரத்தை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு மற்றும் பரிசுகளை சங்கம் வழங்கி வருகின்றது.

பணியாளர்கள் நுகர்வோரைக் கவரும் முகமாக தமது கிளை நிலையங்களை காட்சிப்படுத்துவது மிக முக்கியமாகும். அத்துடன் கூட்டுறவு பணியாளர்களுக்காக புதிதாக சலுகைகள் எதுவும் அறிவிக்கப்பட்டால் அந்தக் கொடுப்பனவை சங்கம் பணியாளர்களுக்கு உரிய முறையில் வழங்கும்"–என்றார்.

இந்த நிகழ்வில் சங்கத் தலைவர் சங்கத்துக்கு ஆற்றும் சேவைக்காக விழா இறுதியில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் கலந்து கொண்ட பொதுச் சபை உறுப்பினர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் அவருக்கு மலர் மாலை அணிவித்துப் பாராட்டினார்கள். (வ–17)



கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு குடும்ப விழா நிகழ்வில் இடம்பெற்ற 'மனமாற்றம்' நாடகத்தின் ஒரு காட்சி. (வ–135)

## செபமாலை அன்னை ஆலய நன்னீர்க் கிணறு புனரமைப்பு

கொழும்புத்துறை,டிசெ.31

கொழும்புத்துறை பிரதேச மக்களின் குடிதண்ணீர் தேவைக்குப் பயன்படுத்தப் பட்டு வரும் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வளாகத்தில் உள்ள நன்னீர்க் கிணறு புனரமைக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்பகுதி இடியுண்டு சேதமுற்றுக் காணப்படுகிறது.

பொது மக்கள் பாவனையில் உள்ள இந்தக்கிணற்றின் திருத்தப் பணிகளுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஒரு லட்சம் ரூபாவும், மாவை சேனாதிராசா 48ஆயிரம் ரூபாவும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளனர்.

மேலதிக செலவினத்துக்கான நிதிப் பங்களிப்பை பங்குத் தந்தை மற்றும் பங்கு மக்கள் வழங்க முன்வந்துள்ளதாகவும் முழுச் செலவினம் 3 லட்சத்து 25ஆயிரம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. (வ–135)

## பாஷையூரில் ச.ச.நிலையம் புனரமைக்கப்பட்டு திறப்பு



கடந்தகாலபோர் நடவடிக்கைகளால் சேதமடைந்திருந்த பாஷையூர், மகேந்திரபுரம் பதுவையர் சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினரான சர்வோதய அமைப்பின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜி.சுபசேன டி சில்வா, சிறப்பு விருந்தினர்களான வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், பங்குத் தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகள், கௌரவ விருந்தினரான சர்வோதய யாழ். மாவட்ட இணைப்பாளர் சி.புகேந்திரா ஆகியோர் இணைந்து நிலையத்தைத் திறந்து வைத்தனர்.

பெயர்ப் பலகையை ஆனல்ட் திரைநீக்கம் செய்து வைத்தார்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து கவிஞர் மு.சிங்கராயர், வட மாகாண முதலமைச்சர் விருது பெற்ற கலைஞர் சி.அருட்பிரகாசம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். மகேந்திரபுரம் கிராமம் சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் பாஷையூர் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி மகேந்திரன் அடிகளாரினால் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ–135)

## கடற்றொழிலாளர் சங்கத்தை புனரமைக்கக் கோரிக்கை

மன்னார், டிசெ.31

மன்னார் தேவன்பிட்டி புனித சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கடந்த ஐந்து வருடங்களாக இயங்காதுள்ளதால் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கு புனரமைப்புக் கூட்டத்தை கூட்டுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சங்கம் கடந்த ஐந்து வருடங்களாக இயங்காமல் செயலிழந்துள்ளது. எனவே உடனடியாக புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யுமாறும், சங்கம் செயற்படாததால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பல்வேறு உதவித்திட்டங்கள் கிடைக்காமல் போவதாகவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர். (வ–9)

## காணிப் பதிவு விண்ணப்பங்கள் இன்று ஏற்கப்படா

யாழ்ப்பாணம்,டிசெ.31

வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலுள்ள காணி மாவட்டப் பதிவகத்தில் இன்று புதன்கிழமை பிறப்பு, இறப்பு, விவாகம் மற்றும் காணி தொடர்பான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்று காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர் அறிவித்துள்ளார்.

அதேசமயம் முதலாம் திகதி முதல் வழமைபோல் அனைத்துச் சேவைகளும் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ)

## யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் கற்கைகளைப் பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள்

வலி.வடக்கு, டிசெ.31

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தின் இந்திய கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கர்நாடக சங்கீதம், வயலின், ஹிந்தி மற்றும் யோகா கற்கைநெறி கற்று வெளியேறிய 66 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் துணைத் தூதர் எஸ்.தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கை இந்திய துணைத்தூதர் தட்சணாமூர்த்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் மா.சின்னத்தம்பி உட்பட விரிவுரையாளர்கள் மற்றும் துணைத் தூதரக அலுவலர்களும் ஏற்றி வைத்தனர்.


மத வழிபாட்டைத் தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து இடம் பெற்றது.

அதைத்தொடர்ந்து வட இலங்கை சங்கீத சபை மாணவர்களின் வயலின் கச்சேரி, ஹிந்தி மொழி கற்ற மாணவிகளின் நகைச் சுவை நாடகம், கர்நாடக இசைக் கச்சேரி என்பனவும் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண




ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். (வ–86)

# அம்மாடியோவ்!



## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?

| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

## ஓவியங்களே!

ஆம்! மாணவச் செல்வங்களைத்தான் அழைக்கின்றோம்!!
ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு ஓவியம்தான்.
ஓவியங்கள் வரையும் ஓவியம்:

உதயன் தனது 30 ஆவது ஆண்டினை முன்னிட்டு நடாத்தும் மாணவச் செல்வங்களுக்கான மாபெரும் ஓவியத் தேர்வு.

தேர்வு செய்யப்படும் ஓவிய மாணவச் செல்வங்களுக்குப் பெரிய அளவிலான பரிசு மழை.

ஓவியத் தேர்வு தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

உங்கள் எண்ணங்களை வண்ணமாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.02.2015.

**புத்தாண்டு அன்று பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்.**
**ஆம்! சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.**

உங்கள் எண்ண ஓட்டங்களை வண்ண ஓவியங்களாக்கி அனுப்பிவைக்கும் போது உதயன் படிவத்திலே உங்கள் பெயர் விவரங்களை, ஓவிய ஆக்கத்துடன் சேர்த்து அனுப்ப மறந்து விடாதீர்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் எண்ணக் காவியங்களை வண்ணக் காவியமாக்கும் வகையில் ஓவியப் போட்டிக்கான தலைப்புகளைத் தருகின்றோம்.

| பிரிவு | வகுப்புத் தரம் | தலைப்பு |
|---|---|---|
| A | தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| B | தரம் 06,07,08,09 | பனை வளமும் நாமும் |
| C | தரம் 03,04,05 | பண்டிகை நிகழ்வு |

35 செ.மீ. x 45 செ.மீ. (14" x 18") அளவுடைய வெள்ளை 'பிறிஸ்டல் போட்' அல்லது வெள்ளை நிற கென்ற் (Kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர், சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.
உரிய பிரிவில் ஒருவர் ஓர் ஆக்கத்துக்கு மேலாகவும், உங்கள் ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு ஆக்கங்களுடனும் தனித் தனி விண்ணப்பப் படிவம் இணைத்தல் வேண்டும். மாணவரது ஆக்கம் என்பதனை உரிய பாடசாலை உறுதி செய்தலும் அவசியம்.
எங்கே?
வர்ணமய உலகில் சஞ்சரித்து உங்கள் ஆக்கங்களைத் தொடங்கலாம். பாடசாலை தொடங்கியதும் உறுதிப்படுத்தி அனுப்பி வையுங்கள். தேவைப்படும் இடத்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வாளர்கள் மீண்டும் ஒரு ஆக்கம் ஆக்கத் தயாராக இருக்கவேண்டும். அதற்கான வளங்களை நாம் வழங்குவோம்.
***வாழ்த்துக்கள்.***

# 30

அகவையில்
உதயன்

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........................................
கற்கும் பாடசாலை: ..........................................
தரம்: ...............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:..........................................
ஆசிரியரின் பாடத்துறை: ..........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும்
செல்வன்/செல்வி .................................. அவர்களது சுய ஆக்கம்
என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்
பத்திரிகையுடன்
நாளாந்தம்
இணைந்திருங்கள்!

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேர்தல் வன்முறைகள் இடையூறு விளைவிக்குமா...?

இரண்டுவார காலமாக நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்டவாறு ஜனவரி 8ஆம் திகதி நடத்த முடியுமா என்ற சந்தேகம் ஏற் பட்டிருந்தது. வெள்ளம், மண்சரிவு காரணமாக 22 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 11 லட்சத்து 13 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். ஒரு லட்சத்து 17ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தனர். 32 பேர் உயிரிழக்க அறுவர் காணாமற் போயினர். இது 2004 டிசெம்பரில் இடம்பெற்ற ஆழிப் பேரலை அழிவுக்குப் பின்னர் நாடு சந்தித்த மோசமான இயற்கை அனர்த் தமாகும். மோசமான காலநிலையால் கிழக்கு மாகாணமும் அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, நுவரெலியா ஆகிய வையுமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த மக்களில் பலர் வாக்களிப்பதற்குத் தேவையான அடையாள அட்டை, தம்மை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ஆகியவற்றை வெள்ளத்தில் தவறவிட்டுள்ளனர். அனர்த்தம் காரணமாக வாக்காளர் அட்டை விநியோகிக்கும் பணி ஜனவரி மூன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்வு காரணமாக மக்கள் வாக்களிக்க முடியுமா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க, தேர்தல் வன்முறைகளும் நீதியான தேர்தல் நடப்பதற்குச் சவாலாக இருந்து வருகின்றன. இதுவரை தேர்தல்கள் திணைக்களத்துக்கு 629 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரச சொத்துக்களைப் பயன்படுத்தியமை, அரச ஊழியர்களைப் பயன்படுத்தியமை தொடர்பான 146 முறைப்பாடுகளும், வன்முறைகள் தொடர்பான 421 முறைப்பாடுகளும் இவற்றில் அடங்கும். 17ஆவது அரசமைப்புத் திருத்தம் செயலிழந்திருப்பதால் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் தேர்தல்கள் ஆணையாளர் பல சவால்களைச் சந்தித்து வருகிறார்.

தேர்தல் திகதியைப் பிற்போடுவது குறித்து தீர்மானம் எதுவும் இல்லை என்று அரசு தெரிவித்திருப்பினும் மோசமான தேர்தல் வன்முறைகளும் தேர்தலைப் பின்போட வைக்கலாம் என்கின்றனர் தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள். வடக்கு மக்களை அச்சுறுத்தி வாக்களிப்பைத் தடுத்தால் தேர்தலை முழுமையாக ரத்துச்செய்துவிடுவேன் என்று தேர்தல் ஆணையாளர் எச்சரித்துள்ளார்.

தாழமுக்கம் நகர்வதால் நாடு வழமை நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இடம் பெயர்ந்த மக்கள் அடுத்த ஒருவார காலத்துக்குள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியுமா, வாக்களிக்க இயலுமா என்பவை இன்னமும் கேள்விக்கிடமாகவே உள்ளன.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளம் வடிந்தோட ஆரம்பித்துள்ளது என்று கூறப்படுகிறது. ஆகவே மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல்கள் திணைக்களம் மேற்கொள்ளவேண்டும். இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வாக்களிப்பதற்கெனச் செய்யப்பட்டுள்ள ஒழுங்குகள் குறித்து தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் அக்கறை காட்டி வருகிறது.

ஆகவே தேர்தல் வன்முறைகள், வாக்காளர்கள் மீதான பயமுறுத்தல்கள் ஒருபுறமிருக்க பாதிக்கப்பட்ட மக்கள் அடையாள அட்டை இன்றி வாக்களிக்க முடியுமா என்ற பிரச்சினையும் மேலெழுந்து வருகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேர்தலை எப்படி நடத்துவது என்பது குறித்த விசேட கலந்துரையாடல், ஜனவரி 3ஆம் திகதி கண்டியில் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். தேர்தல்கள் ஆணையாளர் தற்பொழுது இரு முக்கிய சவால்களை எதிர்நோக்குகிறார். ஒன்று மக்கள் சுதந் திரமாகச் சென்று வாக் களிப்பதை உறுதிப்படுத்துவது. இரண்டாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாக்களிப்பதற் கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது. இவற்றை அவர் செயற்படுத்துவார் என்று எதிர்பார்க் கலாமா...?

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதில் உள்ள சிக்கல்

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்போது எதிரணி மற்றும் அரசுதரப்பு இரு பகுதியினருமே அரசமைப்புத் திருத்தங்கள் பற்றிய விடயங்களை பெரும்பாலும் அரசியல் மேடைகளில் தவிர்த்துக் கொண்டு வருகிறார்கள். அதேசமயம் அந்த விடயத்துக்கு வேறு இடங்களில் அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அவர்களின் பிரதான பேசுபொருளாக இருப்பது விடுதலைப்புலிகள் ராணுவ மட்டத்தில் தோற்கடிக்கப்பட்டமையாகும். பயங்கரவாதம் இப்போது வரலாற்றுப் பொருளாகிவிட்டது என்று கூறுவது உண்மைக்கும் யதார்த்தத்துக்கும் அப்பாற்பட்ட விடயம் என்று அவர் விவாதிக்கிறார். அவர் முன்வைக்கும் இன்னொருவிடயம் தன்னை வீழ்த்துவதற்கு மேற்குலக சக்திகள் சதி முயற்சியில் இறங்கியுள்ளன என்பதாகும். அதேசமயம் அவரை எதிர்த்து போட்டியிடும் தேசிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கூறுகிறார், கடந்த சில வருடங்களில் மட்டும் இலங்கையில் நிகழ்ந்துள்ள ஊழல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சென்றுள்ளன என்று. அவர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது உட்பட தெரிவித்துள்ள பல வாக்குறுதிகளில் இப்பொழுது அமைச்சர் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ள போதைப் பொருள் மற்றும் மதுபான வர்த்தகர்களுக்கு எதிராக சட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் ஒரு தார்மீக சமுதாயத்தை உருவாக்கப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

அரசமைப்பு மாற்றங்களை செய்வது பற்றி ஆராய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் ஒரு குழுவை ராஜபக்ஷ நியமித்திருக்கிறார். அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தின்படி முழு நாடாளுமன்றமும் அரசமைப்புச் சபையாக செயல்படுவதாய் இருக்கும். சகல அரசியல் கட்சி பிரதிநிதிகளும் இதில் பங்குபற்றுபவர்களாய் இருப்பர். அவ்வாறு உருவாக்கப்படும் அரசமைப்பு வரைவானது என்னால் மக்களின் அங்கீகாரத்துக்கென பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். ஆனால் அது நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்வதை குறிப்பதாக அர்த்தமாகமாட்டாது. அவர் கூறுவது, இப்போதிருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை மாற்றி அமைக்கப்படும், அதிலுள்ள திருப்தியளிக்கும் அம்சங்கள் இருக்கத்தக்கதாக நாடாளுமன்ற முறையிலுள்ள பல வீனங்கள் நீக்கப்படும் என்பதாகும். ராஜபக்ஷ வழங்கியிருக்கும் வாக்குறுதிகளுக்கான தலைப்பாக, பாதாள உலக செயற்பாடுகளுக்கும் போதைவஸ்து பிரச்சினைக்கும் நிரந்தர முத்தாய்ப்பு என்று தரப்பட்டுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் மிகப் பெரிய போதைப்பொருள் வியாபாரம் நடந்திருக்கிறது என்றால் அது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டு முன்னணி ஆட்சியின் போதுதான் என்பதில் இரகசியம் எதுவும் கிடையாது. போதைப்பொருள் பிரச்சினை இந்த அளவுக்கு விரிவடைந்துள்ளமைக்குக் காரணம் இது தொடர்பான அதிகாரப்பிரிவின் தகுதியின்மை அல்லது ஆளணி பற்றாக்குறை என்று கூறமுடியாது. ஒவ்வொரு போதைப்பொருள் கடத்தல் சம்பவத்திலும் புலனாய்வுகளைத் தடுத்து நிறுத்துவதிலும் பொறுப்பானவர்களைத் தண்டனையிலிருந்து தப்புவிப்பதிலும் செல்வாக்குள்ள நபர்கள் வெற்றிகரமாக செயல்படுகிறார்கள் என்பதே வெளிப்படை. இதற்கு இலங்கைக்கு போதைப் பொருள் மிகப் பெரிய அளவில் கடத்தப்பட்டிருந்த நிலையில் கொள்கலன் ஒன்று கண்டுபிடிக் கப்பட்டு அதனை விடுவிப்பதற்கு பிரதம அமைச்சரின் கடிதத் தலைப்பொன்றை அலுவலர் ஒருவர் எவ்வாறு பயன்படுத்தியிருந்தார் என்பது ஒரு சிறந்த உதாரணமாகும். அதற்காக எவரும் தண்டிக்கப்படவும் இல்லை.

தேசிய ஜனநாயக முன்னணியின் பிரதான பங்காளிக்கட்சி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்று கூறும் அதேசமயம் இன்னொரு பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய முக்கிய சில திருத்தங்களுடன் அது செயலில் இருக்கவேண்டும் என்கின்றது. சிறிசேன விடுத்துள்ள தமது தேர்தல் அறிக்கையில் ஏனைய கட்சிகளோடும் கலந்துரையாடல்களை நடத்தியதன் பின்னர் நூறு நாள்களுக்குள் அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றுவேன் என்று குறிப்பிட்டுளார். அந்த வகையில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சிறிசேன பல முறை ஏற்கனவே கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். அதன் நோக்கம் இரண்டு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு செயற்பாட்டை உருவாக் கிக் கொள்வதாகும்.

அந்த வகையில் ஒரு பிரதி அமைச்சர் பகிரங்கமாக கைதுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அதிமுக்கிய பிரமுகர்கள் பகுதியைப் பயன்படுத்திக்கொண்டு சிங்கப்பூருக்குபயணம் மேற்கொண்ட சம்பவத்தைச் சுட்டிக் காட்டவேண்டும். சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் சலூட் செய்து வழங்கிய கட்டளைப் பத்திரத்தில் தேர்தல் மேடை ஒன்றில் வைத்து கைச்சாத்திட்டதன் பின்னர் இவ்வாறு செய் யப்பட்டிருப்பது அந்தக் கட்டளையை பரிகாசம் செய்வது போல் இருந்தது. இம்மாதிரியான நடத்தைகளுக்கு புதிய பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதல்ல பரிகாரம். அரசியல் தலையீடுகள் இல்லாத வகையில் நேர்மையாக சட்டங்களை நடைமுறைப்படுத்துவதே வழியாகும்.

பொதுவில் சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட்டுவிடமாட்டாது. மேற்கொண்டும் விவாதங்கள் நடத்தப்படவிருக்கின்றது என்பது புலனாகின்றது.

இவைகளுக்கிடையில் ஐ.தே.விலிருந்து அரசு பக்கம் தாவிய திஸ்ஸ அத்த நாயக்க வெளியிட்டுள்ள ஆவணம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது குறித்துக் கூறுகையில்;

முதலில் அது ஒரு போலி ஆவணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலுள்ளது எனது கையொப்பமல்ல, மைத்திரிபாலசிறிசேனவுடையதுமல்ல. எமது முக்கிய திட்டங்கள் யாவும் எமது தேர்தல் அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அதற்கு மேல் ஒன்றும் கிடையாது. எனது கையொப்பம் கள்ளத்தனமாக இடப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபரை புலனாய்வு செய்யும்படி அவருக்கு எழுதியிருக்கிறேன் . இது ஒரு சட்டவிரோத குற்றச் செயல் என்றார். அதேவேளை மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிடுகையில்;

நவம்பர் 21ஆம் திகதி அரசை விட்டு விலகினேன். அப்பொழுது விக்கிரமசிங்கவை நான் சந்தித்திருக்கவுமில்லை. தபால் மூலம் வாக்களிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தமையால் இது வாக்காளர்களை ஏமாற்றவெனச் செய்யப்பட்ட செயல். இந்த மாதிரி வேறு ஆவணங்களும் தயாரிக்கப்படுவதாக நாங்கள் அறிகிறோம். நானும் ஐ.ஜி.பிக்கு இது பற்றி எழுதியிருக்கிறேன். இதனை நான் நீதிமன்றுக்கு கொண்டுபோகவிருக்கிறேன். அத்த நாயக்க வெளியேறிய போது அவர் கூறியவைகளில் ஒன்று எங்களுக்குள் இடம்பெற்றிருந்த பேச்சுவார்த்தைகள் பற்றி தமக்கு ஒன்றுமே தெரியாது என்பதாகும். பிறகு இவ்வாறு ஒரு போலி ஆவணத்தைத் தயாரித்திருக்கிறார். ஐ.தே. கட்சி இந்த மாதிரி பொதுச் செயலாளர்களினால் பல தேர்தல்களில் தோல்வி அடைந்துள்ளது.

இப்பொழுது அத்தநாயக்கவையும் அரவணைத்துக் கொண்டுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷவும் தோல்வியைத் தழுவப்போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

கலாபூஷணம்
க.லோகேஸ்வரன்.

# சக்தி வாய்ந்த வைகுண்ட ஏகாதசி விரதம்



ஏகாதசி விரதம் எல்லா விரதங்களுள் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒன்றையும் உண்ணாமல் இருப்பதே உபவாசம். அன்னம், பால், தீர்த்தம் இவற்றுள் ஒன்றையாவது உட்கொண்டால் அது விரதமாகாது.

புராண காலத்தில் மாபெரும் மன்னனாகிய ருக்குமாங்கதன் அனைவரும் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென ஆணையிட்டான். விரதம் அனுஷ்டித்த அனைவரும் பூரண ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்தனர். இதனால் யமனுக்கு வேலை குறைந்துவிட்டது. இதற்காக தேவர்கள் மோகினியை அனுப்பினார்கள். காட்டுக்கு, வேட்டைக்குச் சென்ற ருக்குமாங்கதன் அவள்மீது மோகம் கொண்டு அவளைத் திருமணம் செய்து கொண்டான்.

ஏகாதசி தினத்தில் அதிகாலை எழுந்த மன்னன் மோகினியை ஸ்நானம்செய்து பூஜைஅறைக்கு வருமாறும், உபவாசமிருந்து "பகவத் கதா சிவரணம்" கேட்கலாமெனவும் கூறினான். இவையெல்லாம் தேவையில்லாததொன்று என்று மோகினி கூறினாள். அப்பொழுது மன்னனுக்கு தான் செய்த தவறு தெரிந்தது. தனது சொல்லை மீறினால் அருமை மைந்தன் தர்மாங்கதன் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த வேண்டியிருக்கும் என்றாள் மோகினி. மோகினியின் வார்த்தையால் சினமுற்ற மன்னன், தன்து மைந்தனை வெட்டி பலியாக்கி விட்டு உனக்கு ஏகாதசி விரத பங்கு இல்லாமல் செய்கிறேன் என்று கூறி மன்னன் வாளை வீசவே அது தர்மாங்கதன் கழுத்தில் பூமாலையாக வீழ்ந்தது. அந்தத் தருணத்தில் மன்னனாகிய தங்களது மன உறுதியைப் பரீட்சிக்கவே தான் மோகினி வடிவாக வந்ததாகக் கூறி தர்மதேவதை மறைந்தார்.

ஏகாதசியில் உபவாசம் இருக்காதவர்களுக்குப் பாரணை பயன் தராது. துவாதசி எத்தனை நாள் இருக்கின்றீர்களோ அதில் எட்டில் ஒரு பாகத்துக்கும் "ஹரி வாஸம்" என்று பெயர். அந்தச் சமயம் பூசை முடிந்து உண்பது பகவானுக்கு அன்னமிடுவதாகும். பகல் தூக்கம், எண்ணெய் ஸ்நானம், ஸ்திரிபோகம் ஏகாதசி விரதத்தின் புனிதத்தன்மையை அகற்றிவிடும்.

மஹா விஷ்ணுவுக்குப் பிரியமான ஏகாதசி நோன்பை இந்துக்கள் முக்கிய நோன்பாக அனுஷ்டிப்பது வழமை. வளர்பிறையில் ஒன்றும் தேய்பிறையில் ஒன்றும் என மாதம் இருமுறை உபவாசம் இருப்பது உடல் நலத்திற்கு நன்மை பயப்பதாக அமையும். மார்கழி மாதங்களில் சிறந்த மார்கழித் திங்களில் வரும் வளர்பிறை ஏகாதசி இறையன்புக்கு முக்கிய மானதாக அமையும்.

விஷ்ணுஆலயங்களில்வைகுண்ட ஏகாதசியன்று திறக்கப்படும் வைகுண்ட வாசல் வழியாகச் சென்று திருமாலைத் தரிசனம் செய்தால் பிறப்பு இறப்புகளில் இருந்து விடுபட்டு வீடுபேற்றை எய்த முடியும் என்பது நம்பிக்கை.

ஈழத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களான பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில், வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் ஆலயம், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம் என்பவற்றில் வைகுண்ட ஏகாதசி சுவர்க்க வாசல் திறப்பு என்பன வருடா வருடம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

> ❝ ஏகாதசியில் உபவாசம் இருக்காதவர்களுக்குப் பாரணை பயன் தராது. துவாதசி எத்தனை நாள் இருக்கின்றீர்களோ அதில் எட்டில் ஒரு பாகத்துக்கும் "ஹரி வாஸம்" என்று பெயர். அந்தச் சமயம் பூசை முடிந்து உண்பது பகவானுக்கு அன்னமிடுவதாகும். பகல் தூக்கம், எண்ணெய் ஸ்நானம், ஸ்திரிபோகம் ஏகாதசி விரதத்தின் புனிதத் தன்மையை அகற்றிவிடும்.



# முடிவுக்கு வந்தது அரை நூற்றாண்டு விரோதம்

நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தரப் பகைவர்களும் இல்லை என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையே நிலவிய அரை நூற்றாண்டு கால விரோதம் முடிவுக்கு வந்திருக்கிறது. இரண்டு நாடுகளுக்கும் இடையேயான ராஜீய உறவு மறுபடியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் பதவி வகித்த ஒன்பது அமெரிக்க அதிபர்களால் சாதிக்க முடியாததை பராக் ஒபாமா நடத்திக் காட்டியிருக்கிறார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையே ரகசியப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தன. வத்திக்கானி லுள்ள கத்தோலிக்கத் திருச்சபை யின் ஆசியுடனும், கனடா அர சின் உதவியுடனும் நடந்து வந்த இந்த ரகசியப் பேச்சு பல தடைகளையும் கடந்து வெற்றியில் முடிந்திருக்கிறது என்றால், அதற்குப் பாப்பரசர் பிரான்சிஸ் காட்டிய அக்கறைதான்காரணம். வத்திக் கானில் நடந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தைக் குப் பிறகு, அமெரிக்க அதிபர் ஒபாமாவும், கியூபா அதிபர் ரௌல் காஸ்ட்ரோவும் தொலைபேசியில் உரையாடியதுடன், அரை நூற்றாண்டு காலவிரோதம் முடிவுக்கு வந்தது.

இரு நாடுகளுக்கும் இடையேயான பயணம், வங்கிப் பரிமாற்றம், வணிகம் ஆகியவற்றுக்கான விதிமுறைகளும், நடைமுறைகளும் தளர்த்தப்பட்டு, பிற நாடுகளைப் போலவே கியூபாவும், அமெரிக்காவுடன் உறவு வைத்துக் கொள்வது என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் இரண்டு நாட்டுச் சிறைகளிலும் உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டு, அவரவர் நாட்டுக்கு அனுப்பப்படுவர் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

1959–இல் நடந்த புரட்சிக்குப் பிறகு பிடல் காஸ்ட்ரோ ஆட்சியைக் கைப்பற்றிகியூபாவில் கம்யூனிச அரசை நிறுவியதைத் தொடர்ந்து சகல சொத்துகளும் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. அதனால், மிக அதிகமாக பாதிக்கப்பட்டது அமெரிக்கா தான். அங்கே இருந்த சீனி ஆலைத் தொழிற்சாலைகளும், வணிகமும் அதுவரை அமெரிக்கர்கள் வசம்தான் இருந்தன.

காஸ்ட்ரோ எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவாக, கியூபாவின் கம்யூனிச அரசை அகற்றி ஜனநாயகத்தை ஏற்படுத்த அமெரிக்கா எடுத்துக்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. அமெரிக்கா கியூபா மீது பொருளாதாரத் தடை விதித்தது. இதை ஏனைய நாடுகள் ஆதரிக்கவில்லை என்றாலும்கூட, கியூபாவை அந்தத் தடை பாதிக்கவே செய்தது.

பிடல் காஸ்ட்ரோ தலைமையில் கம்யூனிச நாடாக கியூபா வெற்றிகரமாகத் தொடர முடிந்ததற்குக் காரணம், அன்றைய சோவியத் யூனியனின் முழு ஆதரவு இருந்ததுதான். 1991–இல் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு, ரஷ்யா, கியூபாவுக்கு அளித்து வந்த சலுகைகளையும், மானியங்களையும், ராணுவ ஆதரவையும் படிப்படியாக விலக்கிக் கொண்டு விட்டது. 2008–இல், தனது உடல் நிலையைக்கருதி பிடல் காஸ்ட்ரோ பதவி விலகி, தனது சகோதரர் ரௌல் காஸ்ட்ரோவிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

கியூபா மீதான பொருளாதாரத் தடையை அகற்ற வேண்டுமானால் அதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவை. இப்போதைய நிலையில் இரண்டு அவைகளில் எதிலும் அதிபர் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சிக்குப் பெரும்பான்மை இல்லை என்பது மட்டுமல்ல, குடியரசுக் கட்சி கியூபாவுடனான சுமுக உறவை ஆதரிக்கத் தயாராகவும் இல்லை.

உடனடியாக அமெரிக்கா செய்யக் கூடியதும், செய்யப் போவதும்கியூபாவில்தகவல்தொலைத் தொடர்பை பலப்படுத்துவது தான். ஒரு நாட்டின் கலாசாரத்தையும், அரசமைப்பையும் தகர்க்கவல்ல சக்தி வாய்ந்த ஆயுதம்சமூகவலைதளங்களும், ஊடகங்களும்தான் என்பது அமெரிக்காவுக்குத் தெரியாதா என்ன?

மக்களால் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் அமெரிக்க அதிபர் இரண்டு முறைக்கு மேல் பதவி வகிக்க முடியாது. பராக் ஒபாமாவுக்கு இது இரண்டாவது முறை. இதுவரை அவர் பெருமைப்பட்டுக் கொள்ளும்படியாகஎதுவும்செய்துவிடவில்லை. நாடாளுமன்ற மேலவைக்கு நடந்த தேர்தல்களில் அவரது ஜனநாயகக் கட்சி தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வருகிறது. இந்த நிலையில், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்குள் தனது சாதனை என்று காட்டிக்கொள்ள ஏதாவது செய்தாக வேண்டும்.

பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிப் பதவி விலக வேண்டி வந்த அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ரிச்சர்ட் நிக்சன், சீனாவுடன் உறவை ஏற்படுத்தியதற்காக இன்றளவும் நினைவுகூரப்படுகிறார். அதிபர் ஒபாமாவின் தவறுகளும், தோல்விகளும் கியூபாவுடன் துணிந்து உறவைப் புதுப்பித்திருப்பதன் மூலம் மறக்கப்படலாம். அவர் இதற்காக நினைவுகூரப்படலாம். அவர் மட்டுமல்ல, பிடல் காஸ்ட்ரோவும்கூடத்தான் – சரித்திரப் புத்தகங்களில்!

*நன்றி–தினமணி*

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கருத்து

## வாசகர் திருமுகம்

### எமக்கும் விடிவு வேண்டும்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறப்பான புள்ளிகள் பெற்று பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, நான்கு வருட கற்கை நெறியை முடித்த போதிலும் நான்கு வருடங்களாக வேலை வாய்ப் புத் தேடி அலைகிறோம். ஆனால் கல்வியியற் கல்லூரி சென்றவர்கள் தமது கற்கை நெறியை முடித்து ஆசிரிய வேலை செய்து மூன்று வருட கால சேவையைப் பூர்த்தி செய்து விட்டார்கள்.

இன்னும் பலர் வங்கி ஊழியர்களாக, சமுர்த்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதுடன் இன்னும் பலர் அரச நிறுவனங்களிலும் வேலை செய்கிறார்கள்.

பட்டதாரிகளான நாம் காலத்துக்குக் காலம் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், கட்சிக் காரியாலயங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் என்று பல இடங்கள் சென்று ஏமாந்துவிட்டோம். கட்டுக் கட்டாக "போட்டோ கொப்பிகள்" கொடுத்ததுதான் மிச்சம்.

ஜனாதிபதி வருகிறார், அமைச்சர் வருகிறார், இந்த உயர் அதிகாரி வருகிறார், அந்த அதிகாரி வருகிறார், இந்தக் கூட்டத்துக்கு வாருங்கோ என்று உத்தரவு போட அவை அனைத்துக்கும் தவறாது சென்று அதிலும் பயனைக் காணாதிருக்கிறோம்.

கடந்த மே மாதம் 2ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலரினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, எமது கல்விப் பத்திரங்கள் சரி பார்க்கப்பட்டு ஏழு மாதங்கள் கழிந்த நிலையில் அதற்கும் இதுவரை ஒரு முடிவும் எட்டப்படவில்லை.

இது தவிர யாழ்.மாவட்ட செயலகத்தால், வடமாகாணத்துக்கு வெளியே ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதற்கான படிவங்கள் வழங்கப்பட்டு, அதில் எங்களது ஒப்புதலும் பெறப்பட்டு அந்த விடயமும் கிணற்றுக்குள் போடப்பட்ட கல் மாதிரி மறைந்துவிட்டது. காலத்துக்குக் காலம் நடைபெறும் பொதுத் தேர்தல்களைக் காரணம் காட்டி எமது விடயம் இழுபட்டுக் கொண்டு போகின்றது. மாகாண சபைத் தேர்தல், ஊவாத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்று கதை நீள்கின்றது. தயவுசெய்து இனிவரும் நாள்களிலாவது எமது துயரத்தில் அக்கறை எடுத்து ஆவன செய்யும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். குறிப்பாக 02.05.2014 இல் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நேர்முகத் தேர்வு தொடர்பாக ஒரு நல்ல முடிவைப் பெற்றுத் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் சார்பாக.*

### எமக்கு இனியாவது நிம்மதி கிடைக்கட்டும்

நான் ஒரு இந்திய வீட்டுத்திட்டப் பயனாளி. போர் காரணமாக எமது குடும்பம் இடம் பெயர்ந்து சென்று பல்வேறு இடர்களையும் எதிர்கொண்டது. இந்த நிலையில் எமக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. நிரந்தரமாக ஒரு வீடு எமக்குக் கிடைப்பது தொடர்பாக நாம் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் அந்த மகிழ்ச்சி அதிக காலம் நீடிக்கவில்லை. வீட்டுத் திட்டத்துக்கென எமக்கு வழங்கப்பட்ட ஐந்தரை லட்சம் ரூபா போதாத நிலையில் பலரிடமும் கடன் வாங்கி ஒப்பந்தத்தின் பிரகாரம் வீட்டைப் பூர்த்தி செய்தோம். எமது புதிய வீட்டிலும் குடியமர்ந்துள்ளோம்.

ஆனால் எமக்குக் கடன் வழங்கியவர்கள் எம்மை நெருக்கத் தொடங்கியுள்ளனர். நாம் இதுவரை எவரையும் ஏமாற்றவில்லை. வீட்டைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காகவே மற்றவர்களிடம் பணத்தைப் பெற்றோம். வங்கியில் கடனை வாங்கி வீட்டுக் கடனை அடைக்கலாமென்பது எமது எண்ணமாகும். பிணை நிற்பவர்களைத் தேடுவதிலும் காலம் கரைகின்றது. எமக்குத் தெரிந்த அரச உத்தியோகத்தர்கள் பிணை நிற்பதற்குப் பின்னடித்து வருகின்றனர். ஒரு சிலர் வங்கியில் பெற்ற கடனை ஒழுங்காகச் செலுத்தாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் எமது அவல நிலையைப் போக்குவதற்கு உதவி செய்தால் மிகவும் நன்றியுடைவர்களாக இருப்போம். போர் காரணமாக சகலதையும் இழந்து நிர்க்கதியான நிலையில் வாழும் நாம் இனியாவது ஓரளவு மகிழ்ச்சியுடன் வாழ விரும்புகின்றோம். இந்திய வீட்டை அமைத்து முடிப்பதற்குப் பெற்ற கடன் அதற்கு இடையூறாக விளங்குகின்றது.

உரியவர்கள் இந்த நிலையைப் போக்குவதற்கு உதவவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

*பொ.பாலசுப்பிரமணியம், தெல்லிப்பழை.*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## சரியான நேரத்தில் சரியான முடிவு

கூட்டமைப்பின் முடிவு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுவிட்டது. அதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை கூட்டமைப்பு ஆதரிக்கப் போகிறது. கூட்டமைப்பின் வழியே தமிழர்களும் என்று ஆனபடியால் அவர்களும் மைத்திரியை ஆதரிப் பது உறுதியாகிவிட்டது.

இந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வெளியிட்ட இந்த அறிவிப்பு சரியானதா? தமிழர்களின் எதிர்கால அரசியலுக்கு இது எந்த வகையிலான நன்மைகளைப் பயக்கும் என்பவை குறித்துக் கவனிக்க வேண்டும்.

இலங்கை வாழ் பெரும்பாலானவர்களுக்கு இப்போது அவசியம் தேவைப்படுவது ஆட்சிமாற்றமே. அதில் இன, மத பேதங்கள் கிடையா. எங்கும் ஆட்சிமாற்றக் கோஷங்கள் கேட்கத் தொடங்கியிருக்கின்றன. எனவே அரசியல் நீரோட்டத்துடன் இசைந்து ஓடியே எமக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பேரலையாகப் பாயும் பெரும்பான்மை அரசியலுக்கு எதிராக ஓடி எம்மால் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாது. அவர்களுடன் சேர்ந்து ஓடியே நாம் அடைய வேண்டிய இலக்குகளை அடைய முடியும் என்ற நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவர் இரா. சம்பந்தனும் எடுத்திருக்கும் முடிவு சரியானது. அத்துடன் சாலப் பொருத்தமானதும்கூட.

தேர்தலைப் புறக்கணிப்பது இன்னொரு அபாயத்தை தமிழர் தரப்புக்குத் தரக்கூடும். தேசிய அரசியலில் நாம் ஒருபோதும் ஒட்டிக் கொள்ளாதவர்கள் என்ற எண்ணம் சிங்களவர் மத்தியிலும், ஆட்சியாளர்கள் மத்தியிலும், இந்தத் தேர்தலை ஆதரிக்கும் மேற்கு நாடுகள் மத்தியிலும் எழுந்துவிடக்கூடும். இதன் பயனாக தமிழர்களையும், அவர்களின் பிரச்சினைகளையும் தள்ளி வைத்துவிட வாய்ப்பிருக்கிறது. எனவேதான் தாமதமானாலும், சரியான முடிவை கூட்டமைப்பு அறிவித்துள்ளது.


**இந்த ஆதரவு எவ்வகையான வாய்ப்புக்களைத் தமிழர்களுக்கு வழங்கும்?**

இலங்கையின் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் நீண்ட அனுபவமும், பக்குவமும் கொண்டு பழுத்தபழமாக இரா. சம்பந்தன் விளங்குகின்றார். அதுபோலவே அவருடன் 2009க்குப் பின்னரான ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொண்டவர்களும் பலமாக இருக்கின்றனர். இந்தத் தேர்தலில் கூட்டமைப்பு ஆதரிக்கத் தெரிவு செய்திருக்கும் அணியும் அவ்வாறானதே. இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து சரியான பார்வையைக் கொண்டிருக்கின்றனர். ஜனநாயக ரீதியில், சகல இனங்களும் அச்சமின்றி வாழக்கூடிய முறையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டும். அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர். எனவே இந்தக் கூட்டுக்கள் அனைத்தும் ஓரணிக்கு வந்து பணியாற்றத் தொடங்கினால், தமிழரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. அதனை இறுக்கமாகப் பிடித்து வெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழர்களுக்கே உரியது.

மைத்திரி வெற்றிபெற்றால் அமையப்போவது, இப்போது இருப்பதுபோல ஒரு தனி மனிதனின் ஆளுமைக்குட்பட்ட ஆட்சியல்ல. மாறாக நாட்டின் பல தலைவர்கள் இணைந்து மேற்கொள்ளப்போகும் ஆட்சி. அதில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இடம்பெற்றால் இனப் பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வைக் கொண்டு வரமுடியும். எனவே தான் கூட்டமைப்பின் இந்த முடிவு சரியானதாகத் தெரிகின்றது.

பத்தி எழுத்து

# சிறுவர்




## பூமாலையாகும் குரங்குகள்!



சில பூக்களைப் பார்த்துமே, நமக்கு ரொம்பப் பிடித்துவிடும். அவற்றின் அழகைப் பார்த்துப் பார்த்து இரசித்துக் கொண்டே இருப்போம் இல்லையா? அப்படிப் பலரும் ரசிக்கும் ஒரு பூ உள்ளது. அது என்ன பூ என்று தெரியுமா? 'மங்கி ஓர்கிட்'தான் அது. அதாவது, குரங்குப் பூ! இது மிகவும் வித்தியாசமான பூ. இந்தப் பூக்களைப் பார்த்தால் உடனே குரங்கு தான் ஞாபகத்துக்கு வரும். குரங்கின் முகம் போலவே பூ மலர்ந்திருக்கும். அதனால்தான் இந்தப் பூவுக்கு இந்தப் பெயர். தாவரங்களிலேயே 'ஓர்கிட்'தான் மிகப் பெரிய குடும்பம். இந்தக் குடும்பத்தில் மட்டும் சுமார் 26,000 இனங்கள் உள்ளன. ஓர்கிட் பூக்களின் சிறப்பே கண்கவர் வண்ணங்களிலும் விதவிதமான உருவங்களிலும் இருப்பதுதான். உலகின் பல இடங்களிலும் ஓர்கிட் இனங்கள் இருக்கின்றன. ஆனால், இந்த 'மங்கி ஓர்கிட்'எல்லா இடங்களிலும் இருப்பதில்லை. பெரு, ஈக்வடார் போன்ற தென்அமெரிக்க நாடுகளில் உள்ள காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன. லூயர் என்ற தாவரவியல் அறிஞர்தான் இதற்கு 'மங்கி ஓர்கிட்' என்ற பெயரைச் சூட்டினார். 'மங்கி ஓர்கிட்'களில் மட்டும் சுமார் 120 வகைகள் இருக்கின்றன. இளஞ்சிவப்பு, அடர் சிவப்பு, மஞ்சள் என்று வண்ணங்களால் வேறுபட்டாலும், உருவத்தில் குரங்கு போலவே இருக்கின்றன இந்தப் பூக்கள்.

## அறியாமையைப் பற்றி...

- ♦ அறியாமையைக் காட்டிலும் இழிவான அடிமைத்தனம் வேறு கிடையாது.– இங்கர்சால்.
- ♦ அறியாமையின் குழந்தையே பொல்லாங்கு – யாரோ.
- ♦ ஒரே நன்மை அறிவு; ஒரே தீமை அறியாமை. – சாக்ரடீஸ்.
- ♦ நமது அறிவு அனைத்தும் எம்மை எம்முடைய அறியாமைக்கு அருகில் கொண்டு செல்கிறது.– டி.எஸ். எலியட்.
- ♦ அறியாமையிலிருந்து அச்சம் பிறக்கிறது.– எமர்சன்.
- ♦ அறியாமையைப் போல் பெரு விரயம் ஒன்றுமில்லை. அறிவைப் போல் மலிவானதும் ஒன்றுமில்லை.– அஸ்டோஷ் முகர்ஜி.
- ♦ ஒவ்வொருவரும் வேறுபட்ட துறைகளில் அறிவற்றவர்களே.– வில் ரோகர்ஸ்.
- ♦ குறுகிய மனம் விரிவான அறிக்கை வெளிவிடும்.– பி.எப்.குக்.
- ♦ அறியாமை மனதின் இரவு. அந்த இரவில் நிலவுமில்லை, நட்சத்திரமுமில்லை.– கன்பூசியஸ்.
- ♦ வாழ்க்கையின் முக்கிய அங்கம் அறியாமை. நமக்கு எல்லாமே தெரிந்து விட்டால் ஒரு மணி நேரம் கூடத் தாக்குப்பிடித்து வாழ முடியாது.– டிரான்ஸ் அனட்டோலி.
- ♦ நிம்மதியான அறியாமையிலிருந்து நிரந்தரமான நாம் செய்யும் முயற்சிகளெல்லாம் இறுதியில் நமக்குத் துக்கத்தையே உருவாக்கித் தருகின்றன.– ரூஸோ.
- ♦ அறியாமையிலிருந்து வசதிகள் பெருகுகின்றன. அறிவாளிகள் அதிர்ஷ்டமில்லாதவர்கள்.– மாத்யூ பிரியர்.
- ♦ நமது அறிவு பெருகப் பெருக நமது அறியாமையின் அளவும் அதிகரித்துக் கொண்டே போகிறது. – ஜே.எப். கென்னடி.


**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கே.கே. எஸ். றோட், கொக்குவில் மேற்கில் முதலி கோயிலுக்கு அருகில் வீட்டுடன் ஒரு பரப்பும் 16.9 குழி காணியும் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 711 1400 (55350) (45.3.7)

**வீடு வாடகைக்கு**

இலுப்பையடிச் சந்திக்கும் அம்மன் சந்திக்கும் இடையில் சகலவசதி களும் கொண்ட வீடு வாடகைக் குண்டு. (வாகனத்தரிப்பிட வசதியுண்டு)

(55279) (12.3.7) தொடர்பு: 077 369 0333

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



இப்பொழுது காண்பிக்கப்படும்
ஆர்யா, ஹன்சிகா நடிப்பில்
25முதல்
மீகாமன்
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30
AC / DTS
தைப்பொங்கல் வெளியீடு
விக்ரம் நடிப்பில் ஐ

**சேவிஸ் வேலையாள் தேவை**

வாகன சேவிஸ் வேலை தெரிந்தவர்களும், பழகவிரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும்.

077 724 8424 (55396 (45.3.7)

**வீட்டுடன் காணி தேவை**

யாழ். பலாலி வீதியிலிருந்து உரும்பிராய், யாழ். பருத்தித்துறை வீதியிலிருந்து கல்வியங்காடு வரை உள்ள பிரதேசங்களில் 3 பரப்புக்குள் வீட்டுடன் காணி தேவை.

தொடர்பு: 0766695588 (55408) (10.7.3)

**உடன் தேவை**

புத்தூர் கிழக்கு, பகுதியில் அமைந்துள்ள கல் உடைக்கும் ஆலை ஒன்றுக்கு கணக்காளர் தேவை. அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 844 8775 (55350) (45.3.7)

**HND in Pharmacy**

- கவர்ச்சியான சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு
- பகுதி நேரமாகப் படிக்கலாம்
- வயதெல்லை கிடையாது
- மருந்தகங்களில் வேலை செய்பவர்கள் படிக்க வேண்டிய பாடநெறி
- பயிற்சியின் முடிவில் சான்றிதழும், வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்படும்.

LAVA HOSPITALS
120, Temple Road, Jaffna.
T.P: 077 316 4617 (55347) (10.7.3)

யாழ் நகரில்...



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

Leading to BSc (Hons) From UK

வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.

Why Choose BCAS for QS & Civil Engineering?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

இன்று மட்டும் ARPICO வருட இறுதி அமோக மலிவு விற்பனை Mangala

steal mirror cupboard
6x3 14,500/- 8,500/-
6x4 15,600/- 9,990/-
Office cupboard 14,500/- 8,000/-
3 door steal cupboard 19,600/- 14,900/-
Arpico Rolling Chair
XL 12,500/- 6250/-
L 10,500/- 4800/-
M 6,000/= 3000/-
DAMRO Piyestra Nilkamal Phoenix
போன்ற நிறுவனங்களின் அனைத்துத் தளபாடப் பொருள்களுக்கும் மூங்கில், மரம், உருக்கு, வெளிநாட்டுத் தளபாடங்கள் மின்சாதனப் பொருள்கள் அனைத்துக்கும் அமோக விலைக் குறைப்பு
Glass Dining Table set 24,900/- 14,900/-
New Table Mate 4,800/- 2,400/-
Iron Board 1,600/- 1000/-
Kitchen Rack SU - XL 2,000/- 1,500/- SMKR 2,800/- 2,000/-

10% ⇒ 50% தள்ளுபடி
முந்துங்கள்! கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!
Open 8 AM - 8 PM

மங்களா காட்சியறை
இல. 536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8366, 8367, 0777 286069

கல்வி

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகள்

*2014 ஆம் ஆண்டுகான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின. இதனடிப்படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பிவைக்கப்பட்ட சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு:-*

## சுன்னாகம் இராமநாதன் கல்லூரி

**கலைப் பிரிவு**

அ.சிந்துஜா – 3ஏ, வி.பிரவீனா – 3ஏ, ர.நிஷா – 2ஏ பி, வி.பிரஷா – 2ஏ பி, ஸ்ரீ.பிரியங்கா – 2ஏ பி, வி.சங்கமித்தா – 2ஏ பி, சி.பிரதீபா– 2ஏ பி, இ.சுஜிபா – 2ஏ சி, ம.கீர்த்தனா – 2ஏ சி, சி.தர்சிகா – 2ஏ சி, வி.லக்சியா – ஏ 2பி, சோ.விதுஷா – 2பி சி, சி.சுவீகா – 2பி சி, சி.தர்சிகா – 2பி சி, பா.பிரசாந்தி – 2பி எஸ், கா.கஜனிகா – ஏ சி எஸ், கு.துலக்சிகா – பி 2சி, இ.குணதீபா – பி 2சி, இ.சர்மிளா – பி 2சி, கு.பிறேமினி – பி 2சி.

## கொக்குவில் இந்துக் கல்லூரி

**கணிதப் பிரிவு**

யோ.லோஜீபன் – 3ஏ, உ.சுதர்சன் – 3ஏ, க.கிருஷிகா – 2ஏ பி, சூ.டிலோஜன் – 2ஏ பி, கு.மோசிகீரன் – 2ஏ பி, ரா.மோகனராஜ் – 3பி, ஸ்ரீ.சாருஜன் – ஏ பி சி, சி.திலக்ஷன் – 2ஏ எஸ், ஜெ.யதுராஜ் – 3பி, ஜெ.வினுாஷா – ஏ பி சி, ந.சிவகஜன் – 2பி சி, ம.பிரசாந்தன் – ஏ பி சி, ஸ்ரீ.கோகுலன் – 2பி சி, அ.அமலசீலி – 2பி சி, ப.மதீசன் – பி 2சி, ம.மிரோஷன் – 2பி சி, செ.அபிராமி – பி 2சி, க.கஜானன் – பி 2சி, சி.நிரோசன் – பி 2சி, த.சந்துஷன் – 3சி, கி.சஜீதன் – ஏ சி எஸ், கு.தர்சன் – 3சி, செ.லக்சிகா – பி சி எஸ், சி.மாதங்கி – பி 2எஸ், கு.நிமலன் – 3சி, த.தாரணி – 3சி, அ.தனுஷியன் – 2சி எஸ், ஸ்ரீ.துஸ்யந்தன் – 2சி எஸ்.

**உயிரியல் பிரிவு**

சீ.பிரணவன் – 2ஏ சி, க.ஜசிந்தா – 2ஏ பி, த.அனோயா – ஏ பி சி, கா.மகிதாமன் – ஏ பி சி, வி.தாட்சாஜினி – 2பி சி, இ.சாலுஜா – ஏ பி சி, லோ. வினிகா – 2பி சி, த.தபோஜனன் – பி 2சி, பா.பாலஜீவன் – பி 2சி, இ.ஹம்சன் – பி 2சி, ப.லம்போதரன் – 2பி சி, பி.பிருந்தாஜினி – 3சி, ஜெ.காயத்திரி – பி சி எஸ், பீ.சு. பிரியதர்சிஷினி – 3சி, ம.எழினி – பி சி எஸ், ம.கிறிஸ்ரீன் கஜானா – 3சி, சி.ஹஜானா – 3சி, ந.சிவகரன் – 2சி எஸ், க.நிர்த்திகா – 2சி எஸ்

**உயிரியல் பிரிவு - ஆங்கில மொழி மூலம்**

சு.சிவானுஜன் – பி 2சி, ம.போதநிதி – 2சி எஸ்

**வர்த்தகப் பிரிவு**

த.இளங்குமரன் – 3ஏ, நா. பிரசாத் – 3ஏ, வ.ரேணுகா – 3ஏ, த.தேனுஜா – 3ஏ, சி.ஈழவேந்தன் – ஏ 2பி, இ.குணேஸ் – ஏ 2பி, இ.நிவேதிகா – ஏ 2பி, பே.கௌசிகா – ஏ பி சி, சி.விரோஷன் – பி சி எஸ், கி.கீதாராணி – பி சி எஸ், இ.திவ்வியா – பி சி எஸ், தே.விதுயா – பி சி எஸ், செ.விக்னராஜலி – பி சி எஸ், தே.சத்யன் – பி 2சி, தே.சஜிகாந் – பி 2சி, ச.செந்தில்குமரன் – பி 2சி, மு.சுஜந்தன் – பி 2சி, ச.கல்பனா – பி 2சி, ம.பவித்ரா – பி 2சி, து.சுபாஜினி – பி 2சி, க.சுகந்தினி – பி 2சி, ஸ்ரீ.செந்தூரன் – பி 2சி, ந.பிரசாந்தினி – பி 2சி, அ.அரவிந்தன் – ஏ 2சி, ச.குகப்பிரியன் – 3சி, ஸ்ரீ.நிதூஷன் – 3சி, ம.அச்சுதன் – 3சி, பா.சுபாங்கி – 3சி, இ.ரமணன் – 3சி, ச.சஜந்தன் – 3சி, ஸ்ரீ.கனிஸ்ரா – 3சி, ச.தர்சிகா – 3சி, சே.வேணுகா – 3சி, ற.சந்தோசினி – 2பி சி, ந.சிந்துஜா – 2பி சி, வ.சொரூபிகா – 2பி சி, தி.சுதர்சினி – 2பி சி, ந.கஜீபன் – 2பி சி, ர.தாராசுதா – 2ஏ சி, இ.வியாசகன் – 2ஏ பி, கு.மதுஷா – 2ஏ பி.

**கலைப்பிரிவு**

அ.தர்சிகரூபன் – 3ஏ, செ.ஜசீதா – 3ஏ, ப.சுகன்யா – 3ஏ, ம.தயானி – 3ஏ, சு.சஜீபன் – ஏ பி சி, கோ.டனிஸ்ரன் – 2ஏ பி, த.கோஜிதா – 2ஏ பி, ஜெ.மதுசிகன் – 2ஏ பி, சி.திசாளினி – 2ஏ பி, ஜெ.ஜசிந்தா – 2ஏ பி, கு.சங்கீதா – 2ஏ பி – சி.கார்த்திகாயினி – 2ஏ பி, கு.ஹஜானனன் – ஏ 2பி, சி.கௌதமன் – 3பி, வ.பவிதாரிணி – 2ஏ பி, அ.வினோஜினி – ஏ 2பி, நி.நிதர்ஷினி – 2ஏ பி, வி.விதுஷா – 3பி, சா.மிதுசலா – ஏ பி சி, வி.கனிஸ்ரா – ஏ பி சி, நா.சுபாங்கி – ஏ 2சி, க.ஜனனி – ஏ பி சி, கௌ.சாரங்கி – 3பி, சி.ஜிந்துஜா – 3பி, த.சுபீஜா – ஏ பி சி, ஐ.அருள்நந்தி – 2பி சி, உ.விபூசணா – ஏ 2சி, ம.கல்யாணி – பி 2சி, ஸ்ரீ.தயானி – ஏ பி சி, வ.சோபிசா – ஏ பி சி, க.அமல்ராஜ் – 2பி சி, ஸ்ரீ.கீர்த்தனா – 2பி சி, க.விசாளினி – ஏ பி எஸ், கு.சங்கீரணி – ஏ பி சி, ச.பவன் – பி 2சி, லோ.துர்க்கா – ஏ சி எஸ், இ.பிரதீபன் – பி சி எஸ், ந.நிலானி – பி 2சி, ச.சதுாசன் – பி சி எஸ், கு.கோபிகா – பி 2சி.

## மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**உயிரியல் பிரிவு**

இ.தேனுசன் – 3ஏ, அ.கீர்த்திகா – ஏ 2சி, தே.ஆதிரை – ஏ பி எஸ், க.புஸ்பவேணி – பி 2சி, நா.தனுசிகா – ஏ பி சி

**கலைப்பிரிவு**

சோ.வினுயா – 3ஏ, தே.துவாரகா – 2ஏ பி, சு.துசானி, 2ஏ சி, சி.சோபிதா– ஏ பி சி, ந.நிமலினி – ஏ பி சி, சு.சர்மிலா – ஏ பி சி, க.தர்மிகா – 3பி, ந.நிதர்சனா – 3பி, ம.அனுசா – 2பி சி.

## கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

**கலைப்பிரிவு**

ப.சனித்திகா – 3ஏ, ப.கலைவாணி – ஏ 2பி, செ.பவித்திரா – 2ஏ பி, பி.சசிகலா – ஏ 2பி, க.வத்சலா – ஏ பி சி, தி.அயஸ்னா – ஏ பி சி, ச.தயாளினி – ஏ பி சி, பி.மரியசீனா – ஏ பி சி, கிருஸ்ரினா – 3பி

**வர்த்தகப் பிரிவு**

ஜெனுசன் – 3ஏ, யோ.தனேஸ் – 3பி, சிறி.அகில்ராஜ் – 3பி

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

**கணித, உயிரியல் பிரிவு**

அமிர்தலிங்கம் நிதுர்சன் – ஏ 2பி, புவிராஜ் பானுசன் – பி 2சி, சிவபாதம் தனுசன் –பி 2எஸ், தேவராஜா பவரூபன் – 3சி, ஜெகநாதன் தனுஜன் – சி 2எஸ், துரைராசா துவாரகன்–சி2எஸ், நடேசன்டெனிஸ்–ஏ2பி, எழிற்செல்வன் துவாரகன் – 3சி, சத்தியமூர்த்தி நித்திலன் – சி 2எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

ராமச்சந்திரன் சரத்பாபு – 2ஏ பி, அன்ரன்சேவியர் சம்சன் – 2பி சி, மதிவ்ரஞ்சன் அனராஜ் – பி 2சி, சிறிகாந்தன் சிறிபாலரசாத் – பி 2சி

**கலைப் பிரிவு**

குழந்தைவேலு சசிதரன் – 2ஏ சி, தவலிங்கம் தர்சிகன் – 2ஏ சி, தங்கமதன் துஜீவன் – ஏ பி சி, புலேந்திரன் பிரியதர்சன்– ஏ பி சி, அம்பிகைபாலன் தேனுஜன் – 3பி, பாலசுப்பிரமணியம் வினோத் – 2பி சி, இலங்கேஸ்வரன் லக்ஸ்மன் – 2 பி எஸ், சிவசுப்பிரமணியம் துருஸன் – 2பி எஸ்

## நாவற்குழி ம.வி.

**வர்த்தகப் பிரிவு**

சி.புஷ்பரூபன் – 3ஏ

சி.சஞ்சீபன் – 3பி

கோ.அரவிந்தன் – பி 2சி

## மன்னார் அல்-அஸ்ஹார் ம. வித்தி.

**கணிதப் பிரிவு**

எம்.அப்துல்லா–3 பி

**வர்த்தகப் பிரிவு**

ஜெ.ஜபாஸ்–3 ஏ

## நானாட்டான் ம. வித்தி.

**கலைப் பிரிவு**

ஆன் டிலக்ஷி – 3ஏ

**உயிரியல் பிரிவு**

ஜோன் வெஸ்லி – பி 2சி

**கணிதப்பிரிவு**

எஸ்.நவநீதன் – சி 2எஸ்

**வர்த்தகப்பிரிவு**

ம.அலன் – ஏ 2சி

## எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய ம.வி.

**உயிரியல் பிரிவு**

எம்.முபாஷா – ஏ 2பி

**கணிதப் பிரிவு**

அப்துல்ரகுமான் – பி 2சி, ஜ.எஸ்.சித்தி மிசிராபாத் – ஏ பி சி

**வர்த்தகப் பிரிவு**

ஜெ.எம்.ஜஸிர் – ஏ பி சி

## சன்மார்க்க மகா வித்தியாலயம்

**கலைப் பிரிவு**

ஐ.சோபிகா – 2ஏ பி, பேபி சகிலா – 2ஏ பி, து.தர்சலா – சி 2எஸ்.

## முல்லைத்தீவு ம.வி.

**கலைப்பிரிவு** – நிசாந்தி – 3ஏ

**வர்த்தகப் பிரிவு** – ச.வேணுஜா – 3ஏ

**கணிதப் பிரிவு** – அ.விதுர்ஷன் – பி 2சி

**உயிரியல் பிரிவு** – செ.மதன்ராஜ் – 2பி சி

## புதுக்குடியிருப்பு ம.வி.

**கலைப்பிரிவு** – ஜெயவதனி – 2ஏ பி

**வர்த்தகப் பிரிவு** – பா.விஜயப்பிரகாஷ் – 3ஏ

**கணிதப் பிரிவு** – செ.பிரணவன் – 2ஏ சி

**உயிரியல்பிரிவு** – சி.அபிஷாளினி – 2பி சி

## விஸ்வமடு பாரதி வித்தியாலயம்

**கலைப்பிரிவு** – வேயிதன் – 2ஏ சி



## திருவெம்பாவை


மாலறியா நான் முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன் வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலமிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

### பொருள் விளக்கம்:

"அடி தோழி! மணம் பொருந்திய கூந்தலையுடையவளே! சிவபெருமானோ எல்லையில்லாத அருள் மலை. அந்த அருளான பெருமலையை பிரமாவும் விஷ்ணுவும் காண முடியவில்லை. அப்பேர்ப்பட்ட அந்த அருள் மலையை நாம் அறிந்துவிட முடியும் என்பது போல மற்றவர்கள் நம்பும்படியான பொய்யைப் பாலும் தேனும் ஒழுகப் பேசிய திருவாயையுடைய வஞ்சகப் பெண்ணே! நீ உடனே வந்து வாசற் கதவைத் திற! எல்லாம் வல்ல சிவபெருமான் மண்ணுலகத்தவராலும் விண்ணுலகத்தவராலும் வேறு பிறராலும் காண முடியாதவர். அவருடைய திருக்கோலத்தையும் எளியவர் களாகிய எம்மை ஆட்கொண்டு அருளிச் செய்கின்ற பெருங்குணத்தையும் நாங்கள் பாடுகின்றோம். "சிவனே! சிவனே!" என்று உரத்த குரலில் பாடுகின்றோம். இந்தச் சத்தம் கேட்டும் நீ உணர்கின்றாயில்லையே! கண்விழித்து ஓடி வருகிறாயில்லையே! இது தான் நீ இறைவன் மீது காட்டுகின்ற பக்தியா? நீ சிவனை வணங்கு எல்லாம் கிடைக்கும் என்பதாம்.

இராசையா ஸ்ரீதரன்

# தொழில்நுட்பம்





## கூகுள் மேப்பில் புதிய வசதி

கூகுள் நிறுவனத்தின் பல்வேறு சேவைகளுள் கூகுள் மேப் சேவையும் பிரபல்யம் வாய்ந்ததாகும். சாதாரண பயணிகளுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் வழிகாட்டியாகத் திகழும் இந்தச் சேவையில் தற்போது Highway Lange Guidance எனும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள நெடுஞ்சாலைகளை இலகுவாக இனங்காண முடியும். இந்தச் சேவையானது முதன் முதலாக ஜேர்மனி, பிரான்ஸ்,இத்தாலி; ஸ்பெயின் ஐக்கிய இராச்சியம் மற்றும் அயர்லாந்து (Germany, France. Italy, Spain, UK மற்றும் Ireland) ஆகிய நாடுகள் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எனினும் விரைவில் ஏனைய நாடுகளுக்கும் இந்தச் சேவை பரவலாக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கைகளை அலங்கரிக்கும் எலக்ட்ரோனிக் பிரேஸ்லெட்

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு நாளும் புதுப்புது தொழில்நுட்பங்கள் அறிமுகமாகி வருகின்றன.
அந்த வகையில் சிக்ரெட்(cicret) என்னும் பரிஸ் நிறுவனம் சமீபத்தில் எலக்ட்ரோனிக் பிரேஸ்லெட்டை அறிமுகப்படுத்தியது. இந்தப் பிரேஸ்லெட்டை அணிந்து கொள்வதன் மூலம் உங்கள் கையையும் டச் ஸ்க்ரீனாக மாற்றலாம். இதனை உங்கள் மொபைல் அல்லது டேப்லெட்டுடன் இணைப்பதன் மூலம் உங்கள் கையிலுள்ள இந்தப் பிரேஸ்லெட் மொபைல் மற்றும் டேப்லெட்டின் திரையை ப்ரொஜெக்டர் மூலம் உங்கள் கையில் ப்ரொஜெக்ட் செய்து காண்பிக்கிறது.
இதன் மூலமாக மெயில் செக் பண்ணலாம். கேம்ஸ் விளையாடலாம். அழைப்பை ஏற்கலாம். புத்தகம் படிக்கலாம். வெளியாகும் இந்த



பிரேஸ்லெட்டின் புரோமோ வீடியோ வெளியாகி லட்சக்கணக்கான நபர்களை கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறது.




## செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் பேஸ்புக்

சமூகவலைத்தளங்களில் அசைக்க முடியாத ஜாம்பவானாகத் திகழும் பேஸ்புக்கில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் புகுத்தப்படவுள்ளது.
தற்போது பேஸ்புக் வலைத்தளத்தைப் பயன்படுத்துபவர்கள் நாகரிகமற்ற பதிவுகள், படங்களை பதிவேற்றம் செய்வதால் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் எழுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காகவே செயற்கைநுண்ணறிவு தொழில்நுட்பம் உட்புகுத்தப்படவுள்ளது.
இது மது அருந்தியவர்கள், சுய நினைவில் இல்லாதவர்கள் அநாகரிகமாக தகவல்களை தரவேற்றம் செய்வதைத் தடுக்கும். தற்போது ஆய்வு நிலையில் இருக்கும் இந்தத் தொழில்நுட்பம் விரைவில் பேஸ்புக்கில் அறிமுகப்படுத்தப்படும்.

### கால நீடிப்பு

**முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2015**

10.12.2014 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் 11ஆம் பக்க விளம்பரத்தின்படி பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் வழங்கும் திகதி 31.12.2014 ஆம் திகதியிலிருந்து 09.01.2015 ஆம் திகதி வரை நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. விருப்பமுடைய வழங்குநர்கள் இக் காலப்பகுதிக்குள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000 இனை பணமாகச் செலுத்தி மாவட்ட செயலகம், கணக்குக் கிளையில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்வதுடன், 15.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட செயலகம், கணக்குக் கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

நா. வேதநாயகன்
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
முல்லைத்தீவு.

(C/18608)
(10.7.3)

### நானாவித அறிவித்தல்கள்
### யாழ்ப்பாண மாநகரசபை
### 2015ஆம் ஆண்டுக்கான ஆதனவரி

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 252ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் யாழ்ப்பாண மாநகரசபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

01. மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 238ஆம், 247ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2013ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீடுகளின்படியான ஆதன மதிப்பீட்டையே 2015ஆம் ஆண்டுக்கான ஆதனவரி மதிப்பீடாக நடைமுறைப் படுத்தப்படும்.

02. 2015ஆம் ஆண்டிற்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாயத் தவணைகளில் 2015ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31ஆகிய திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

03. 2015ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீதவரிகள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10வீத வரிக்கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்துக்குரிய முதல் மாதத்திற்குள்ளாகக் கந்தாய வரி செலுத்தப்பட்டால் 5வீத கழிவும் அனுமதிக்கப்படும்.

04. மேற்குறிப்பிட்ட பந்தி 3இல் குறிப்பிட்ட உரிய திகதிகளிற்கு முன்பு குறித்த வீதவரிகளைச் செலுத்தப்படாதவிடத்து வெறும் காணிகளில் மற்றும் வதிவிடங்கள் மீது 15வீதத்திலும் ஏனைய இடங்களின் மீது 20 வீதத்திலும் விறாந்துச் செலவு அறவிடப்படும்.

05. 2015ஆம் ஆண்டுக்கான ஆதன வரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகர ஆதனவரிப்பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதனவிவரங்களைத் தெரிவித்து 2015ஆம் ஆண்டுக்கான ஆதன வரிகளைச் செலுத்த முடியும் என்பதோடு மேற்குறித்த சலுகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

செ.பிரணவநாதன்.
ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
26.12.2014

(இ18472)
(12.7)

### துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்
### கேள்வி அறிவித்தல் - 2014

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைக்கு இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 31.12.2014 தொடக்கம் 06.01.2015 பி.ப 2.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 06.01.2015 பி.ப 2.30 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 06.01.2015 பி.ப 2.30 மணி

கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **"தவிசாளர், துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்"** எனும் முகவரிக்கும் இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு"** எனும் முகவரிக்கும் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் **06.01.2015** ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்லியனில்.) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| CN/NP/MU/TUPS/W/09 | மல்லாவிச் சந்தைக் கடைத் தொகுதி வர்ணம் பூசுதல் | 1.22 | 3 மாதம் | $C_9$அல்லது அதற்கு மேற்பட்டது | 13,000.00 | 1000.00 |

**தவிசாளர்**
**துணுக்காய் பிரதேசசபை**
**துணுக்காய்.**

(C18602)(12.5.7)

# உலகச் செய்திகள்

## தி இண்டர்வியூ திரைப்படம் வருமானத்தில் சாதனை

சொனி நிறுவனம் தயாரித்து சர்வதேச அளவில் சர்ச்சையில் சிக்கி தாமதமாக வெளியிடப்பட்ட தி இண்டர்வியூ திரைப்படம் மூன்றேநாள்களில் இணையத்தில் மட்டும் ஒரு கோடியே ஐம்பதுலட்சம்அமெரிக்கடொலர் வருமானத்தை அள்ளிக் குவித்திருக்கிறது.

இந்த மூன்று நாள்களில் இருபது லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இந்தத் திரைப்படத்தை இணையத்தில் தரவிறக்கம் செய்திருக்கிறார்கள்.

இதன்மூலம் சொனி நிறுவனம் இதுவரை இணையத்தில் வெளியிட்ட திரைப்படங்களிலேயே அதிக அளவு வருமானத்தை ஈட்டிய திரைப்படம் என்கிற பெருமையை தி இண்டர்வியூ திரைப்படம் பெற்றிருக்கிறது. (ஒ–ரி)

## நிலம் கையகப்படுத்தலை எளிமையாக்க அவசர சட்டம்

சென்னை, டிசெ. 31

நிலம் கையகப்படுத்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு அதனை எளிமையாக்க இந்திய மத்திய அரசு நேற்று முன்தினம் அவசர சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

இதன் மூலம் எரிசக்தி, வீட்டு வசதித் திட்டம், பாதுகாப்புத் துறை என்பவற்றுக்கு நிலம் கையகப்படுத்துவதில் உள்ள தடைகள் பெருமளவில் குறைவடையும் என தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)

# சிரியாவில் 6 மாதங்களில் 2,000 பேரை கொன்ற ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள்

டமஸ்கஸ், டிசெ. 31

சிரியாவில் 2,000க்கும் மேற்பட்டோரை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கொலை செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கியஐ.எஸ்.ஐ.எஸ்தொடர்ந்து அந்தப் பகுதிகளில் பல அட்டூழியங்களைப் புரிந்து வருகிறது.

இந்த நிலையில் தீவிரவாதிகளால் கடந்த 6 மாதங்களில் மட்டும் 2,000க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பிரிட்டன் மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியான அறிக்கையில், கடந்த 6 மாதங்களில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர், 1,175 பொதுமக்களைக் கொலை செய்துள்ளனர்.

இதில் 8 பெண்களும், 4 குழந்தைகளும் அடங்குவர். கொல்லப்பட்டவர்களில் 930 பேர் ஷியா முஸ்லிம்களாவார்.

தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இஸ்லாமியச் சட்டத்தை மீறியவர்களுக்கு, பொது இடத்தில் தலையைத் துண்டித்துக் கொலைசெய்தல், கல்லால்அடித்துக் கொலை செய்தல் போன்ற தண்டனைகளை ஐ.எஸ். தீவிரவாதிகள்வழங்கியுள்ளனர். மேலும் தம்மிடம் பிடிபட்ட எதிரி நாட்டு இராணுவத்தினர், சமூகஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரை சுட்டுக்கொன்றும், தலையைத் துண்டித்தும் படுகொலை செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)




## பா.ஜ.க தேசியத் தலைவர் அமித் ஷா வழக்கிலிருந்து விடுவிப்பு

இந்தியாவின் காந்திநகரில் நடைபெற்றசெராபுதீன் கொலை வழக்கிலிருந்து பா.ஜ.க தேசியத் தலைவர் அமித் ஷா விடுவிக்கப்பட்டுள்ளார்.

லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புள்ளவராகக் கருதப்படும் சொராபுதீன் ஷேக், அவரது மனைவி காசர்பீ ஆகியோர் குஜராத்தின் பயங்கரவாத எதிர்ப்பு படையினரால் கடந்த 2005 நவம்பரில் கடத்திச் செல்லப்பட்டு, காந்திநகர் அருகே கொல்லப்பட்டனர்.

அதனை நேரில் கண்டவர் துளசிராம் பிரஜாபதிஎன்பவராவார். எனவே இவரும் குஜராத் பொலிஸாரால் 2006 டிசம்பரில் கொல்லப்பட்டதாக சி.பி.ஐ குற்றம் சுமத்தியிருந்தது.

மேலும், இந்த 2 சம்பவங்கள் தொடர்பான சதி ஆலோசனையில் முன்னைய குஜராத் உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்குத் தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில் அவர் மீதான குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி மும்பை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் அவரை விடுவித்துள்ளது. (ஒ–ரி)



செவ்வாய்க் கிரகத்தில் சவப்பெட்டி இருப்பதாக ஏலியன் ஆய்வாளர்கள் கண்டுப்பிடித்துள்ளனர். செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்து கொண்டிருந்த அமெரிக்காவின் க்யூரியாசிட்டி விண்கலம் அனுப் பிய படங்களை வில்பார்ரர் என்ற ஆய்வாளர் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வின் முடிவில் செவ்வாய்க் கிரகத்தில் சவப்பெட்டி இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்த மர்மமான பெட்டிக்குள் ஏலியன் எனப்படும் வேற்றுக் கிரகவாசிகளின் சாம்பல் இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஓய்வு பெறுகிறார் இஸ்ரோவின் தலைவர்

சென்னை, டிசெ. 31

சந்திரயான், மங்கள்யான் ஆகியவற்றின் சாதனைகளுக்குச் சொந்தக்காரரான இஸ்ரோவின்தலைவர் கே.ராதா கிருஷ்ணன் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து அடுத்த தலைவரை நியமிப்பதற்கானபணிகள் ஆரம்பித்துள்ளன.



இதற்கிடையே இஸ்ரோவில் அனுபவமும் தகுதியும் வாய்ந்த விஞ்ஞானிகள் இருக்கும்போதே தகுதி அல்லாத விஞ்ஞானிகளை நியமிப்பதற்கான காய்நகர்த்தல்கள் நடப்பதாக மூத்த விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். எனினும் ஒழுங்கான முறையில் தெரிவு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)

# மாயமான எயார் ஏசியா விமானத்தின் பாகங்களுடன் சடலங்களும் கண்டுபிடிப்பு

ஜகார்த்தா, டிசெ. 31

இந்தோனேசியாவில் உள்ள சுரபயா நகரிலிருந்து 155 பயணிகள் மற்றும் 7 விமான பணியாளர்களுடன் சிங்கப்பூருக்கு புறப்பட்டுச்சென்ற எயார் ஏசியா விமானம் நேற்று முன்தினம் காணாமற்போனது. விமானம் மாயமான ஜாவா கடற்பகுதியில் 8 நாடுகளின் உதவியுடன் கப்பல்கள், விமானங்கள் மற்றும் மீன்பிடிப் படகுகள் மூலம் தேடுதல் வேட்டை நடந்து வந்த நிலையில், அந்த விமானத்தின் பாகங்கள் என சந்தேகிக்கப்படும் 10 பொருள்கள் கடலில் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் மிகப்பெரிய பாகம் விமானத்தின் கதவாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது அங்கு ஏராளமான சடலங்களும் மிதப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் எயார்ஏசியாநிறுவனத்தின்பயணிகள் விமானம் காணாமற்போனதற்குத் தவறான திட்டமிடலே காரணம் என்று ஆஸ்திரேலிய விமானப் போக்குவரத்து வல்லுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.




எல்லோராலும் ஆபத்தானது என்று நன்கு அறியப்பட்ட ஜாவா கடற்பகுதியின் மேலாக விமானம் பறந்ததே விபத்துக்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலிய விமானப் போக்குவரத்து வல்லுநர் நீல் ஹேன்ஸ்போர்ட் இந்த விபத்துக் குறித்துத் தெரிவிக்கையில்; ஜாவா கடலின் மேற்பகுதி மூத்த விமானிகளால் இடி, மழையின் தொழிற்சாலை என்று அழைக்கப்படும் ஆபத்தான பகுதியாகும். அவர்களால் தவிர்க்கப்பட்ட அந்தக் குறிப்பிட்ட பாதையில் விமானம் பயணித்ததே விபத்துக்கு காரணம்.

விமானத்தில் பணிபுரிந்த இந்தோனேஷிய தலைமை விமானியோ பிரெஞ்சு முதல் நிலை அதிகாரியோ இந்த ஆபத்தான பயணத் திட்டத்திற்குக் காரணமாயிருக்கலாம் என்றும் தெரிவித்தார். (ஒ–ரி)



## பிரிட்டனில் 7,000 கட்டடங்கள் கடல் அரிப்பினால் அழிந்து விடும் ஆபத்து

லண்டன், டிசெ.31

கடல் நீர்மட்டம் அதிகரிப்பால் பிரிட்டனின் கடற்கரைப் பகுதிகளில் உள்ள வீடுகள் உட்பட 7,000 கட்டடங்கள் வரை கடல் அரிப்பினால் அழிந்து விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் ஆய்வுஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அடுத்த 20 ஆண்டுகளில் 800 கட்டடங்களை கடல் நீர் மூழ்கடித்து விடும் என்றும் அந்த ஆய்வில் எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டில் மட்டும் பில்லியன் பவுண்ஸ்கள் மதிப்புள்ள சொத்துக்களை கடலின் ராட்சத அலைகள் அழித்து விடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் யார்க்ஷயர் முதல் கெண்ட் வரையிலுள்ள கடற்கரைப் பகுதிகளை மிகப்பெரிய ராட்சத அலைகள் தாக்கியதில் 1,400 வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. மேலும் பல வீடுகள் கடல் நீரால் இழுத்துச் செல்லப்பட்டன. இதனையடுத்து இந்த நிலை மேலும் நீடிக்கும் என்று கூறப்படுகிறது.

கார்ன்வால் கடல்பகுதியில் அடுத்த 20 ஆண்டுகளில் 76 வீடுகள் கடல் நீருக்குள் மூழ்கும் என்றும், கடந்த 50 ஆண்டுகளில் கார்ன்வாலில் மட்டும் 132 வீடுகள் கடல் நீரினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. (ஒ–ரி)



அபுதாபி யாஸ் தீவுப் பகுதியில் 86000 சதுர மீற்றரில் பெராரி வேல்ட் என்றழைக்கப்படும் வாகன் விளையாட்டுக் கேளிக்கைப் பூங்கா அமைந்துள்ளது. உலகின் மிகப்பெரிய உள்ளரங்க பூங்காக்களில் ஒன்றாக விளங்கும் இந்தப் பூங்கா சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளது.

# ஈரானிய இராணுவ அதிகாரி படுகொலை

## படைத் தளத்துக்குள் புகுந்து ஐ.எஸ்.தீவிரவாதிகள் சூடு

றெஹ்ரான், டிசெ.31

ஈராக்கில் இராணுவ வீரர்களுக்குப் பயிற்சியளிக்கச் சென்ற ஈரானிய இராணுவ அதிகாரியை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றித் தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

தீவிரவாதிகளை எதிர்க்கும் நோக்கில் அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப் படைகளும் ஈரான் நாடும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் பாக்தாத்துக்கு அருகே ஈராக் இராணுவத் தளத்தில் வீரர்களுக்கு நேற்று முன்தினம் காலை ஈரானிய இராணுவப் பிரிகேடியர் ஹமீது பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார்.



அந்தவேளையில் இராணுவத் தளத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஹமீதை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதனையடுத்து ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு இவரது ஜனாஸா கொண்டு வரப்பட்டு நேற்றுக் காலை இராணுவ மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெற்றுள்ளன. (ஓ–ரி)

## செவ்வாய்க்குச் செல்ல புதிய மாற்று முறை



செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்ல புதிய மாற்று முறை ஒன்றை நாஸா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தற்போது செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்லும் பாதை நீண்ட தூரம் கொண்டதாகவுள்ளது. இதற்காக பல ஆயிரம் கோடிகளை செலவிடுவதுடன், அங்கு சென்று இறங்குவது என்பதும் சற்று சிக்கலான விடயமாக உள்ளது. இதற்கு தீர்வு காணும் நோக்கில் பாலிஸ்டிக் கப்சர் என்ற புதிய முறையை நாசா விஞ்ஞானிகள் கையாளவுள்ளனர். அதன் மூலம் குறைந்த அளவிலான எரிபொருளை பயன்படுத்தியும், செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்க முடியும். இதுகுறித்து விஞ்ஞானிகள் கூறுகையில்; இதன் மூலம் எதிர்காலத்தில் செவ்வாய்க்கிரகத்துக்கு ரோபோக்கள், மனிதர்களை அனுப்புவது மட்டுமன்றி மனிதர்களை செவ்வாயில் குடியேற்றவும் செய்ய முடியும் என்று, தெரிவித்துள்ளனர். (ஓ–ரி)




## சீனா கூகுளின் சேவைகளுக்கு தடை

கூகுள் நிறுவனத்தின் மிகவும் பிரபலமான மின்னஞ்சல் சேவையான 'ஜி–மெயிலை' பயன்படுத்துவதற்கு எஞ்சியிருந்த அனைத்து வழிகளையும் சீனா தடை செய்துள்ளதாக கணினி வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் கூகுளின் சேவைகள் முற்றாக தடுக்கப்பட்டுள்ளதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

மூன்றாம் தரப்பு மூலமாக அங்கு ஜி–மெயில் உபயோகப்படுத்தப்பட்டு வந்த வேளையில், அதைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்தார்கள் என்று கூறப்படும் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சீனாவில் 'ஜி – மெயிலின்' பயன்பாடு முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)

# நேட்டோ படைகள் திரும்பப் பெறப்பட்டன ஆப்கனில் 13 ஆண்டு கால போர் முடிவு

காபூல், டிசெ. 29

ஆப்கானிஸ்தானில் 13 ஆண்டுகளாக போர் நடைபெற்ற நிலையில் நேட்டோ படைகளை அந்த நாட்டிலிருந்து வெளியேறுமாறு ஆப்கானிஸ்தான் அரசு கேட்டுக்கொண்டதற்கமைய நேட்டோ படைகள் திரும்பிச் சென்றுள்ளன. ஆப்கானிஸ்தானிலிருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் படைகள் திரும்பப் பெறப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் தங்கள் படைகளை படிப்படியாக திரும்பப் பெற்று வந்தன. தற்போது முற்றிலுமாக வெளியேறியுள்ளன.

அதனைத் தொடர்ந்து தலிபான் தீவிரவாதிகளுடன் நடைபெற்ற 13 ஆண்டுகால போர் முடிவடைந்துள்ளது. படைகள் திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து தலைநகர் காபூலில் சிறிய அளவில் விழா நடைபெற்றுள்ளது.



அந்த நிகழ்வில் நேட்டோ தளபதியும் அமெரிக்க தளபதியுமான ஜோன் கேம்பல் வீரர்கள் மத்தியில் உரையாற்றினார். அங்கு அவர் தெரிவிக்கையில்; ஆப்கானிஸ்தான் மக்களை நாம் இருட்டில் இருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தோம். அவர்களுக்கு எதிர்கால நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறோம். எமது நாடுகளின் பாதுகாப்புக்காக ஆப்கானிஸ்தானை வலிமையுள்ளதாக மாற்றியிருக்கிறீர்கள் என்று தெரிவித்தார். (ஓ–ரி)

## கிரேக்கத்தில் புதிய அதிபரை தெரிவு செய்யும் முயற்சி தோல்வி

எதென்ஸ், டிசெ. 31

கிரேக்கத்தில் புதிய அதிபரைத் தெரிவு செய்யும் முயற்சி தோல்வியடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடைபெற்று முடிந்த இந்தத் தேர்தலில், நாடாளுமன்ற உறுப்பினர்களால் அதிபராக ஒருவரைத் தெரிவு செய்ய முடியாமல் போனதைத் தொடர்ந்து, நாட்டில் புதிய இடைத் தேர்தல் ஜனவரி 25ஆம் திகதி நடைபெறும் என பிரதமர் அண்டனிஸ் சமராஸ் அறிவித்துள்ளார். நாட்டின் அதிபராகத் தெரிவு செய்யப்படுவதற்கு ஒரு வேட்பாளர் நாடாளுமன்றத்தில் 180 வாக்குகளைப் பெற வேண்டும். எனினும் அதிபர் தேர்தலுக்கு போட்டியிட்ட ஒரே வேட்பாளரான ஸ்ட்ராவோஸ் டிமாஸால் அந்த அளவுக்கு வாக்குகளைப் பெற முடியவில்லை

இடைத்தேர்தல் நடைபெற்று முடிவு தெரியும் வரை, கிரேக்கத்தை கடுமையான நிதி நெருக்கடியிலிருந்து மீட்கச் சர்வதேசச் சமூகம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் பாதிப்படையக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச சமூகத்தின் உதவிகள் இருந்தால் மட்டுமே, கிரேக்கம் தனது கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியும், உள்நாட்டிலும் ஊதியம் வழங்குவது உட்பட பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அதேவேளை– கிரேக்கத்தில் பங்குச் சந்தைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)

# கமெரூனில் தீவிரவாதிகள் அதிரடி; 5 நகரங்களைக் கைப்பற்றினர்

யாண்டே, டிசெ.31

கமெரூனில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் அந்த நாட்டிலுள்ள 5 நகரங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். கமெரூனில் தீவிரவாதிகள் தொடர்ந்தும் நாச வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அங்குள்ள குழந்தைகளைக் கடத்திச்சென்று அவர்களுக்கு தீவிரவாதப் பயிற்சி அளித்து வருகிறார்கள். இதனையடுத்து கமெரூன் இராணுவம் தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. கடந்த 2 நாள்களுக்கு முன்பு டோபிள் பகுதியில் கமெரூன் நாட்டு இராணுவத்தினர் அதிரடித் தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளைக் கொன்று குவித்தனர். அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் போகோ ஹரம் தீவிரவாதிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் கமெரூன் நாட்டின் வடக்கு பகுதியில் தாக்குதலை மேற்கொண்டனர். கமெருன் இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி, இராணுவ முகாமைக் கைப்பற்றியுள்ளனர். மேலும், கமெரூன் நாட்டில் உள்ள 5 நகரங்களையும் தீவிரவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். (ஓ–ரி)



# பல்சுவை

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 500 | 250 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 350 | 300 | 340 |
| கணவாய் | 450 | 600 | 600 | 500 | – |
| பாரை | 550 | 600 | 700 | 500 | 360 |
| சுறா | 600 | 500 | 750 | 800 | – |
| சீலா | 250 | 450 | 500 | 600 | – |
| விளை | 550 | 450 | 500 | 500 | 300 |
| முரல் | 300 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 350 | 600 | 270 |
| கிழாக்கன் | 250 | 300 | 500 | – | – |
| ஓரா | 300 | 300 | 400 | 500 | 260 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | – |
| நகரை | 200 | 250 | 400 | – | – |
| சூடை | 120 | 100 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | 250 | 200 |
| திருக்கை | 130 | 350 | 180 | 300 | 110 |
| பாலை | 400 | 300 | 400 | 500 | – |
| கெழுறு | 150 | 100 | 200 | 100 | 100 |
| கொய் | 100 | 150 | 100 | 100 | – |
| மதளம் | 200 | 250 | 250 | 300 | 150 |

## நாளை 2015

**மார்கழி-17 வியாழக்கிழமை**
**01.01.2015**

திதி: ஏகாதசி மு.ப.10.45 வரை
நட்சத்திரம்: பரணி கா.07.54 வரை
சுபநேரம்: 07.59-09.29 வரை
இராகுகாலம்: 01.59-03.29 வரை
சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பணம் மட்டுமே வாழ்க்கையல்ல

செல்வம் பெருகியுள்ள காலத்தில் தான், ஒருவனுக்குப் பணிவு தேவை. அதேவேளை வறுமையுற்ற காலத்தில் மனிதனுக்குத் துணிவு அவசியம்.

தன்னந்தனியாக இருப்பவன் பகையைத் தேடிக் கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்தால் பித்துப் பிடித்தவனைப் போல அலைய நேரிடும்.

துன்பமற்ற இன்பமும், தீமையற்ற நன்மையும் அடைவது என்பது இயலாத ஒன்றாகும். எந்தச் செயலிலும் இன்ப, துன்பம் இரண்டும் கலந்தே இருக்கின்றன.

நன்மை செய்பவன், ஒவ்வொருவருக்கும் கைகொடுத்து மகிழத் தயாராயிருக்கலாம்.பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. பணத்தைத் தவிர, நாம் பிறருக்குச் செய்யும் நன்மையும், தெய்வபக்தியும் எமது மனதில் ஆற்றலைப் பெருகச் செய்பவை தான். மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்தைப் பின்பற்ற முடியாது.

அரிய செயல்களை பெரிய உழைப்பின்றி ஒரு போதும் செய்ய முடிந்ததில்லை.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 3 | | | 8 | | | 1 |
| | 1 | 8 | 9 | | 4 | | 3 | |
| 6 | | | 5 | | | 7 | 8 | 2 |
| | | | | 5 | | 2 | | |
| 3 | | | 8 | | 2 | | | 4 |
| | | 7 | | 1 | | | | |
| 1 | 6 | 2 | | | 7 | | | 5 |
| | 4 | | 6 | | 5 | 1 | 2 | |
| 8 | | | 1 | | | 4 | 6 | |


### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 4 | 9 | 3 | 7 | 5 | 2 | 6 |
| 6 | 2 | 3 | 5 | 1 | 4 | 8 | 9 | 7 |
| 5 | 9 | 7 | 6 | 2 | 8 | 4 | 3 | 1 |
| 3 | 5 | 1 | 8 | 4 | 6 | 2 | 7 | 9 |
| 4 | 7 | 2 | 3 | 9 | 1 | 6 | 8 | 5 |
| 9 | 6 | 8 | 7 | 5 | 2 | 1 | 4 | 3 |
| 7 | 8 | 5 | 4 | 6 | 9 | 3 | 1 | 2 |
| 1 | 4 | 6 | 2 | 7 | 3 | 9 | 5 | 8 |
| 2 | 3 | 9 | 1 | 8 | 5 | 7 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்க னவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறு வன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மூல நோயை விரட்ட..

மூல நோய் பாதித்தவர்கள் உயிர் போகும் வலியால் துடிதுடித்து போவார்கள். இதற்கு அறுவைச் சிகிச்சை தான் தீர்வு என்றாலும் உணவுப்பழக்கம், உடற்பயிற்சி மூலமும் தீர்வு காணலாம். கண்டுகொள்ளாமல் விடப்படும் மூல நோய் புற்றுநோயாக மாறலாம் என்றும் எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள். மூல நோய் உண்டாவதற்கு முக்கிய காரணமே மலச்சிக்கல் தான். பரம்பரையாகவும் இந்த நோய் வரலாம். உடல் எடை அதிகம் இருப்பவர்கள், தொந்தி உள்ளவர்களுக்கு வயிறு அழுத்தம் அதிகரித்து மூலப் பிரச்சினையை உருவாக்குகிறது. முதலில் உணவில் கவனம் செலுத்துவது அவசியம். மலச்சிக்கலைப் போக்கும் உணவு முறைகளைப் பின்பற்ற வேண்டும். போதுமான உடற்பயிற்சி செய்ய வேண்டும்.



இதற்கென பிரத்தியேக யோகா பயிற்சிகளும் உள்ளன. நார்ச்சத்து உள்ள உணவு வகைகள் மற்றும் பழங்கள், கீரைகள் சாப்பிடுவதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். மேலும் மூலப் பிரச்சினை உள்ளவர்கள் அசைவம் மற்றும் மசாலா உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். தொப்பை உள்ளவர்களும், குண்டானவர்களும் உடல் எடையைக் குறைக்க வேண்டும். தினமும் உடற்பயிற்சியை வழக்கப்படுத்தி கொள்வது நல்லது. குறைந்தளவு தண்ணீர் குடிப்பதாலும் இந்த பிரச்சினை ஏற்படுகிறது. கரட் ஜூஸ் தினமும் குடிப்பது நல்ல பலனைத் தரும். காலையில் வெறும் வயிற்றில் வேப்பிலைச் சாறு குடித்தால் ஓரளவு தீர்வு காணலாம். அகலமான பாத்திரத்தில் சுடு தண்ணீர் நிரப்பி அதில் உட்காரும் போது வலி குறையும்.

## அல்சருக்கு மருத்துவம் என்ன?

புகை பிடித்தல், புகையிலையைச் சுவைத்தல், மது முதலியவற்றை விட வேண்டும். அமிலத்தை நடுநிலையாக்கும் மருந்துகளை அடிக்கடி பயன்படுத்த வேண்டும்.கவலைகள் குடல் புண்ணை அதிகப்படுத்தும், தூக்க மருந்துகளையும் தேவைப்பட்டால் மன அமைதி தரும் மருந்துகளையும் பயன்படுத்த வேண்டும். குடல் புண்ணுக்கு மருத்துவம் செய்யாவி டில், இரத்தக் கசிவு ஏற்படும். இதனால், கருஞ்சிவப்பு நிறத்தில் இரத்த வாந்தி எடுப் பார், அஸ்பிரின் போன்ற வலி நிவாரணி பயன்படுத்தினால் மிக மோசமான இரத்தப் போக்கு ஏற்படும். அதிகமான இரத்தப் போக்கு மிகவும் அபாயகரமானதாகும். இரைப்பை யில் சுரக்கும் நீர்களும் அமிலமும் குடல் புண்ணின் மேல் அடிக்கடி படுவதால், இரைப்பையில் துவாரம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. சாப்பிடும் உணவு வயிற்றுக்கு செல்ல முடியாதவாறு தடைகள் ஏற்படலாம். இதனால் சாப்பிட்ட உணவுவாந்தியாகிவிடுகிறது. இதனை அறுவைச் சிகிச்சையால்தான் குணப்படுத்த முடியும். ஆகவே குடற்புண் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.




## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 130 | 100 | 140 | 140 | 100 | – | 100 | 80 |
| கத்தரி | 280 | 150 | 240 | 300 | 240 | 220 | 260 | 180 |
| கரட் | 160 | 160 | 240 | 200 | 180 | 180 | 260 | 150 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 40 | 60 | 60 | 15 |
| பயிற்றை | 300 | 200 | 250 | 280 | 270 | 240 | 280 | 130 |
| பாகல் | 350 | 300 | 300 | 400 | 350 | 200 | 240 | – |
| கருணைக்கிழங்கு | 60 | 50 | 60 | 80 | 50 | 90 | 120 | 45 |
| பெ.வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 120 | 140 | 160 | 120 |
| சி.வெங்காயம் | 60 | 50 | 100 | 100 | 100 | 120 | 160 | 90 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 | 35 | 50 | 80 | 25 |
| தக்காளி | 230 | 280 | 250 | 280 | 260 | 200 | 300 | 180 |
| வாழைக்காய் | 70 | 70 | 100 | 100 | 80 | 120 | 140 | 80 |
| கீரை | 30 | 50 | 60 | 30 | 40 | 50 | 50 | – |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | – | 30 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 400 | 500 | 400 | 500 | 500 | 400 | 800 | 500 |
| புடோல் | 150 | 140 | 120 | 140 | 140 | 120 | 160 | 80 |
| கோவா | 140 | 120 | 130 | 160 | 120 | 140 | 160 | 110 |
| வெண்டி | 200 | 200 | 140 | 160 | 180 | 120 | 160 | 100 |
| போஞ்சி | 300 | 280 | 200 | 240 | 300 | 220 | 300 | 180 |
| லீக்ஸ் | 320 | 240 | 300 | 300 | 300 | 360 | 300 | 300 |
| தேங்காய் | 50 | 70 | 45 | 50 | 40 | 40 | 45 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 100 | 70 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 | 80 | 90 | 60 | 120 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | – | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 400 | 350 | 300 | 300 | 400 | 280 | 350 | 350 |
| இராசவள்ளி | 110 | 160 | 140 | 140 | 160 | 180 | 180 | 120 |




## 2 கூட்டெண் பலன்கள் 2-8

இந்த எண் கொண்டவர் நடுத்தர உயரம் கொண்டவராக இருப்பார். சந்திரனுடன் சனி இணைந்த பலனைத்தரும். இரண்டும் சேர்ந்து சூரியன் எண் வருவதால் உயரம் குறைந்து காணப்படுவார். உடல் முழுவதும் முடி நிறைந்திருக்கும். கண்கள் சிவப்பாக வும் புருவங்கள்அடர்ந்தும் காணப்படும். மாநிறமாகவும் உடல் சற்று பருத்தும் காணப்படுவார்.

நல்லவரானாலும் கடுமையான பேச்சு, துளியும் விட்டுத் தராத கறாரான நடத்தை இவரைக் கொடியவராகக் காட்டும். பிடிவாத குணம் அதிகம் கொண்டவர். எந்த வேலையையும் தாமே செய்வதை எளிதாக நினைப்பார். பிறரிடம் கூறி வேலை வாங்குவது இவருக்கு சிரமம் ஆகும். இவருக்கு உடலில் பலம் உள்ள அளவுக்கு மனதில் உறுதி கிடையாது.

இவர் சிறப்பாக கவிதை எழுதும் திறமை உள்ளவர். செவ்வாய்ப் பலம் குறைவாக இருப்பதால் இவர் செய்யும் செயல்கள் குடத்துக்குள் எரியும் விளக்குப் போல் அமையும். தமது திறமையை வெளிக்காட்ட கூச்ச சுபாவம் கொண்டவர்.

குழந்தை, மனைவி என எவரிடமும் மிகக் கண்டிப்பாக நடந்து வெறுப்புக்குள்ளாவார். ஆனாலும் சொந்த செலவைக் குறைத்துக் குடும்பத்துக்காக உழைப்பார். இவருக்கு அமையும் மனைவி பொறுமையோடு எல்லாவற்றையும் சமாளித்து நிர்வகிப்பாள்.

தொழிற்படிப்பில் நாட்டம் செல்லும். பலருக்கு சினிமாவில் சேர ஆசை இருக்கும். ரேடியோ, தொலைக்காட்சி, திரைப்படம், நாடகம் என கதை, பாடல், கட்டுரைகளுடன் அலைவர். சிலர் வெற்றியும் அடைவர். சந்திரனும் புதனும் இவர்களை பத்திரிகை ஆசிரியராக்கவும் செய்யும்.

இவர்களுக்கு கூட்டு எண் 8 ஆக இருப்பதால் பிற்காலத்தில் சனி சற்று நல்ல வாழ்க்கையைத் தருவார்.

அதிக உழைப்பு, இள வயதில் வறுமை இவர்களுக்கு வியாதிகளைத் தரும்.

கண்களில் கோளாறு, கெட்ட பழக்கத்துக்கு அடிமையாவதால் அது தொடர்பான நோய் தாக்கக் கூடும். வயிறு பாதிப்பு, மலச்சிக்கல் தோன்றுதல், வாத தொல்லை, இதய பலவீனம் போன்ற நோய்கள் ஏற்படக் கூடும்.

## 2 கூட்டெண் பலன்கள் 2-9

சந்திரனில் செவ்வாய் இணைந்த பலன் இவருக்கு, உடலுறுதியும் அளவான உயரமும் கொண்டு நன்றாக அச்சமின்றி நடப்பார். கண்கள் பெரியதாகவும், மாநிறம் கொண்டவராகவும் சற்று மந்தமான குரலுடன் இருப்பார். பார்வைக்கு கம்பீரத் தோற்றத்துடன் காணப்படுவார்.

இவர் மன வலிமையும், துணிவும் அதிகம் கொண்டவர். வாய்ச் சண்டையுடன் கைச்சண்டையும் போடத் தயங்க மாட்டார். பிறர் மனத்தை நன்றாக எடை போட்டு தந்திரமாகப்பேசிக் காரியத்தைச் சாதித்துக் கொள்வார்.

இவர் பிறந்த இடத்தை விட்டு வேறு இடத்துக்குச் சென்று பிரபலமடைவார். விட்டுக் கொடுக்காமல் பேசும் குணம் கொண்டவர். பிடிவாத குணத்தால் யார் சொல்லையும் கேட்க மாட்டார்.

காதல் திருமணம் புரிந்து கொள்வார். பொருள் போதியளவு கிட்டாமல் திண்டாடுவார். வம்புச் சண்டைகளுக்குப் பின் திருமணம் நடக்கும்.

தந்திரமும், துணிவும், வாதத் திறமையும் உடைய இவர்கள் பொலிஸ், ராணுவம், உளவுத் துறை போன்ற பணிகளில் சேரலாம். கல்லூரி பேராசிரியர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் விவசாயம், தோட்டம் போன்ற தொழில் செய்பவராக இருப்பார்கள்.

வெப்பம் அதிகமுள்ள இவர்களுக்கு பித்த நோய்கள் உண்டாகலாம். வயிற்று வலி, காய்ச்சல், இரத்த அழுத்தம், ரத்தக் கட்டி, கண் கோளாறு உண்டாகலாம். குடலில் அறுவை சிகிச்சை நடக்கும், அடிகாயம் போன்றவை உண்டாகும்.




# ஆண்களிடமிருந்து....

■ பி.சுபீகா



பெண்களைப் போலவே ஆண்களும் இருந்திருந்தால் உலகில் எந்த ஆண் – பெண் பிரச்சினைகளுமே வந்திருக்காதே! என்று நீங்கள் யோசிப்பது நியாயமானதுதான். பெண்கள் பாதுகாப்பாய் செளகரியமாக இல்லை என்றால் ஒட்டு மொத்த உயிரினமே அழிந்து போய்விடுமே என்றுதான், பெண்களைப் பாதுகாக்க வென்றே இயற்கை ஆண்களைப் படைத்தது. ஆனால் மனிதர்கள் தோன்றிய காலத்தில், இந்த ஏற்பாடுகள் இருக்கவில்லை. பிற மிருகங்களால் தாக்கப்படும் அபாயம் எந்நேரமும் இருந்த அந்த ஆரண்ய காண்ட வாழ்க்கை முறையில் ஒரு பெண்ணைப் பாதுகாக்க வேண்டும் என்றால் சாதாரண நபரொருவரால் அது முடியாதே. அதுவும் ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்காத காலத்தில் பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்றால், அதிக பட்ச வீரமும், அதைவிட அதிகமான தேகபலமும் கொண்டவனால் மட்டும்தான் அது முடியும். மனிதர்களிலும் ஆணின் கடமை, பெண்ணைப் பாதுகாப்பது தான். இந்தக் காலத்தில் பெண்களைப் பாதுகாப்பது அவ்வளவொன்றும் கஷ்டமில்லை. சமுதாயம், சட்டம், பொலிஸ் என்று பல கட்டமைப்புகள் இருப்பதால் பெண்களுக்கு நிறையவே பாதுகாப்பு உள்ளது. ஆனால் கடுமையான சட்ட திட்டங்கள் இல்லாத காரணத்தால் பெண்களைப் பாதுகாக்க வேண்டிய ஆண்களாலேயே வன்முறை தாக்குதல்கள் ஏற்படுகின்றன. ஆண்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள பெண்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். ஆண்களிடம் பேசும் போதும், பழகும் போதும் நிதானத்துடனும், வரைமுறையை மீறாமலும் பழக வேண்டும். ஏனெனில் பெண்கள் பழகும் முறையை வைத்தே ஆண்கள் பெண்களிடம் தவறாக நடக்க முயற்சிப்பார்கள். இன்றைய காலகட்டத்தில் கல்வி, வேலை என்று அனைத்துத் துறைகளிலும் ஆண்களுடன் பணியாற்ற வேண்டிய கட்டத்தில் பெண்கள் உள்ளனர். எனவே பெண்கள் நெருங்கிய தோழனாக நினைத்து, குடும்ப விடயங்களை அவர்களிடம் பகிர்ந்து கொள்ளக் கூடாது. ஆண்கள் அனைவரும் மோசமானவர்கள் அல்ல. ஆனால் ஆண்கள் அனைவரும் நல்லவர்களுமில்லை என்பதைப் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு ஆண் தேவையில்லாமல் பெண்களிடம் அதிகமாகப் பேசுவது, கேட்காமல் அனைத்து உதவிகளையும் செய்வது என்றால் அது தப்பான எண்ணத்தில் தான் என்பதை பெண்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதிலும் ஆண்கள் தொட்டுப் பேசுவதை அனுமதிக்காதீர்கள்.

அப்படி நடக்கும்போது உங்கள் எதிர்ப்பை உடனேயே தெரிவியுங்கள். ஏதோ ஒன்றை எதிர்பார்த்துத்தான் தேவையில்லாமல் உதவிகளை செய்கிறான் என்பதைப் புரிந்து ஜாக்கிரதையாகப் பெண்கள் நடந்துகொள்ள வேண்டும்.

# சமையலறையில் பெண்கள்

■ சு.சாரங்கி

உங்கள் வீட்டில் அளவுக்கு அதிகமான பாதுகாப்பு இருக்க வேண்டிய ஒரே இடம் சமையலறை தான். காரணம் அங்கே தான் ஆபத்தான மற்றும் எரிபொருள் சம்பந்தப்பட்ட பொருள்கள் உள்ளன. அதனால் உங்கள் சமையலறையில் உள்ள பொருள்களை பயன்படுத்துவதில் மிகுந்த கவனம் தேவை. அடுப்பில் எதையாவது கிண்டும்போது, நீங்கள் நிற்கும் திசையை நோக்கிக் கிண்டாதீர்கள். நீங்கள் நிற்பதற்கு எதிர் திசையிலேயே எப்போதும் கிண்டுங்கள். அப்படிச் செய்தால் சமைக்கும் போதோ கொதிக்க வைக்கும் போதோ, தீக்காயங்களில் இருந்து பாதுகாப்பாக இருக்கலாம்.

இது பொதுவாகவே நம்மில் பலர் செய்யும் தவறாகும். அதனால் கொதிக்கும் நீர் அல்லது எண்ணெயினால் உடல் பகுதிகளில் கொப்புளங்கள் ஏற்படலாம். எந்த ஒரு உபகரணத்தையும் பயன்படுத்துவதற்கு முன்பு, அதனை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அதனுடன் சேர்ந்து வரும் பயன்பாட்டு புத்தகத்தைப் படிக்க வேண்டும்.

மேலும் அந்த உபகரணத்தை பயன்படுத்தும்போது எடுக்க வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகளையும் தெரிந்து கொள்ளலாம். சமைக்கும் போது சில பொருள்கள் சிந்தும், கீழே சிதறிக் கிடக்கும் பொருள்களை துடைக்கத் தயங்காதீர்கள். அவைகள் விபத்துகள் ஏற்படக் காரணமாக அமையலாம்.

# செய்திகள்


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 . 08 . 1938

இறப்பு 22 . 12 . 2012



**இ.க.யோகராசா**

காலங்கள் மறைந்தாலும் உங்கள் அன்புக் கோலங்கள் என்றுமே மறையாது

90/7, பொற்பதி வீதி, கொக்குவில்

குடும்பத்தினர்.

(55346) (45.3.7)



## நீங்காத நினைவுகளுடன்

15 ஆவது ஆண்டு | முதலாம் ஆண்டு





திரேசம்மா அரியநாயகம்
அன்னை மடியில் 18.05.1954 ஆண்டவன் அடியில் 29.10.1999

யோசேப் அரியநாயகம்
அன்னை மடியில் 27.12.1940 ஆண்டவன் அடியில் 31.12.2013

மூவைந்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு
ஒருநாளும் பிரியாதம்மா உங்கள் பிரிவு தெரியாது எம்மை
அரவணைத்த தந்தையையும், உங்களுடன் அழைத்து ஓராண்டு உருண்டோடியதே
உங்கள் நினைவுகள் எங்கள் எண்ணங்களில் எந்நாளும் சங்கமிக்கும்
உங்கள் ஆன்மா ஆண்டவரில் அமைதியுற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அலுக்கை, அளவெட்டி.

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(55386) (45.3.7)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 07 . 1962

மறைவு 10 . 01 . 2014



அமரர் **சொர்ணலிங்கம் கருணானந்தன்**
[கணக்காய்வுப் பரீட்சகர்]

திதி: தசமி

அன்பை ஊட்டி அரவணைத்து அல்லும்பகலும் எமைக்காத்து
பேரொளியாய் நிறைத்தீர் எம்மை - நீர் மறைந்தீர்
என்று எண்ணமே எமக்கு இல்லை ஐயா
இன்றும் எம்மோடே வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அரசடி, கோப்பாய். (55394)(12.7) குடும்பத்தினர்.


## வீதித் திருத்தப் பணிகளை பார்வையிட்டார் சரா.எம்.பி

யாழ்ப்பாணம், டிசெ.31

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத வட்டுக்கோட்டை அரசடி வீதி புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் காணப்பட்ட குறித்த வீதி தொடர்பில் அந்தப்பகுதி அம்பாள் சனசமூக நிலையத்தினர் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனுக்கு அறிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து தவிசாளர் குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு தெரிவித்தார். அதையடுத்து அவர் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்தார். இதன் மூலம் அந்தப் பகுதி வீதி புனரமைக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் தவிசாளர் மேலும் 3 லட்சம் ரூபா ஒதுக்கீட்டை பிரதேச சபைக் கூடாக மேற்கொண்டு, குறித்த வீதி முழுமையாக செப்பனிடப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளரின் அழைப்பின் பேரில் கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த பகுதிக்கு பயணம் செய்து வீதி வேலைத் திட்டத்தை பார்வையிட்டதுடன் மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் மற்றும் பிரதேச சபை உறுப் பினர்கள் ந.பி.ராஜ்குமார், சசிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ)

## உற்பத்திப் பண்ணை மூலம் மக்கள் பயன் பெறுவர்

### சரணவாஸ் விவசாய உற்பத்திப் பண்ணை திறப்பு விழாவில் முல்லை அரச அதிபர் தெரிவிப்பு

ஒட்டுசுட்டான், டிசெ.31

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சரணவாஸ் விவசாய உற்பத்தி பண்ணை மூலம் இந்தப் பிரதேச மக்கள் நற்பயன்களைப் பெறவுள்ளனர். இதனை ஆரம்பித்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதன் மூலம் சகல உற்பத்திகளையும் உற்பத்தியாக்கி பிரதேச மக்களுக்கு பயன்பட வைக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன்.

"இராசையா குடியிருப்புத் திட்டம் பகுதியில் விளாத்திக் குளம் வித்தியாபுரத்தில் கடந்த 24 ஆம் திகதி சரணவாஸ் விவசாய உற்பத்தி நிலையம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல்லை மாவட்ட அரச அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந் தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஆர்.குருபரன் மற்றும் கிராம அலுவலர்கள், உதவி விவசாயப் பணியாளர்கள், வெளிக்களப் போதனாசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-500)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. றீற்றா எசார்வே அவர்களின் அன்பு மாமனார்.

**செபஸ்ரி ஞானமுத்து**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள் நலன்புரிக்கழகம்.
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

(55403) (10.3)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆரம்ப பிரிவு ஆசிரியரான திருமதி. யசோதா பிரேம் குமார் அவர்களின் பாசமிகு தந்தை

**தியாகராஜா திருநாவுக்கரசு**

அவர்கள் காலமானதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
(தேசிய பாடசாலை)

(55405) (10.3)


## முல்லை மாவட்ட பொலிஸார் நடத்திய நடமாடும் சேவை

ஒட்டுசுட்டான், டிசெ.31

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸாரால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்த நட மாடும் பொலிஸ் சேவை இறுதி நாள் நிகழ்வுகள் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் கடந்த 23 ஆம் திகதி முல்லை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரந்தெனிய தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் முல்லை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் வட மாகாண பொலிஸ் உயர் அதிகாரி, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் ஆகியோர் கலை நிகழ்ச்சியுடன் அழைத்து வரப்பட்டு, கலை நிகழ்வுகளுடன் நிகழ்வு ஆரம்பமானது.

இதில் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசில் வழங்கல், பாடசாலை உபகரணம் வழங்கல் மற்றும் முதியோர்களுக்கான உலர் உணவு வழங்கல் என்பனவும் இராணுவத்தினரால் குருதிக்கொடையும் வழங்கப்பட்டது. (வ-500)

## சமய அறிவு போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 31

பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுச் சபையின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான சமய அறிவுப் போட்டிகள் எதிர் வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கான சான்றிதழ்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆண்டு நிறைவு விழாவின் போது வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

## குருநகர் மாதர்சங்க உறுப்பினர்களுக்கு ஊக்குவிப்புக் கடன்

குருநகர் துணையிழந்தோர் மாதர்சங்க உறுப்பினர்களுக்கு சுயதொழில் முயற்சி செய்வதற்காக ஊக்குவிப்புக் கடனாக கியூடெக் – ஹரித்தாஸ் அமைப்பு ரூபா 6 லட்சத்து 70 ஆயிரத்தை வழங்கியுள்ளதாக அந்த அமைப்பின் தலைவியும் முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினருமாகிய திருமதி அ.மேரியம்மா தெரிவித்துள்ளார். (ஒ – 51)

## நிர்வாகிகள் தெரிவு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு அரச ஓய்வூதியர் நலன் மேம்பாட்டு கழகத்தின் புது வருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநரின் நேரடி வழிகாட்டலில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் புது வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் பெயர் விவரம் வருமாறு:– தலைவராக ஐ.ஜெகநாதன் (புத்தூர்), உப தலைவராக க.வைத்தியநாதன் (சிறுப்பிட்டி), செயலாளராக சி.பகவத்சிங்கம்(நீர்வேலி), உப செயலாளராக திருமதி இ.ரங்கராணி(அச்சுவேலி), பொருளாளராக க.சின்னராசா (அச்செழு)– நிர்வாக குழு உறுப்பினர்களாக மா.தங்கத்துரை, நா.சோதிலிங்கம், இ.மயில்வாகனம், சி.கிருஷ்ணானந்தன், சி.சற்குணராசா, சி.ஸ்ரீஸ் காந்தராசா ஆகியோரும் – போசகராக செல்வி ச.பிரேமினி (உதவிப் பிரதேச செயலர்)ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-11)

## வவுனியா, முல்லைத்தீவில் தொடர்கிறது மழைப் பாதிப்பு

வடக்கில் தொடரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிக்கப்படுவோரின் இடம்பெயர்வோரின்எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் நேற்றுப்பாதிப்புஏற்பட்டிருக்கவில்லை. மக்கள் மீளத் தமது வீடுகளுக்குச் சென்றுவருகின்றனர் என்று மாவட்டங்களின் இடர் முகாமைத்துவநிலையஉதவிப்பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் வரை 10 ஆயிரத்து 965 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 339 பேர் பாதிக்கப்பட்டும், அவர்களில் ஆயிரத்து 558 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 809 பேர் இடம்பெயர்ந்தும் இருந்தனர். நேற்று அந்த எண்ணிக்கை அதிகரித்து 12 ஆயிரத்து 859 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 751பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 574 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 576பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் நலன்புரிநிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 180 வீடுகள் முழுமையாகவும் 378 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவிலும் பாதிக்கப்பட்டவர்களின்எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் வரை 4 ஆயிரத்து 371 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து140 பேர் பாதிக்கப்பட்டதோடு அவர்களில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 514 பேர் இடம்பெயர்ந்திருந்தனர். நேற்றுவரை 4 ஆயிரத்து 538 குடும்பங்களைச் சேர்ந்த14 ஆயிரத்து 829 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். அவர்களில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 428 பேர் இடம்பெயர்ந்து 2 முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். 97 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 479 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. மன்னாரில் நேற்று முன்தினம் வரையான பாதிப்புகளே பதிவாகியுள்ளன. நேற்றுபாதிப்புஅல்லது இடம்பெயர்வு ஏற்படவில்லை. கிளிநொச்சியில் பாதிப்புநேற்றுஏற்படவில்லை – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-4)

# கொடுப்பனவு கோரி 14 தொழிற் சங்கங்கள் வைத்தியசாலைகளில் நேற்றுப் போராட்டம்

## உரிய தீர்வு வழங்க அரசு தவறினால் அது தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 31

தமக்கு கொடுப்பனவு வழங்காது பக்கச் சார்பாகச் செயற்படும் அரசைக் கண்டித்தும், கொடுப்பனவைத் தமக்கும் வழங்குமாறு கோரியும் நாடளாவிய ரீதியில் அரச தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட 14 தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்றுச் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டன. அதனால் வைத்தியசாலைகளுக்குச் சென்ற நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். தீர்வு தவறின் நாளை மறுதினம் தொடக்கம் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவை தெரிவித்தன.

வைத்தியர்களுக்கு 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வைத்திய நிபுணர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் வழங்குவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் தமக்கு அந்த அதிகரிப்பு வழங்க வேண்டும் என்று அரச தாதியர் சங்கம் கேட்டபோதும் அதற்கு அரசு மறுத்துவிட்டது.

அதனால் அரச தாதிய உத்தியோகத்தருக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை. அதனை வழங்க மறுத்த அரசைக் கண்டித்தும் தமக்குக் கொடுப்பனவு வழங்க வேண்டும் என்று கோரியும் நேற்று ஒரு நாள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தாதியர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறே மருந்தாளர்கள் உள்ளிட்ட 14 தொழிற்சங்கங்களும் இணைந்து நேற்றுக் காலை 8 மணியிலிருந்து இன்று காலை 8 மணி வரை சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மருத்துவர்களுக்கு ஏற்கனவே 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அது தற்போது 40 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தவிர மருத்துவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. எமக்கு ஆயிரத்து 150 ரூபாவே கொடுப்பனவாக வழங்கப்படுகிறது. தாதியர் உட்பட்டவர்களுக்கு அது வேறுபடும். எனவேதான் அரசைக் கண்டித்தும் தமக்கும் கொடுப்பனவை வழங் குமாறு கோரியும் சுகவீன விடுப் புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். உரிய தீர்வு தராவிட்டால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலை மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள ஆதார வைத்தியசாலைகள், பிராந்திய வைத்திய சாலைகள் என்பனவற்றில் 14 தொழிற்சங்கங்கள்ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் போராட்டத்தால் சிகிச்சைக்காகச் சென்றிருந்த நோயாளர்கள், மாதாந்த சிகிச்சைக்காகச் சென்ற நோயாளர்கள் கமையாகப் பாதிக்கப்பட்டனர். மருத்துவர்கள் மருந்து எழுதிக் கொடுத்தபோதும் மருந்துகளைப் பெறமுடியவில்லை. அதனால் மணிக்கணக்கில் நோயாளர்கள் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

(த-4)

---

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 01 . 1929

அமரர் திரு.வ. கனகசிங்கம்
(சீமெந்து கூட்டுத்தாபனம்-ஓய்வு பெற்ற நேரக்கணிப்பாளர்)

மறைவு 05 . 01 . 2012

திதி: 31.12.2014
(வைகுண்ட ஏகாதசி)

ஆண்டு மூன்றானாலும்
மறவோம் உன் அன்பை
என்றும் உன் நாமத்தை
உச்சரித்தபடியே
நினைவுகூருகிறோம்.

உம் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்

புலமைகல்வி நிறுவனம்
சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

---

### கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
திருமதி த. பானுமதி
அவர்களின் பாசமிகு தந்தை
**அழகக்கோன் பாலசிங்கம்**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
காணி மாவட்டப் பதிவகம்,
யாழ்ப்பாணம்.

---


### எங்கள் உள்ளக் கமலத்தில் உறைந்திருக்கும் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**மயில்வாகனம் சபாரத்தினம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)

மண்ணில் மலராய்
01.07.1939

விண்ணில் தெய்வமாய்
11.01.2014

திதி: பூர்வபக்க ஏகாதசி
(31.12.2014)



மண்ணில் மலராகி மாண்புடனே பலகாலம் வாழ்ந்துவிட்டு
மாயமதாய் மறைந்துசென்ற மர்மமென்ன எங்கள் ஐயா!
கல்விசார் உலகினிலே கலங்கரை விளக்கெனவே ஒளிவீசி நின்று
கற்போரின் உள்ளமெலாம் களிப்புடனே என்றும் நடமாடுவீரே!

வீறு நடையோடு வெற்றி பல காணுவித்த வியப்பான சற்குருவே!
விந்தைமிகு பேச்சாற்றல் வினைத்திறன்கள் பலகொண்டு விளங்கினீரே!
மாண்புமிகு மட்டுநகர் மண்ணினிலே பலகலையும் கற்றுத் தேர்ந்து
மதிப்புடனே நாற்றிசையும் சேவைசெய்தே உளம் மகிழ வைத்தீரன்றோ.

தாய் தந்தை உறவினர் மேல் தணியாத பாசத்தைச் சொரிந்ததேனோ?
தான் பெற்ற துணைவியொடு நற்கருமம் பலபுரிந்து வாழ்ந்து விட்டு
பொல்லாத பிறவிதனை போதுமென எண்ணியதால் புகுந்தீரோ
சொர்க்கத்தின் வாசல்தன்னில்
போன இடம்தெரியாமல் தவிக்கின்றோம் புண்ணியா
உமதெழில் உருவம் எங்கே காண்போம்.

என்றென்றும் உங்கள் பிரிவால் துடிக்கும்
மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்,
உறவினர்கள்.

"இராசபதி"
புத்தூர் வீதி, மீசாலை வடக்கு, கொடிகாமம்.

(51858)(4573)

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு ★ 13 . 01 . 1949



இறப்பு ★ 01 . 12 . 2014

**அமரர் தியாகராஜா வைத்திலிங்கம்**

கடந்த 01.12.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து விரைந்து வந்தும் தொலைபேசி மூலமும் ஆறதல் அளித்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (31.12.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புகையிரத வீதி,
கொடிகாமம்.

மனைவி
கெங்கேஸ்வரி (கெங்கா)

## மாணவி சடலமாக மீட்பு

வலி.வடக்கு, டிசெ.31

கொக்குவில் பகுதியில் மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஞாயிற்றுக் கிழமை இரவு பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளார்கள். (வ–86)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா /மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முதலாவதும், பாடசாலையில் எனது முதலாவது அணியிலிருந்து 3A பெற்று மாவட்ட நிலை 7இனை அடைந்து கொழும்பு மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகிய ர.தேனுசன் அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரின் சேவை தாய்நாட்டுக்கும் எமது சமூகத்திற்கும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்த்துபவர்: சு. சுரேஸ்குமார் (இரசாயனவியல் ஆசிரியர்)

(55336)(45.3.7)

நவாலி YMCA யினால் நடத்தப்படும் சதுரங்கச் சுற்றுப்போட்டி

இடம் : யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
காலம் : 02.01.2015 (வெள்ளிக்கிழமை)
நேரம் : காலை 8.00 மணி
வயதுப் பிரிவுகள் - ஆண், பெண்

Under - 7 Under - 9
Under - 11 Under - 13
Under - 15 Open

★ முதல் 3 (மூன்று) இடங்களைப் பெறுபவர்களுக்கு கேடயங்களும் முதல் 10 (பத்து) இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.
★ அனுமதிக் கட்டணம் ரூபா 200.00
★ 7.30 மணிக்கு பதிவுகளை மேற்கொள்ளவும்
★ மேலதிக தகவல்களுக்கும், தொடர்புகளுக்கும் 0776733914 அணுகவும்.

அனைத்து சதுரங்க விளையாட்டு வீரர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
நவாலி YMCA.

(C/18601) (10.7.3)


## புத்தாண்டு திருப்பலி

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இன்று புதன்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கும், நாளை முதலாம் திகதி வியாழக் கிழமை காலை 6 மணிக்கும், காலை 7.15 மணிக்கும் புத்தாண்டுத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும் என யாழ். புனித மரியன்னைப் பேராலயப் பங்குத் தந்தை வண பிதா. ஆர்.எச். சகாயநாயகம் அடிகளார் அறிவித்துள்ளார்.

இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நன்றித் திருப்பலியும் இடம்பெறும் என்றும் அ வர் அறிவித்துள்ளார். (ஒ–51)

## குருநகரில் மைத்திரியின் துண்டுப் பிரசுரங்கள்

குருநகர், டிசெ.31

ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனா வின் மாற்றத்தை நோக்கி ஒன்றிணைவோம், மைத்திரியின் 100 நாள் ஆட் சியில் புதிய நாடு என்ற தலைப்பிட்ட தமிழ் மொழியிலான துண்டுப் பிரசுரங்கள் நேற்று முன்தினம் குருநகர்ப் பகுதிக் குடியிருப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இந்தப் பிரசுரத்தின் உட்பக்கத்தில் நூறு நாள்களில் புதிய நாட்டை நோக்கிஅமைய விருக்கும் வேலைத் திட்டத்தின் விவரம் அடங்கிய நாள் குறிப்பு 2015 ஜனவரி பெப்ரவரி மார்ச் ஏப்ரல் வரை குறிப்பிடப் பட்டிருந்தது. 100 நாள்களில் நடைமுறைக்கு வரும் உத்தேச நலன்சார் வேலைத்திட்டங் களும் காணப்பட்டன. (ஒ–51)

## இளம்பெண் சடலமாக மீட்பு

வலி.வடக்கு, டிசெ.31

இளம் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம் பவம் சுன்னாகம் மேற்கு, வரி யப்புலம் என்ற இடத்தில் ஞாயிற்றுக்கிழமை பகல் நடை பெற்றுள்ளது.

திருமணம் செய்யாத 38 வயதுடைய பெண்ணே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்ட வராவார்.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் பிற்பகல் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ–86)

## தொழில் நுட்பக் கல்லூரி பரீட்சைகள் ஆரம்பம்

நாட்டின் சீரற்ற காலநிலையால் பிற்போடப்பட்ட யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத் தில் 2014 ஆம் ஆண்டுக்கான 2 ஆம் பருவகால பரீட்சைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான நேர அட்ட வணையை இன்றுதொடக்கம் குறித்த நிறுவனத்தில் பார்வை யிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## குருநகரில் மது ஒழிப்பு விழிப்புக் குழு அங்குரார்ப்பணம்

குருநகர், டிசெ.31

குருநகர்ப் பகுதியில் அதிகரித்து வரும் மது, கஞ்சா, போதைவஸ்துப் பாவனையை ஒழிக்கும் நோக்குடன் குருநகர் மது ஒழிப்பு விழிப்புக்குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இந்தக் குழுவில் யாழ். மரியன்னை பேராலயம், திருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குகளின் பங்குக் குரவர்களும், குருநகர்ப் பகுதிக் கிராம சேவையாளர்கள், குருநகரில் உள்ள சன சமூக நிலைய நிர்வாகிகள், குருநகர் பொலிஸ் பகுதியினர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். விழிப்புக் குழுவின் ரோந்து நடவடிக்கையின் போது கஞ்சா பாவனையாளர்கள், கஞ்சா விற்பவர்கள் ஆகியோர் இனங்காணப்பட்டுக் கைது செய்யப்பட்டு அவர்கள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அதேசமயம் கஞ்சா வியாபாரிகளை அதனை நிறுத்தி வேறு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் விழிப்புக்குழுவினர் தெரிவித்தனர். (ஒ–51)




# மரண அறிவித்தல்கள்

மண்ணில்
23
08
1935



விண்ணில்
29
12
2014

## திருமதி தவமணி கதிரவேலு

யாழ். வடமராட்சி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கதிர்மணி ஆரியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கதிரவேலு அவர்கள் 29.12.2014திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்புக் மகளும் காலஞ்சென்ற கதிரவேல் அவர்களின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி லயன் கமலேஸ்வரன்,(பிரதம கணக்காளர் மாவட்டச் செயலகம் மன்னார்), தவனேஸ்வரன் (மேற்பார்வையாளர் யாழ்.போதனா வைத்தியசாலை), மகேஸ்வரன் (ஆசிரியர் யாழ். நாவாந்துறை றோ.க.த. பாடசாலை), ரேவதி சிவனேஸ்வரன்(சுவிஸ்), காலஞ்சென்ற சுவந்தீசன் (காண்டீபன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் செல்வலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்ராசா, சந்திரவதனா, தர்மஸ்ரீ, குஞ்சிதமணி, சர்வேஸ்வரன், அன்ரனிற்ரா, ஜெயராசா, காலஞ்சென்ற சந்திரபுஸ்பம் மற்றும் யோகதாஸ்(குலா சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்சன்(இ.போ.ச கோண்டாவில்), சுதேசன், தமிழினி, துஷாயினி, ஜனோஜா( யாழ் போதனா வைத்தியசாலை), பிறேம்கமல்சந்தர், சுபாஸ் (ஆசிரியர் கிளி உருத்திரபுரம்), விந்தாரகன், ஆதித்யா, சாம்பவி, அனுலா, கதீஸ், சர்மிகா, வைஷ்ணவி, நிதுர்ஷன், ஜகிர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுஷியன், தரணியா, அஸ்மிதன், சுதர்சினி, கிருத்திகா, சோபிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2014) புதன்கிழமை பிப 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் -
லயன் க.கமலேஸ்வரன், க.தவனேஸ்வரன், க.மகேஸ்வரன்

## சின்னத்தம்பி மார்க்கண்டு



யாழ். நீர்வேலி போயிட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியா மடிப்பாக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மார்க்கண்டு 27.12. 2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தேவி காவின் அன்புக் கணவரும், விஜய தாஸ், ஜபிதாஸ், நிமலதாஸ் (கண் ணன்) உதயதாஸ், துஸ்யந்தன், துஷியந்தினி, மயூரன் ஆகியோரின் அன் புத் தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2014) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு சென்னை மடிப்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
உறவினர்கள்.

## யோவான்பிள்ளை தேவசகாயம் (இராசப்பா)



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட யோவான்பிள்ளை தேவசகாயம் (இராசப்பா) நேற்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான யோவான்பிள்ளை- ஞானப்பிரகாசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன்-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திரேஸ்மலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பூரணம், ஏபிரகாம், சின்னத்துரை மற்றும் நவம் காலஞ்சென்ற பவுண் ரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயரெட்டினம் (ஓய்வுபெற்ற ஊழியர்-யாழ். மாநகர சபை), ஜெயராணி, ஜெயக் குமாரி, ஜெயக்குமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் P.C. என்று அழைக்கப்படும் சந்திரகுமார், சுரேஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமா, பிலிப்பானந்தம் (ஓய்வு பெற்ற ஊழியர்-யாழ். மாநகர சபை), கிறிஸ்ரி, ஜானகி, கலா பவாணி ஆகியோரின் மாமனும், ஜோஜினி, பிறின்ஸ் (லண்டன்), சாலினி, நிசாந்தினி (கனடா), நிலாணி, யூட்ராஜ் [illegible]ட்டார்), கௌசி, அக்ஷனா (ஜேர்மனி), திரேசன் (ஜேர்மனி), டிலக்ஷன், சானுஜன், சர்மிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.12.2014) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இலக்கம் 73/1, சந்தனமாதா கோவில் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - சந்திரகுமார் (P.C)

# மரண அறிவித்தல்கள்



## சண்முகநாதன் ஆனந்தகுமார்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் மறவன்புலோ கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் ஆனந்தகுமார் நேற்று முன்தினம் (29.12.2014) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சண்கமுநாதன் - பங்கயராணி தம்பதியரின் அன்பு மகனும், தியாகராசா - சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், குமுதரஜனியின் (மாவட்ட மருத்துவனை - மிருசுவில் கொடிகாமம்) அன்புக் கணவரும், அதீஸன், அபிராம் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கமலகுமாரன் மற்றும் கமலகுமாரி, விஜயகுமாரி, காலஞ்சென்ற சசிகுமார் மற்றும் கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயரஜனி லோகதீஸன் (அஞ்சல் அலுவலகம், சாவகச்சேரி) தவரஜனி (கால்நடை வளர்ப்போர் சங்கம், சாவகச்சேரி) ஆகியோ ரின் அன்பு மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மறவன்புலோ கிழக்கு,
சாவகச்சேரி.

(c 18607)

தகவல்:
குடும்பத்தினர்

## கந்தையா நவரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர், புங்கடி விநாயகர் பரிபாலன சபைத் தலைவர், ஒட்டங்கேணிப் பிள்ளையார் பரிபாலன சபைச் செயலாளர்)

கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம் 28.12.2014 ஞாயிற்றுக்கிழமை அகால மரண மடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31.12.2014 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலாவித்தாள் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"நவஜீவனம்" கச்சாய் வீதி,
கொடிகாமம்.
தொ.இ: 021 205 0354

(C/18606)
(10.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னையா நாகராசா (மணியம்)

### (உரிமையாளர்-புறா மார்க் வாணவெடித் தொழிற்சாலை)



மானிப்பாயைப் பிறப்பிடமாக வும் மட்டுவில் மத்தியை வசிப் பிடமாகவும் கொண்ட **பொன் னையா நாகராசா** (30.12.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அம்பிகாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் தெய்வேந்திரன் (செல்வன்-லண்டன்), சுதாகர் (ஜேர்மனி), வசந்த்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தி, நிவாஜினி, ராஜினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2014) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நேரியதூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

(51862)
(10.3)

தகவல்:
தெய்வேந்திரன்
(செல்வன்-மகன்)

# செய்திகள்

## பாதிக்கப்பட்ட பகுதிகளில் விசேட நடவடிக்கைகள்

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.31

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட வாக்காளர்களுக்கு உதவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வெள்ளம் காரணமாக மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத பகுதிகளில் விசேட வாக்களிப்பு மையங்கள் அமைக் கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ள முகாம்களுக்கு அருகிலும் தேவைப்பட்டால் விசேட வாக்களிப்பு மையங்கள் அமைக் கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளதுடன், தேவைப்பட்டால் பாதுகாப்பு படையினரின் உதவியும் பெறப்படும் – என்றும் கூறினார்.

மோசமான காலநிலை காரணமாக விநியோகிக்கப்படாத வாக்காளர் அட்டைகளை எதிர் வரும் 4 ஆம் திகதி விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். வாக்காளர்கள் தேவையற்ற மிரட்டல்கள் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியக்கூடாது. – எனவும் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

## வலிப்பு வந்து கிணற்றினுள் விழுந்த குடும்பஸ்தர் சாவு

தென்மராட்சி, டிசெ.31

குளித்துக்கொண்டிருந்த வேளையில் வலிப்பு வந்ததால் கிணற்றுனுள் வீழ்ந்த இளம் குடும்பஸ்தர் சேற்றினுள் சிக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மறவன்புலோ கிழக்கில் இடம்பெற்றது.

வேலைக்குச் சென்று விட்டு திரும்பிய இவர் குளிப்பதற்காகக் கிணற்றுக்குச் சென்றுள்ளதாகவும் நீண்ட நேரமாகக் காணததால் அனைத்து இடங்களிலும் தேடிய போது சேற்றில் சிக்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரை வெளியேற்றிச் சடலத்தை வெளியே எடுத்து மருத்துவமனைக்கு கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் ஆனந்தகுமார் (வயது–37) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரது மரணம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர். நீதிவானின் பணிப்புரையின் பேரில் திடீர்ச்சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் விசாரணை நடத்தி மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி, நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறும், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார். (த–9)

# பொது எதிரணிக்கு ஆதரவளித்தமை ஏன்?

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளக்கம்

***எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின் வேட்பாளராகப் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இது குறித்துமுழுமையான அறிக்கை ஒன்றைக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது. அதன் முழு விவரம் இங்கே.***



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற இரு பிரதான வேட்பாளர்களின் நிலைப்பாடுகளையும் – பிரகடனங்களையும் கூர்ந்து கவனித்து வந்தது. அத்துடன் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் என்ற வகையில், வடக்கு – கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களையும் மனதில் கொண்டு வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஜனாதிபதித் தேர்தலில் அந்த மக்களையும் மற்றைய பிரஜைகளையும் சரியாக வழி நடத்தும் பொறுப்பு எம்மிடம் உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஜனநாயகமும் – சட்டமும் – ஒழுங்கும் முன்னெப்போதுமில்லாத வகையில் சீரழிக்கப்பட்டுள்ளன. இதனால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாரதூரமான விளைவுகள்,

01. நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்கின்றது. நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி, அரசின் அனைத்து அதிகாரங்களையும், தமது கையில் வைத்திருக்கும் சர்வாதிகாரியாக மாறி வருகிறார். அத்தோடுதான் நினைத்தபடி சட்டத் திருத்தங்களைச் செய்து, மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக முயல்வதானது இந்த அரசின் சர்வாதிகாரப் போக்கைத் தெளிவாகக் காட்டுகிறது.

02. நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையினால் நீதித்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, உயர் நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் சுதந்திரமாகச் செயற்பட முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிராகவும் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணை தொடக்கம் இந்த ஜனாதிபதித் தேர்தல்வரையான முறையற்ற சட்டத் திருத்தங்கள் வரை அனைத்து நிகழ்வுகளும் நீதித்துறையின் வீழ்ச்சியையே காட்டுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் 18 ஆவது சட்டத்திருத்தத்துக்கு எதிராகவும், பிரதம நீதியரசருக்கு எதிராகவும் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணைக்கு எதிராகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்ததையிட்டுப் பெருமை கொள்கிறது. அன்று 18 ஆவது சட்டத்திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்து தவறு செய்தவர்களுக்கு தமது தவறைத் திருத்திக் கொள்வதற்காக ஓர் அரிய வாய்ப்பை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வழங்குகின்றது.

03. ராஜபக்ஷ அரசால் நாடாளுமன்றம் மதிப்பிழந்துள்ளது. பணத்தைக் காட்டி எதிர்க்கட்சி உறுப்பினர்களை தன் பக்கம் இழுத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று அதனைப் பயன்படுத்தி நாட்டுக்குப் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாக இன்று எமது நாடாளுமன்றம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் கைப்பொம்மையாக மாறிக் கிடக்கிறது.

04. அரச நிர்வாகத்தின் முக்கிய பதவிகளுக்கு சுயாதீன நியமனங்களை நேர்மையாகச் செய்வதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டிருந்த அரசமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியதன் மூலம் உயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம், நீதிச்சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணையகம், அரச சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் போன்ற உயர் பதவிகளுக்கு தாம் விரும்பியவர்களை நியமிக்கும் சர்வாதிகாரத்தை இந்த ஜனாதிபதி பெற்றுள்ளார். இது நாட்டுக்கும், நீதித்துறைக்கும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

05. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் எதேச்சாதிகாரமானது சுதந்திர ஊடகங்களுக்கும் சிவில் அமைப்புகளுக்கும் தகவல் பரிமாறும் சுதந்திரத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. ராஜபக்ஷவின் சர்வாதிகாரப் போக்கானது ஜனநாயகத்தை நலிவுறச் செய்து நாட்டை மிக மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துல்லியமான கருத்தாகும்.

### ராஜபக்ஷ அரசு தமிழர்களுக்கு பாதகமானது

ராஜபக்ஷ அரசு எப்பொழுதும் தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமாகவே செயற்பட்டு வந்துள்ளது. இந்த நிலையில் தமிழர் பிரச்சினைக்கு பிரிவுபடாத இலங்கைக்குள் நேர்மையானதும்–சுதந்திரமானதும்–நடைமுறைச் சாத்தியமானதும்–நீடித்துநிலைக்கக்கூடியதுமான ஓர் அரசியல் தீர்வைக் காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

அந்தத் தீர்வு பற்றி எமது நிலைப்பாட்டை எழுத்து மூலமும் – வாய் மூலமும் நாம் பகிரங்கமாக நாட்டுக்குத் தெரியப்படுத்தி வந்துள்ளோம். போருக்குப் பின்னரான ராஜபக்ஷ அரசானது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத்தர முயலாது, காலத்தை வீணடிக்கும் கபடத்தனமான செயல்களையே செய்து வந்துள்ளது.

> “ போர் காரணமாக வடக்கு– கிழக்கில் இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் இன்னும் மீளக் குடியமர்த்தப்படவில்லை. வீடுகளோ, வாழ்வாதாரங்களோ பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக வடக்கு - கிழக்கில் ஆயிரக்கணக்கான ஏக்கர் தனியார் காணிகளை ராஜபக்ஷ அரசு ஆக்கிரமித்துள்ளது. உயர் நீதிமன்றம் மற்றும் நாடாளுமன்றத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை பொருட்படுத்தாத ராஜபக்ஷ அரசு இப்பொழுது நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கண்டபடி காணிகளைச் சுவீகரித்து வருகின்றது.

போர் காரணமாக வடக்கு– கிழக்கில் இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை. வீடுகளோ, வாழ்வாதாரங்களோ பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக வடக்கு – கிழக்கில் ஆயிரக்கணக்கான ஏக்கர் தனியார் காணிகளை ராஜபக்ஷ அரசு ஆக்கிரமித்துள்ளது. உயர் நீதிமன்றம் மற்றும் நாடாளுமன்றத்திற்குக் கொடுத்த வாக்குறுதிகளைப் பொருட்படுத்தாத ராஜபக்ஷ அரசு இப்பொழுது நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கண்டபடி காணிகளைச் சுவீகரித்து வருகின்றது.

பாதைகளையும், பாலங்களையும் கட்டக் கண்மூடித்தனமாகச் செலவிடப்பட்ட பெருந்தொகைப் பணம், வரி என்ற பெயரில் பொது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.

### தமிழர்களின் வாழ்வாதாரம் கீழ் நிலையில்

போர் முடிந்து நீண்ட காலமாகியும் வடக்கு – கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இந்த ராஜபக்ஷ அரசு உருப்படியான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இன்றும் வடக்கு – கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். அவர்களுக்குத் தகுந்த வாழ்வாதாரமோ, வீடுகளோ இல்லை. போதுமான உணவோ, சுயமரியாதையோ பாதுகாப்போ இன்றி அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக, பெண்களும், பிள்ளைகளும் பாலியல் பலாத்காரங்களுக்கு உள்ளாகின்றனர்.

போரினால் இறந்தவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும் காணாமற் போனவர்களுக்கும், தடுப்பில் உள்ளவர்களுக்கும் எவ்வித இழப்பீடும் நீதியும் இன்னும் கிடைக்கவில்லை. ராஜபக்ஷ அரசு இனங்களுக்கிடையிலான நல்லுறவை ஏற்படுத்துவதற்குப் பதிலாக சிறுபான்மை மக்கள் மீதும், அவர்களின் வணக்கத் தலங்களின் மீதும் தாக்குதல் நடத்த தீவிரவாதக் குழுக்களுக்கு இடமளித்துள்ளது. அத்தோடு நில்லாமல் தாம் அரங்கேற்றிய இன, மத, வன்செயல் தாக்குதலுக்கு நியாயம் கற்பிக்கவும் முயன்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தான் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்து, 18 ஆவது திருத்தத்தை நீக்கி, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் சட்டம், ஒழுங்கை மீண்டும் நிலைநிறுத்தும் உன்னத நோக்கோடு களமிறங்கியுள்ள பொது எதிரணி வேட்பாளரை நாம் வரவேற்கிறோம்.

### முறையாக ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படவேண்டும்

பல்லின மக்கள் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாய், சமத்துவமாய், சுயகௌரவத்துடன் வாழ ஆரோக்கியமான ஒரு ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்படுவதற்கு, சகல இன மக்களுடனும் முறையாக ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகும். எனவே சர்வாதிகாரத்தில் இருந்து நாட்டையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றுவதற்காகவும் எமது உன்னத விழுமியங்களான சமத்துவம், நீதி, தன்மானம், சுதந்திரம் என்பவற்றை மீளப் பெறுவதற்காகவும் நாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ அரசை நிச்சயம் தோற்கடிக்க வேண்டும்.

இதற்காக அனைத்துப் பிரஜைகளும் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களும் தமது வாக்குகளை அன்னப் பறவைச் சின்னத்தில் போட்டியிடும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்குமாறு நாம் அன்புடன் வேண்டுகிறோம். (த–5)

31 DEC 2014

# போரில் பெற்ற வெற்றி இனத்துக்கு எதிரானதல்ல

## ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு டிசெ.31
போர் வெற்றியானது ஒரு இனத்துக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை என்று அர்த்தம் கொள்ளப்படுகின்றது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஹங்வெல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது:–
30 வருடங்களாகத் தொடர்ந்த



பயங்கரவாதத்தை நாங்கள் நிறைவு செய்தோம். நாங்கள் தீவிரவாதத்துக்கு எதிராகவே போர் செய்தோம்.
எனினும் போர் வெற்றியானது ஒரு இனத்திற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை எனச் சில தரப்பினரால் பொய்ப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது – என்று தெரிவித்துள்ளார். (ற)

# சல்மானா, ஷாருகானா? குழம்பினார் அமைச்சர்!

கொழும்பு, டிசெ. 31
ஜனாதிபதியின் தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் பங்கெடுப்பதற்காக இந்திய பொலிவூட் நடிகர் சல்மான்கான் இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகை தந்திருந்தார். இவர் ராஜகிரியவில் இடம்பெற்ற மருத்துவ முகாமில், ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுடன் பங்கெடுத்திருந்தார்.
இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பங்கெடுத்திருந்தார். ஜனாதிபதி வெளியேறிய பின்னர், அமைச்சர் திலங்க சுமதிபால உரையாற்றினார்.
இதன் போது அவர் 'ஷாருக்கான் ஜெயவேவா' என்று கோஷம் எழுப்பினார். மேடையிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும், பொலிவூட் நடிகர் சல்மான்கானும் சங்கடப்பட்டனர். பின்னர், அமைச்சருக்கு, வந்திருப்பது ஷாருக்கான் அல்ல சல்மான்கான் என்று தெரியப்படுத்தியதும் அவர் சரியாக கோஷம் எழுப்பினார். (ற–5)

# நம்பகரமான முறையில் தேர்தல் நடக்க வேண்டும்

## ஐ.நா. பொதுச் செயலாளர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 31
சிறுபான்மை மக்கள் உள்ளிட்ட சகலரும் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் பங்கேற்பது முக்கியமானது என்று சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா பொதுச் செயலாளர் பான்கீ மூன், தேர்தல் அமைதியாகவும் – நம்பகரமான முறையிலும் நடக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.



ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன், ஐ.நா பொதுச் செயலாளர் பான்கீ மூன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார். இதன் போதே மேற்படி விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.
அமைதியாகவும் – நம்பகமாகவும் தேர்தல் நடத்தப்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். நல்லிணக்கம், அரசியல் பேச்சு, பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கு ஐ.நா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவும் என்றும் அவர், வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் மீண்டும் உறுதியளித்துள்ளார்.
தேர்தல் செயல்முறையில் எந்த வித அச்சமும் இல்லாமல், சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்து மக்களும் வாக்களிப்பில் பங்கேற்பது முக்கியம் என்றும் வெளிவிவகார அமைச்சருடனான தொலைபேசி உரையாடலின் போது பான் கீ மூன் குறிப்பிட்டுள்ளார். (ற–5)

# இறைவனுக்கு அடுத்தவர் மஹிந்த

## அரசில் இருந்து வெளியேறிய பஷீர் சேகுதாவூத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31
நாட்டு மக்களை பாதுகாப்பதில் விசேடமாக முஸ்லிம் மக்களை பாதுகாப்பதற்கு இறைவனுக்கு அடுத்தபடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் கட்சியின் முடிவுக்கமைவாகவே தான் வெளியேறுவதாகவும் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.
உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சராக இருந்த, முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த பஷீர் சேகுதாவூத் அரசிலிருந்து வெளியேறியுள்ளார். தாம் வெளியேறியமைக்கான காரணங்களை ஜனாதிபதி மஹிந்தவுக்கு அவர் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.
தமது கட்சி எடுத்த தீர்மானத்துக்கு இணங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர், முஸ்லிம் மக்களிடையே தமது கட்சி துரோகம் இழைக்கிறது என்ற நிலைப்பாட்டை இல்லாமல் செய்யவும், அதிகாரத்தில் பேராசை கொண்டவர்கள் அல்ல என்பதைத் தெரிவிக்கவுமே தாம் பதவியில் இருந்து விலகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி மஹிந்தவின் தலைமைத்துவத்தின் கீழ் ஏற்பட்ட அதிருப்தியோ அல்லது நம்பிக்கையின்மை காரணமாகவோ தாம் தமது அமைச்சுப் பதவியிலிருந்து விலகவில்லை என்றும் கூறியுள்ள அவர், நாட்டுப் பற்றுள்ள பிரஜையாக அனைத்து மக்களிடையேயும் ஐக்கியத்தை ஏற்படுத்த ஜனாதிபதி ஆற்றிய சேவையை மறுக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக தேர்தல் பரப்புரை நடவடிக்கையெதிலும் ஈடுபடப் போவதில்லை என்று தெரிவித்துள்ள அவர், ஓர் அமைச்சராக இருந்து ஜனாதிபதிக்காக வாக்கு சேகரிக்க முடியாத நிலை ஏற்பட்டமையையிட்டு வருந்துவதைத் தாழ்மையாக அறிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
எவ்வாறாயினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்ட தாம் இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற)



# தேர்தல் வன்முறை குற்றச்சாட்டுகள் 217

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 217 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், அதில் இரண்டு கொலை முயற்சி சம்பவங்களும் அடங்குவதாகத் தெரிவித்துள்ளது.
அத்துடன் வடக்கு மாகாணத்தில், யாழ். மாவட்டத்திலேயே அதிகூடிய தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
பாரதூரமான சம்பவங்களாக 117, பாரதூரமற்ற சம்பவங்கள் 84, துப்பாக்கிப் பிரயோகம் 16 என்ற அடிப்படையில் 217 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.
பாரதூரமான சம்பவங்களில், கொலை முயற்சியுடன் தொடர்புடைய இரண்டு சம்பவங்களும், தீ வைப்புடன் தொடர்புடைய 4 சம்பவங்களும், அரச வளங்கள் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய 63 சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
பதிவு செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் மேல் மாகாணத்தில் 36, கிழக்கு மாகாணத்தில் 27, வடமத்திய மாகாணத்தில் 25, வடக்கு மாகாணத்தில் 22 சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.
இந்த முறைப்பாடுகளில் 164 முறைப்பாடுகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற–5)

# மஹிந்தவுக்கு ஆதரவு ஜனாதிபதி வேட்பாளரும்

கொழும்பு, டிசெ.31
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக நவ சிஹல உறுமய கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சரத் மனமேந்திர அறிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர், தமது எதிர்கால செயற்பாடுகள் குறித்து தகவல் வெளியிட்டார். நாட்டைப் பிரிக்க முற்படும் சக்திகளுக்கு எதிராகவே ஜனாதிபதி மஹிந்தவை ஆதரிக்க முடிவு செய்யப்பட்டது என்று அவர் கூறியுள்ளார். (ற)

# தற்காலிக அ. அட்டையை 3 ஆம் திகதிவரை பெறலாம்

## மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 31
ஜனாதிபதி தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் மூன்றாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையைக் கருத்திற் கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யூ அமரதாஸ தெரிவித்துள்ளார்.
ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றவர்களில் 9 லட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை.
வாக்களிப்பின் போது, தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அட்டை, பிரதேச செயலரால் வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டை, ஆள்களைப் பதிவு செய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட மதகுருமாருக்கான அடையாள அட்டை, தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை என்பனவற்றில் ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டும்.
இவற்றை எடுத்துச் செல்லத் தவறினால் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
எனவே அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்கள், தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான காலம் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. (ற–5)

# பத்து வருடங்களாக சம்பள உயர்வில்லை

## மாவட்ட வைத்தியசாலைகளின் அதி சிறப்பு தர பரிசாரகர்களுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அதி சிறப்புதர பரிசாரகர்களுக்கு பத்து வருடங்களாகியும் உரிய சம்பள உயர்வு வழங்கப்பட வில்லையெனத் தெரிவிக்கப் பட்டது.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஏனைய மாவட்ட வைத்திய சாலைகளில் கடமையாற்றும் அதி சிறப்புத் தரப் பரிசாரகர்களுக்கு அதற்குரிய வினைத் திறன்காண் பரீட்சையில் சித்தியெய்தியவுடன் அதே படிநிலைக்குரிய வேதனம் வழங்கப்படுகின்றது.

ஆனால் யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றியவர்கள் அதி சிறப்புத் தரத்துக்குரிய வினைத்திறன் காண் பரீட்சையில் கடந்த 2005 ஆம் ஆண்டு சித்தியடைந்தபோதிலும் இதுவரை அதிசிறப்புத் தரத்துக்குரிய வேதனம் வழங்கப்படவில்லை. தகைமையுடைய பலர் ஓய்வு பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்ரது.

வடமாகாண சுகாதார அமைச்சு இந்த விடயத்தில் கவனமெடுத்து உரிய வேதனத்தில் வைப்பதுடன் நிலுவையையும் வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-9)

# படையினர் வசமுள்ள வீட்டின் முன் சடலத்தை வைப்பதற்குத் தடை

## ஆர்ப்பாட்டம் இடம் பெறலாம் என்ற அச்சத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 31

இராணுவத்தினர் ஆக்கிரமித்திருந்த வீட்டின் உரிமையாளர் உயிரிழந்த நிலையில், அவரது சடலத்தை இராணுவம் ஆக்கிரமித்திருந்த வீட்டின் முன்னால் வைப்பதற்கு கூட இராணுவத்தினர் அனுமதி மறுத்த சம்பவம் கடந்த செப்ரெம்பெர் மாதம் புதுக்குடியிருப்பில் நடைபெற்றிருந்தது.

இந்த நிலையில் உயிரிழந்த வீட்டு உரிமையாளரின் மகள் நேற்று உயிரிழந்த நிலையில், மீண்டும் உறவினர்கள் அவ்வாறு முகாம் முன்பாக அவரது சடலத்தை வைத்து விடக்கூடாது என்பதற்காக வீட்டிலிருந்து நேரே மயானத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று இராணுவத்தினரும், பொலிஸாரும் உறவினர்களிடம் வற்புறுத்தியுள்ளனர். அத்துடன் அதற்குரிய உத்தரவையும் அவர்கள் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக இராணுவத்தினரின் பெரிய முகாம் அமைந்துள்ளது. இந்த முகாம் தனியார் காணிகளையும், வீடுகளையும் உள்ளடக்கி அமைந்துள்ளது. இந்த முகாமினுள், 3 வீடுகள் மற்றும் ஒரு துண்டுக் காணி என்பன, கனகசபை சிங்கரத்தினம் என்பவருக்குச் சொந்தமானது.

அவர் தனது வீட்டை விட்டு இராணுவத்தினரை வெளியேறுமாறு பலமுறை கேட்டும் பலனளிக்கவில்லை. இறுதிக் காலத்தையாவது தனது வீட்டில் வசிக்க கேட்டும் இராணுவத்தினர் அனுமதி மறுத்திருந்தனர். இந்த நிலையில் அவர் கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி மாரடைப்பால் உயிரிழந்திருந்தார்.

இதனையடுத்து அவரது இறுதி ஆசைப்படி முகாம் அமைந்துள்ள வீட்டில் ஒரு நொடி அவரது சடலத்தை வைத்து விட்டு எடுப்பதற்கு உறவினர்கள் இராணுவத்தினரிடம் அனுமதி கோரியிருந்தனர். ஆனால் அதற்கு இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்தனர். இந்த நிலையில் மறுநாள் மயானத்துக்குசடலத்தையெடுத்துச் செல்லும் போது, குறித்த இராணுவ முகாமின் முன்பாக சடலத்தை வைத்து உறவினர்கள், இறுதி அஞ்சலி செலுத்த முயன்றனர்.

இதனைப் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கூட்டாகத் தடுத்தனர். அத்துடன் உடனடியாகவே சடலத்தை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தினர்.

இவ்வாறானதொரு நிலையில், அவரது மகளும் நேற்று உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் நேற்று மதியம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கடந்தமுறை போன்று உறவினர்கள், இந்தமுறையும் முகாம்முன்பாகசடலத்தைவைத்து அஞ்சலி செலுத்த முயலுவார்கள் என்ற அச்சம் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் பீடித்துள்ளது.

அதனால் அவ்வாறு செய்யக் கூடாது என்று உறவினர்களை வற்புறுத்தியுள்ளனர். வீட்டிலிருந்துசடலத்தைஎடுத்துக்கொண்டு நேரே மயானத்துக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவர்கள் உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர். அத்துடன் அதற்கு ஏற்ற வகையில் தடையுத்தரவையும் பொலிஸார் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5-4)

# 'கரித்தா' வெண்டி யாழில் அறிமுகம்



யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.மாவட்டத்தில் கரித்தா என்ற புதிய இன பச்சை வெண்டியை பயிரிடுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த புதிய இன கரித்தா வெண்டியை ஜனவரியில் விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கவும் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தற்போது பயிரிடப்பட்டு வரும் ரி.வி.எயிட் என்ற பால் வெண்டிப் பயிர்கள் ஒருவித நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பால்வெண்டியில் ஏற்பட்ட நோயினால் வெண்டிச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பால் வெண்டிப் பயிர்களை அழித்து மாற்று வெண்டியைப் பயிரிடவும் விவசாயிகள் தயாராகி வருகின்றனர். (த-17)



கோப்பாய் பொலிஸார் ஒரு மாத காலம் மேற்கொண்ட நடமாடும் சேவை கடந்த 25 ஆம் திகதியுடன் நிறைவுபெற்றது. இதனை முன்னிட்டு மக்களின் வசதி கருதி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (த-17)

# அடுத்த ஆண்டில் மரக்கறி விதைகள் அதிகளவு உற்பத்தி

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் 2015ஆம் ஆண்டில் கூடுதலாக மரக்கறி விதைகளை உற்பத்தி செய்யவுள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி விதைகளைக் கூடுதலான விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மரக்கறி விதைகளுக்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்த விதைகள் கூடுதலாகத் தென்பகுதிக்கும் ஏற்றுமதி செயற்பட்டு வருகின்றன. குடாநாட்டு உள்ளூர் மரக்கறி விதைகளுக்குத் தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவி வருகின்றது. 2015 ஆம் ஆண்டில் கூடுதலான மரக்கறி விதைகளை உற்பத்தி செய்வதற்கு சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கென திருநெல்வேலியில் உள்ள மரக்கறி விதை உற்பத்திவளாகம்சீர் செய்யப்பட்டுவருகின்றது—என்றார். (த-17)

# காந்தி சிலைகளின் விபரங்கள் திரட்டல்

யாழ்ப்பாணம், டிசெ 31

வடமாகாணத்தில் மகாத்மா காந்திக்குக் கௌரவம் அளிக்க வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலைகள், மகாத்மா காந்தி பெயரில் அமைந்த வீதிகள் ஆகியவற்றின் விபரங்கள் உள்ளூராட்சி அமைப்புக்கள் ஊடாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சிப் பரப்பெல்லையில் மகாத்மா காந்தி சிலை அமைந்துள்ள இடங்கள், மகாத்மா காந்தி பெயரில் அமைந்துள்ள வீதிகளின் பெயர், சிலை செதுக்கியவர் பெயர் போன்ற விபரங்களைத் தொகுத்து வழங்குமாறு வடக்கு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். (த-50)

# சிரமங்கள் கொடுக்கும் கழிவு நீர் வாய்க்கால்

வலி.வடக்கு, டிசெ 31

சுன்னாகம் சந்தைப் பகுதியில் கடந்த சில மாதங்களாகக் கட்டப்படும் கழிவு நீர் வாய்க்காலினால் சந்தைக்கு வரும் மக்களும், வியாபாரிகளும், வாகனங்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கழிவு நீர் செல்லும் வாய்க்காலைத் திருத்தும் பணிகள் இடம் பெறுவதால் சந்தையின் தெற்கு வீதி மற்றும் மேற்குப் பகுதிகளில்வாய்க்காலில்இருந்து



அகற்றப்பட்ட மண் வீதியில் கொட்டப்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலைமையும் காணப்படுகின்றது.

வாய்க்காலில் அகற்றப்படும் மண்ணை மக்கள் பயணத்தை மேற்கொள்ளக் கூடிய வகையில் ஒதுக்குப் புறமாகக் கொட்டி போக்குவரத்து வசதியை செய்ய வேண்டுமெனக்கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. (த-86)

# தொடர்ச்சிகள்

## பறிக்கப்பட்ட

சிறுவர் பூங்கா விலும், யாழ்ப்பாணத்தில் முன்னர், நாட்டு மக்களின் பிரச்சினைக் குத் தீர்வுகாண்பேன் என்று சொல்லியிருந் தேன். அதற்கமைய ஆட்சி அமைத்து, இரண்டு வாரங்களில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்தினேன். இதனால் 8 மாதம் போர் நிறுத்தஒப்பந்தம்நடைமுறையில்இருந்தது. துரதிர்ஷ்டவசமாக தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சிலிருந்து வெளியேறிச் சென் றார்கள். அவர்கள் போரில் ஈடுபட்டார் கள். அதனால் நானும் போரில் ஈடுபட வேண்டிஏற்பட்டது. நான் ஒரு தாய், ஒரு பெண் என்ற வகையில் போரினால் நீங்கள் எத்தகைய இழப்பையும், துன்பத் தையும் சந்தித்திருப்பீர்கள் என்பதனை நான் கனவான் தன்மையுடன் – நேர் மையாக கவலை தெரிவிக்கின்றேன்."– என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சிலி ருந்து வெளியேறினாலும், நான் அதன் பின்னர் இந்த நாட்டின் அரசியலமைப் பில் மாற்றத்தைக் கொண்டு வருவதற் குரிய சட்டத்தைக் கொண்டு வந்தேன். அதிகாரப்பகிர்வைமுயற்சித்தேன். எனது 11 ஆண்டுகால ஆட்சியில் வடக்கு – கிழக் கிலுள்ள மக்களின் பிரச்சினையைத் தீர்ப் பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன் னெடுத்தேன். ஆனாலும் எனக்குப்போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அரசமைப்பை மாற்றும் கனவு நனவாக வில்லை.

தற்போது நீடித்த நிலைத்த சமாதா னத்தை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து அமைதியான சூழலில் இதனைச் செய்ய வேண்டும். போர் முடிந்து விட்டது. ஆனா லும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். தற்போதைய மஹிந்த அரசு, சிங்கள – தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு பல் வேறு உறுதி மொழிகளை வழங்கினாலும் அதனை நிறை வேற்றவில்லை."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"மீள்குடியமர்வு உங்களின் முக்கி யமான பிரச்சினை யாக உள்ளது. உங் களுடைய காணி களில் நீங்கள் குடியிருக்க முடி யாத நிலை உள் ளது. எங்களது பொது வேட்பா ளர், இந்த நாட்டில் சகல இனங்களும் சமஉரிமையுடன் வாழ வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வரு கின்றார். எங்க ளது பொது வேட் பாளர் கட்டாயம் வெற்றியீட்டுவார். இதன் பின்னர் உங் களின் மீள்குடிய மர்வை நாங்கள் சரியான முறை யில் செய்வோம். ஒரு நாடு என் கின்ற வகையில் அதன் எல்லைகள் பாதுகாப்பு என் பது முக்கியமா னது. பாதுகாப்பு நிலைமைகளுக்கு தீங்கு ஏற்படாத வகையில் அத னைச் செய்வோம். உங்களுக்குச் சொந்தமான காணிகளை அ.சு அத்துமீறி உரித்தாக் கியுள்ளது. பாதுகாப்புக்குத் தேவையான நிலப்பரப்பு வைத்துக் கொண்டு எஞ்சிய காணிகளை சொந்தக்காரர்களாகிய உங்களுக்கே வழங்குவோம்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு சகல முயற்சிகளும் செய்வோம். வடக்கு – கிழக்கு மக்களுக்கு வாழ்வாதாரப் பிரச் சினையில் சமஉரிமை வழங்குவோம்.

வடக்கு மாகாணசபையை பெரும்பான் மையான வாக்குகளுடன் நீங்கள் தெரிவு செய்தீர்கள். பல்வேறு சர்வதேச அழுத் தம் காரணமாகத்தான் ராஜபக்ஷ அரசு அதனை நடத்தியது. அதன் பின்னர் வடக்கு மாகாணசபையை இயங்க விடா மல் செய்து வருகின்றது. இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படு கின்றதைப் போன்று வடக்கு மாகாண சபைக்கும் நிதி உள்ளிட்ட சகலவற்றை யும் வழங்கி, வடக்கு மாகாண சபை சிறப் புற இயங்க உதவுவோம்.

எமது எதிர்கால ஜனாதிபதி மைத்திரி, ஐக் கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலது ஒத்துழைப்பையும் பெற்ற, தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறை வேற்றும் வகையில் தீர்த்து வைப்பார்.

இன்று இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. நீதித் துறை அரசி யல்மயப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கட்டளைக்கு நீதித்துறை செவிமடுக் கின்றது. இந்த அரசு ஊழல் திளைக்கின் றது. ஒரு குடும்பம் நாட்டின் மொத்த வளங்களையும் சுரண்டுகின்றது. ஜன நாயகம் – சுதந்திரத்தை காப்பாற்றும் சகல நிறுவனங்களும் செயலிழந்துள் ளன.

தங்களுடைய எதிரிகளுக்கு எதிராக வன் முறைகளை ராஜபக்ஷ அரசு முன்னெ டுக்கின்றது. அடிப்படை உரிமைகளை யும் இந்த அரசு கொள்ளையடிக்கின்றது. போரின் பின்னர் மூவினங்களிடையே யும் சகய வாழ்வை இந்த அரசு ஏற் படுத்தவில்லை.

எனது கணவர் குமாரதுங்க, வடக்கு – கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல மக்கள் மீதும் அன்பு வைத்திருந்தார். அவருக்கு என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியும். அவரை இழந்து நான் எவ் வாறு கஷ்டப்பட்டேன் – துன்பப்பட்டேன், இப்போதும் துன்பட்டுக் கொண்டிருக்கின் றேன். இதனால் நான் உங்களின் துன்பத்தை யும் நன்கு அறிவேன்" – என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ந–5)

## தீர்வு

நாம் எவரையும் நம்பவில்லை. கடந்த 10 வருடங்களாக வழங்கிய வாய்ப்பை ஜனாதிபதி மஹிந்த பயன்படுத்தவில்லை. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அவரது அரசு தோல்வியடைந்துள்ளது. அதனால், அரசியல் அனுபவமிக்க, சிரேஷ்ட அரசியல் வாதியான மைத்திரிக்கு ஒரு வாய்ப்பை வழங்கத் தீர்மானித் துள்ளோம். நாட்டிலுள்ள தமிழ், முஸ் லிம், சிங்கள மக்கள் அனைவரின் நலன் கருதியே இந்தத் தீர்மானத்தை எடுத்துள் ளோம் என்றும் தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு யாருக்கு என்பதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு ஜானகி ஹோட்டலில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற் றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித் ததாவது:–

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதி பதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பான எமது முடிவை இன்று (நேற்று) அறி விக்கின்றோம். ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ மற்றும் எதிரணியின் பொது வேட் பாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோ ரது அறிவிப்புக்கள் குறித்து நாம் தீவிர மாக கடந்த சில வாரங்களாக ஆராய்ந் தோம். வடக்கு – கிழக்கு, தெற்கு உள் ளிட்ட நாட்டின் அனைத்து பாகங்களிலு முள்ள தமிழ் மக்களிடம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்தறிந்து இறுதி முடிவை எடுத்துள்ளோம். அத்துடன், கூட் டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் இது தொடர்பில் ஆராய்ந்து இறுதி முடிவை எடுத்துள்ளோம். இதற்கமைய எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவை ஆதரிக்க ஏகமன தாகத் தீர்மானித்துள்ளோம் – என்றார். (ந–சி)

## கூட்டத்தை

கொண்டிருந்த பொழுது, மக்கள் கூட் டத்திடையே பாம்பு சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. மக்கள் எழுந்து ஓடினர். அத னால் சிறிது பரபரப்பு ஏற்பட்டாலும் கூட்டம் தொடர்ந்து இடம்பெற்றது.

இதன் பின்னர், மின்குமிழ்களின் வெளிச் சத்திற்கு மழைக்கால பூச்சிகள் வந்து குமிந்தன. இதனால் மக்கள் இருக்க முடி யாமல் அசௌகரியப்பட்டனர். மேடை யில் எரியவிடப்பட்டிருந்த பிரகாசமான மின்குமிழ் பூச்சிகளின் தொல்லையால் அணைக்கப்பட்டது.

ஆயினும், மக்கள் சிரமத்துக்கு மத்தியி லும், பொது எதிரணி வேட்பாளரின் உரை முடியும் வரையில் பொறுமையா கக் கேட்டுக் கொண்டிருந்தனர். (ந–5)

---

## மரண அறிவித்தல்



### சபாரத்தினம் திருச்சிற்றம்பலம்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் திருச்சிற்றம்பலம் நேற்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-இராசலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமுள்ள மருமகனும், சிவனேஸ்வரியின் (கேளி) பாசமுள்ள கணவரும், திருமதி துரைராஜசிங்கம் சுமதி, ஜனார்த்தனன், சஞ்சேதனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைராஜசிங்கம், திருமதி ஜனார்த்தனன் ஆனந்தசக்தி, திருமதி சஞ்சேதனன் நிர்சனா ஆகியோரின் அன்பு மாமனும் இந்திரா, சிவசோதி, தேவராணி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (மணி) ஜெயக்குமாரன் (ஜெயம்), தனபாலன் (தனம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உமாபதி, காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, சிவலிங்கம், திருமதி ஜெயக்குமாரன் லோஜினி மற்றும் திருமதி சுப்பிரமணியம் ஜெகசோதி, தனபாலன், திருமதி நிமலநாயகி (நிலா), திருமதி நடராஜசிங்கம் விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஐஸ்வரியா, அதீஸ், அக்ஷரா, அனுஷ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், சூரியகுமாரன், விஜயகுமாரன், சுரேஸ்குமார், கேதீஸ்வரன் திருமதி மாயவன் தயாளினி திருமதி போல் தமயந்தி, திருமதி சிறீதரன் கிஷாந்தி, திருமதி சிறீதரன் கீதாஞ்சலி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி பென் இந்துமதி, திருமதி மீரா, திருமதி சயிரா, திருமதி மதுரா, கபிலன், திருமதி கேசவன் சிந்தியா, ராகுலன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2014) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிள்ளையார் கோயிலடி,**
**சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்கள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 30.06.1945 |  | 28.12.2014 |

### சின்னப்பு போல்ராஜாதுரை

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த சின்னப்பு போல்ராஜாதுரை கடந்த 28.12.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இரங்கல் திருப்பலிக்காக புனித மிக்கேல் தேவாலயத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு, பின்னர் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய். 0777 152787**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

### சோமசுந்தரம் தர்மராசா (சிறி)



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தர்மராசா நேற்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், சுபாசினி (லண்டன்), சுகந்தினி, முகுந்தன் (சுவீடன்), அனுஜன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், சுரேஸ்குமார் (லண்டன்), சிறீதரன் (சுவீடன்), கீர்த்திகா (லண்டன்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற கனகராசா மற்றும் தங்கராசா, காலஞ்சென்றவர்களான சண்முகராசா, மகேஸ்வரி (ஜெயராணி), செல்வராணி ஆகியோரின் சகோதரனும், மாணிக்கராசா (பிரான்ஸ்), நீலாயதாட்சி (கொலன்ட்), மகேஸ்வரி (பிரான்ஸ்), சின்னராசா (சுவீடன்) ஆகியோரின் மைத்துனரும், நிஷா, கீர்த்திகா, நிகா, டிலக்ஷன், யஸ்மினா, டிலான், டிலூஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மதணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**91/14, இந்து மகளிர் வீதி,**
**கந்தர் மடம், யாழ்ப்பாணம்.** (55413) (45.7.3)

தகவல்:
**சுகந்தினி (ருபி)**
**மகள்.**

## தொடர்ச்சிகள்

# மழையின் ஆதிக்கத்தால் ஆட்டம் சமநிலையில்



மேற்கிந்திய தீவுகள் அணி 9 இலக்குகள் இழப்புக்கு 275 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் மழை நீண்ட நேரமாக குறிக்கிட்ட காரணத்தினால் இரண்டாவது இன்னிங்ஸிற்கான ஆட்டநேரங்கள் சாத்தியப்படாத காரணத்தினாலும் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

தென்னாபிரிக்காஅணிக்கும் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம்; நேற்றையதினம் தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபெத் மைதானத்தில் நிறைவுக்குவந்தது.

ஏற்கனவே நடந்து முடிந்த முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இன் னிங்ஸ் மற்றும் 220 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்று 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது இதனால் இந்த ஆட்டத்ினை வெற்றிபெற்றால் அல்லது சமநிலையில் முடித்தால் தொடரைக் கைப்பற்றிவிடலாம் என்ற நிலையில் தென்னாபிரிக்காவும் கடந்த ஆட்டத்தில் படுதோல்வியடைந்ததன் காரணத்தினால் இந்த ஆட்டத்தில் பழிதீர்த்தால் மட்டுமே தொடரில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தலாம். மாறாகசமநிலை யில் முடித்தால் தொடரில் தென்னா பிரிக்காவின் ஆதிக்கம் மேலோங்கிக்காணப்படும் இதனால் இந்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் மேற்கிந்தியத்தீவுகளும் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிதென்னாபிரிக்காவை முதலில்துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி எல்கர் மற்றும் பிளாசிஸ்ஸின் சதம் கைகொடுக்க தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் 8 இலக்குகள் இழப்புக்கு 417 ஓட்டங்களைப் பெற்றிருநத போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக கபிரியேல், பீற்றர்ஸ் மற்றும் ரெய்லர் தலா 2 இலக்குகலையும் பென் மற்றும் கோல்டர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆட்ட வேளையில் மழையின் ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டதனால் இடையிடையே தடைப்படுவதும் தொடருவதுமாக ஆட்டம் இடம் பெற்றது. ஆட்டத்தின் ஐந்தாம் நாளில் மேற்கிந்திய தீவுகள் அணி 9 இலக்குகள் இழப்புக்கு 275 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் மழை நீண்ட நேரமாக குறிக்கிட்ட காரணத்தினால் இரண்டாவது இன்னிங்ஸிற்கான ஆட்டநேரங்கள் சாத்தியப்படாத காரணத்தினாலும் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மோர்கல் 4 இலக்குகலையும் ரஹீர் 3 இலக்குகலையும் பிளந்தர் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பிறீத் வேற் தெரிவானார்.

இவ் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கேப்ரவுனில் நடைபெறும் (ரி)

### அலையெனத்

கிட்டுப் பூங்காவிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டம்இடம்பெறுவதற்கு அமைக்கப்பட்ட அரங்குகளினுள்ளும், வீதிகளிலும் பல் ஆயிரக்கணக்கான மக்கள் தாமாகவே திரண்டு வந்து பொது எதிரணிக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

பொது எதிரணிவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ரிசாட் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான டி.எம்.சுவாமிநாதன், ரவி கருணாநாயக்க, திருமதி விஜயகலா மகேஸ்வரன், ரஜீவ விஜயசிங்க மற்றும் ஜனநாயக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோர் பரப்புரைக் கூட்டங்களில் இணைந்திருந்தனர்.

ஜனத்திரள் மத்தியில் உரையாற்றிய,ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனோ அல்லது எந்தவொரு கட்சியுடனோ நான் எந்தவொரு இரகசிய ஒப்பந்தமும் செய்யவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியுள்ளது. எங்கள் எல்லாக்கட்சிகளுடனும் செய்யப்பட்ட ஒரே ஒப்பந்தம், மனச்சாட்சிதான். அதன் பிரகாரம்தான் நாம் வேலைசெய்யவுள்ளோம்."– என்று தெரிவித்தார்.

"இந்த நாட்டு மக்கள் ஏன் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராக ஒன்று திரண்டுள்ளனர் என்ற விடயத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். இரண்டு தடவைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிப் பீடம் ஏற்றியது உங்களின் வாக்குகள்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இன்று மஹிந்த ராஜபக்ஷ, நான் மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற ஒருவன் அல்ல. நான் ஒரு மன்னன் என்ற மமதையில் செயற்பட்டு வருகின்றார்.இந்த நாட்டில் பொலிஸார் சுதந்திரமாக செயற்பட முடியாது. ராஜபக்ஷ குடும்பத்தின் கோரிக்கையின் பிரகாரம்தான் செயற்பட முடியும். நீதித்துறையும் இன்று சீரழிந்து விட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொல்வதைத்தான் அவர்களும் செய்ய வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் 'குடு' (போதைப் பொருள்) வியாபாரம் செய்கின்றார்கள். பெண்களைத் துஷ்பிரயோகம் செய்கின்றார்கள். அந்த அரசியல்வாதிகளை இந்த அரசு இன்றுவரையில் தட்டிக்கேட்கவில்லை. அவர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை."– என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து அங்கு அவர் உரையாற்றுகையில்,

"இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதாகச் சொல்கின்றார்கள். மக்கள் மனதில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும். இங்குள்ள வறிய மக்கள் பட்டினியால் வாடுகின்றார்கள்.அவர்கள் நெடுஞ்சாலைகளைக் கேட்கவில்லை. அந்த மக்களின் பட்டினியைப் போக்க எதுவும்செய்யவில்லை. வீதிகள் அமைப்பதிலும், கட்டடங்கள் அமைப்பதிலும் பெருந்தொகைப் பணத்தை தமது குடும்பச் செலவுகளுக்காக ராஜபக்ஷ அரசு பெற்றுக் கொண்டிருக்கின்றது. எல்லாவற்றிலும் ஊழல் மலிந்து கிடக்கின்றது. சகலவற்றிலும் 'கொமிஷன்' வாங்கிக் கொண்டிருக்கின்றது இந்த அரசு. நான் பிரபலமானவரின் மகன் அல்ல. நான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்ல. விவசாயியின் மகன். எனக்கு விவசாயிகள் படும் கஷ்டம் தெரியும். இந்த அரசு, வெளிநாடுகளிலிருந்து விவசாயப் பொருள்களை இறக்குமதி செய்கின்றது. அதனால் எமது விவசாயிகள் மேலும் துன்பப்படுகின்றார்கள். எனது ஆட்சியில் இங்கு உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படாது. "– என்று சுட்டிக்காட்டினார்.

"மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு மீன்பிடி அமைச்சராக இருந்த ராஜித சேனராத்னவுக்கு இந்த அரசு இடம் கொடுக்கவில்லை. மீனவர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளைநாங்கள்அடையாளப்படுத்தியுள்ளோம். மீனவர்களுக்கும் ஓய்வூதியத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம். அதே போன்று எமது தேசிய மீன்பிடிப்பாளர்களின் மீன்பிடி துறையை ஊக்குவித்து அவர்களின் தொழில்துறையை வளப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம்.

இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் குரோதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சந்தேகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவர்களுக்கு இடையே சமாதானம் ஏற்படுத்துவது கஷ்டமான செயல். இருப்பினும் நான் அதனைச் செய்வேன். இந்த நாட்டில் சகல இனங்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கு வழிவகை செய்வேன்.

நான் பௌத்த மதத்தவன். ஆனாலும் மதங்கள் எல்லாம் ஒரு விடயத்தைக் குறிப்பிடுகின்றன. மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்த ஒரு போதும் பகைமையால் முடியாது. அந்த வகையில் பௌத்த மதம் போதித்தது எவ்வாறு எல்ல மதங்களையும் ஒற்றுமைப்படுத்துவது என்று. இந்து மதமும் அதனைப் போதித்துள்ளது. அதே போன்று முஹம்மது நபி அவர்கள் மனித இதயங்களை எவ்வாறு ஒற்றுமைப்படுத்துவது என கூறியுள்ளார். அதே போன்று யேசு கிறிஸ்து அவர்கள் மனித இதயங்களை எவ்வாறு ஒற்றுமைப்படுத்துவது என்று கூறியுள்ளார்.

எனவே நாங்கள் தெளிவாகச் சொல்லுகின்றோம் மக்களை ஒற்றுமைப்படுத்துவது துப்பாக்கியினாலோ அல்லது வெடிச் சத்தங்களினாலோ அல்ல. மனிதர்களின் உள்ளங்களினால் மாத்திரமே என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். எவர் எந்த மொழியில் பேசினாலும் மக்களின் உள்ளத்தில் உள்ள பிரச்சினைகளை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.மக்களின் துன்ப துயரங்கள் குறித்தும் அறிந்திருக்க வேண்டும். அதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்போம். தேர்தல் வந்ததும், ராஜபக்ஷவினர் மக்களின் வீடுகளுக்குச் சென்று பொருள்களைக் கொடுக்கின்றனர். கைக்கடிகாரங்கள், கைத்தொலைபேசிகள் என்று இளைஞர் – யுவதிகளைக் கவர ராஜபக்ஷ அரசு இவற்றை இறக்குமதி செய்துள்ளது. இவற்றை அவர்கள் எதிர்வரும் நாள்களில் உங்களுக்குத் தருவார்கள். அதனை வாங்குங்கள். ஆனால் வாக்குகளை உங்கள் மனச்சாட்சிப்படி அன்னப்பறவைச் சின்னத் துக்குப் போட்டு என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்" – என்று தெரிவித்தார். (ற-5,86,56,402)

### பிரபாகரன்

பொது எதிரணியின் பரப்புரைக் கூட்டம் கிட்டுப்பூங்கா வில் நேற்று மாலை இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆங்கிலத்தில் உரை யாற்றினார்.

தன்து உரையில், 'மிஸ்டர் பிரபாகரன்' என்று அவர் ஆங்கிலத்தில் விளித்ததும்,

கூட்டத்தில் கூடியிருந்த ஆயிரக் கணக்கானோர் உணர்ச்சிப் பிரவாகத்தில் விண்ணத்திரக் கோஷம் எழுப்பினர். தொடர்ந்து, அவரது ஆங்கில உரையின் தமிழாக்கம் செய்யப்பட்ட போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்று மீண்டும் கூறப்பட்டபோது, அதே கர கோஷ ஒலி வானைப் பிளந்தது.

இதே போன்றே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது எதிரணிக்கு ஆதரவு வழங்கியமைக்கு நன்றி என்று, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் மைத் திரி ஆகியோர் தெரிவித்த போதும் கோஷம் எழுப்பினர். (ற-5)

### பொய் கூற

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று மாலை கிட்டுப் பூங்காவில் நடந்தது. அதில், ஜனநாயகக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான சரத் பொன் சேகா உரையாற்றினார்.

அவர் தனது உரையின் இறுதியில்,

மக்களுக்குப் பெருமளவு இழப்பின்றி போரை நடத்தினேன் என்று தெரிவித்தார். இதன் போது அங்கு குழுமியிருந்த மக்கள், பொய் சொல்ல வேண்டாம் என்று தமிழிலும் சிங்களத்திலும் கோஷம் எழுப்பினர். கோஷம் எழுப்பிய பக்கம் திரும்பிப் பார்த்து விட்டு தொடர்ந்து உரையாற்றிய சரத்பொன் சேகா, அதனால்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அதிகளவு வாக்குகலை வழங்கினர் என்று குறிப்பிட்டார்.

(ற-5)

### அதிகாரத்தை

அவர்களுக்கு (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) உள்ளது. துரதிர்ஷ்டவசமாக அவர்கள் அதைச் செய்யவில்லை, அதனைச் செய்ய விரும்பவில்லை. மக்களுக்குத் தேவையானதை வழங்குவதற்கு அவர்கள் திறமையற்றவர்களாக இருக்கின்றனர்.

ஆனால், அவர்கள் என் மீதும், ஆளுநர் மீதும் பழியைப் போடுகிறார்கள். அவரால் (விக்னேஸ்வரன்) அதனைச் செய்ய முடியும். அவர்களுக்கு நாம் பணத்தை அனுப்புகிறோம். முடிவு செய்ய வேண்டியது அவர்கள் தான்."– என்று ஜனாதிபதி தனது நேர்காணலில்தெரிவித்துள்ளார்.(ற-5)

### மஹிந்த

பொறுப்பேற்ற குமரன் பத்மநாதனை கிளிநொச்சியில் செயற்பட அனுமதித்துள்ளது அரசு. ராம், நகுலன் போன்றவர்கள் மட்டக்களப்பில் இயங்குகின்றனர்.

உலகத் தமிழர் பேரவையும், நாடுகடந்த தமிழீழ அரசும் இயங்குவதற்கு மஹிந்த அரசுதான் அனுமதித்துள்ளது. எதிரணி ஆட்சியைப் பிடித்தால், வெளிநாடுகளில் உள்ள புலிகளின் நிதி, கப்பல்கள் உள்ளிட்ட சொத்துக்களையும், கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். எங்களுடன் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எவரும் இல்லை. அரசு தனது கைகளில் இரத்தக் கறையை கொண்டுள்ளது. எமது கைகளில் இல்லை. நாம் படையினரைப் பாதுகாப்போம்" – என்று அவர் அங்கு தெரிவித்துள் ளார். (ற-5)

# ஆஸ்திரேலிய வீரர்களின் வெறுப்பு எனக்கு பிடிக்கும்



மெல்பேர்ண் டெஸ்ட் ஆட்டத்தில் மிட்செல் ஜோன்சனுடன் மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட விராட் கோஹ்லி ஆஸ்திரேலிய வீரர்கள் தன்னை வெறுப்பது தனக்குப் பிடித்திருக்கிறது என்கிறார்.

மெல்பேர்ண் டெஸ்ட்டின் 3–ஆம் நாள் ஆட்டத்தில் விராட் கோஹ்லியை ரண் அவுட் செய்வதற்காக பந்தை பிடித்த ஜான்சன் கோஹ்லி முனைக்கு எறிந்தார். ஆனால் பந்து கோஹ்லியைத் தாக்கியது. இதனையடுத்து ஜோன்சனுக்கும் கோஹ்லிக்கும் வாக்குவாதம் முற்றியது. நீங்கள் ரன் அவுட் செய்யவில்லை, என்னைத் தாக்கவே பந்தை எறிந்தீர்கள் என்று விராட் கோஹ்லி ஜான்சனிடம் கூறியதாக ஜோன்சன் தெரிவித்தார். இது குறித்து கோஹ்லி கூறும் போது வாக்குவாதம் அப்போது தொடங்கவில்லை, நான் களமிறங்கியது முதல் என்னை அடங்காத பிள்ளை என்று அழைத்து வந்தனர். ஆனால் நான் கூறுகிறேன் நான் அப்படித்தான். ஆஸ்திரேலிய வீரர்களுக்கு என்னை பிடிக்காமல் இருப்பதையே நான் விரும்புகின்றேன். களத்தில் சில வார்த்தைகளைப் பயன்படுத்துவது பற்றி எனக்கு கவலையில்லை அது எனக்கு சாதகமாக இருக்கிறது என்றே நினைக்கிறேன்.

ஆஸ்திரேலியாவுடன் விளையாடுவது எனக்குப் பிடித்திருப்பதற்கு காரணம் என்னவெனில் அவர்களால் அமைதியாக இருக்க முடியாது. களத்தில் வாக்குவாதம் செய்வது பற்றி நான் கவலைப்படவில்லை. அது எனக்கு உற்சாகத்தை அளித்தது என்னில் உள்ள சிறந்த ஆட்டத்தை வெளிக்கொணருகிறது. எனவே, அவர்கள்தான பாடம் கற்கவில்லை என்று நினைக்கிறேன். அந்த அணியினர் 2–0 என்று முன்னிலை பெற்றுள்ளனர். ஆனால் இதுவே 1–1 என்று இருந்திருந்தால் அவர்களின் வார்த்தைகள் என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்க சுவாரஸ்யமாக உள்ளது. என்று கூறியுள்ளார் கோஹ்லி. (ரி)

# சாதனையுடன் விடைபெற்றார் டோனி



டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி திடீரென அறிவித்தார். உடனடியாக ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்ததையடுத்து, விராட் கோஹ்லி சிட்னியில் நடைபெறும் 4–வது டெஸ்ட் ஆட்டத்திற்கு தலைவராக செயலாற்றுவார்.

மெல்பேர்ண் டெஸ்ட் ஆட்டம் நேற்றயதினம் சமநிலையானதை அடுத்து அவரிடமிருந்து இந்த அதிர்ச்சி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தனது டெஸ்ட் ஓய்வு குறித்து டோனி கூறுகையில் அனைத்து வடிவங்களிலும் விளையாடுவது கடினமாக இருக்கிறது என்ற காரணத்தினால் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வினை அறிவிக்கும் முடிவினை எடுத்துள்ளேன். உலகக்கிண்ணம் நெருங்குகின்ற காரணத்தினால் எல்லாவற்றையும் ஒன்றாக போட்டு குளப்பிக்கொள்ள விரும்பவில்லை. நான் டெஸ்ட்டில் ஓய்வு பெறுவதற்கான சரியான சந்தர்ப்பம் இதுவே ரி–20 மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் இனிவரும் காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளேன் என்றார்

டோனி இதுவரை 90 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளார். இதில் 60 டெஸ்ட்ஆட்டங்களில் இந்திய அணிக்கு தலைவராக இருந்துள்ளார். இந்த 60 டெஸ்ட் போட்டிகளில் 27 டெஸ்ட்களில் வெற்றி பெற்று கங்குலியின் 21 டெஸ்ட் வெற்றிகளைக் கடந்து சாதனை புரிந்துள்ளார்.

2008–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கான்பூரில் அனில் கும்ளே இல்லாத காரணத்தினால் பகுதித் தலைவராக செயலாற்றிய டோனி அதன் பின் ஆஸ்திரேலியா அணியின் இந்தியப் பயணத்தின் போது மொஹாலியில் தலைமைப் பொறுப்பு வகித்தார். அனில் கும்ளே ஓய்வு பெற்றதையடுத்து முழு நேர டெஸ்ட் தலைவராக டோனி நியமிக்கப்பட்டார்.

டெஸ்ட் ஆட்டங்களில் தோனி 4876 ஓட்டங்களை 38.09 என்ற சராசரியில் எடுத்துள்ளார். இதில் 6 சதங்கள் 33 அரைசதங்கள். 2013ஆம் ஆண்டு அவருக்கு பிடித்தமான சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான மிகப்பெரிய வெற்றியில் அவரது அதிகபட்ச தனிப்பட்ட ஓட்டங்களான 224 ஓட்டங்களை எடுத்தார்.

மெல்பேர்ணில் தனது இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றிய டோனி ஒரே ஆட்டத்தில் ஒன்பது பிடியெடுப்புக்கள், சர்வதேச ஆட்டங்களில் அதிக ஸ்டம்பிங் செய்த இலக்குக் காப்பாளர், 254 பிடியெடுப்புக்களை நிகழ்த்தியவர் போன்ற பல்வேறு சாதனைகளை புரிந்து ஓய்வை அறிவித்தார். டோனியின் தலைமைத்துவத்திற்கு நிகரான ஒரு தலைவர் இந்திய டெஸ்ட் அணிக்கு கிடைப்பது நிச்சயம் கடினமான ஒன்றே. (ரி)

# சமநிலையில் முடிந்தது ஜாம்பவான்களின் ஆட்டம்



ஜாம்பவான்களின் தொடர் என வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்றைய தினம் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் மைதானத்தில் நிறைவுக்கு வந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அணித்தலைவர் சிமித் மற்றுமொரு தலைமைச் சதத்தினை பூர்த்திசெய்ய ஆஸ்திரேலியா மீண்டும் ஒரு தடவை 500 ஓட்டங்கள் எனும் இமாலய இலக்கினை எட்டியது. இறுதியில் ஆஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 530 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக சமி 4 இலக்கு களையும் யாதவ் மற்றும் அஸ்வின் தலா 3 இலக்குக ளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் கோஹ்லியின் சதம் கைகொடுக்க 8 இலக்குகள் இழப்புக்கு 462 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றையதினம் தொடர்ந்து களமிறங்கிய யாதவ் வந்த வேகத்தில் வெளியேறினார் தொடர்ந்து சமியும் 12 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 465 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஹரீஸ் 4 இலக்குகளையும் ஜோன்சன் 3 இலக்குகளையும் லியோன் 2 இலக்குகளையும் வற்சன் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

65 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணிக்கு மார்ஷ்ஸின் 99 ஓட்டங்கள் கைகொடுக்க 9 இலக்குகள் இழப்புக்கு 318 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

384 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு டவான் பூச்சியத்துடனும் ராகுல் 1 ஓட்டத்துடனும் வெளியேற இந்தியஅணி 5 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் 2 இலக்குகளை இழந்து தவித்தது. தொடர்ந்து விஜய்யும் 11 ஓட்டங்களுடன் வெளியேற இந்தியஅணி 18 ஓட்டங்களுக்கு முதல் மூன்று இலக்குகளையும் இழந்து தோல்வியை நோக்கி நடைபோட ஆரம்பித்தது. தொடர்ந்து வந்த கோஹ்லி மற்றும் ரஹானே வழக்கம் போல் நிதானமாக துடுப்பெடுத்தாடி படிப்படியாக இந்தியஅணியை சரிவில் இருந்து மீட்டனர். கோஹ்லி 54 ஓட்டங்களுடனும் ரஹானே 48 ஓட்டங்களுடனும் வெளியேற தொடர்ந்து வந்த டோனி மற்றும் அஸ்வின் நிதானித்து நின்று ஆட்டத்தினை சமநிலையில் முடித்தனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஜோன்சன், ஹரீஸ், ஹசீல்வூட் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஹரீஸ் தெரிவானார்.

இவ் இரண்டு அணிகளுக்கும் இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் செவ்வாய்கிழமை சிட்னியில் ஆரம்பமாகின்றது. (ரி)

# மெல்பேர்ண் டெஸ்ட்டின் எண்கள் சொல்லும் செய்தி

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் மெல்போர்ண் மைதானத்தில் நடைபெற்றுவந்த மூன்றாவது டெஸ்ட் நேற்றயதினம் சில சாதனைகளுடன் நிறைவுக்கு வந்தது. அவ்வாறு முறியடிக்கப்பட்ட சில சாதனைகளின் விவரங்கள்:

2008–இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இறுதியாக 2008 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டமே சமநிலையில் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் நடைபெற்ற அனைத்து ஆட்டங்களிலும் (13 ஆட்டங்கள்) இரு அணிகளும் தமது சொந்த மண்ணில் வெற்றிபெற்று வந்தன. 6 வருடங்களின் பின்னர் இந்த ஆட்டமே சமநிலையில் முடிவுக்கு வந்துள்ளது.

07– இசாந் சர்மாவின் பந்து வீச்சில் வற்சன் இதுவரை 7 தடவைகள் ஆட்டமிழந்துள்ளார். ஆகப்படியாக 8 தடவைகள் ஆட்டமிழந்துள்ளார்.

300– அனைத்து சர்வதேச துடுப்பாட்டத்தில் முன்னூறு இலக்குகளுக்கும் அதிகமான இலக்குகளை கைப்பற்றிய 8வது இந்தியபந்து வீச்சாளர் என்றபெருமையை பெற்றார் இசாந் சர்மா.

09– ஆஸ்திரேலியாவில் இறுதியாக தான் விளையாடிய 9 இன்னிங்ஸில் மிகக் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த மார்ஸ் 10வது இன்னிங்ஸிலேயே அரைச் சதத்தினை நிறைவுசெய்தார்.

09 – மெல்போர்ண் டெஸ்ட்டில் 09 பிடியெடுப்புக்களை நிகழ்த்தி ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் அதிக பிடியெடுப்புக்களை நிகழ்த்தியவர் என்ற புதிய சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் டோனி.

99 – மெல்போர்ண் டெஸ்ட்டில் 99 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ரண் அவுட் முறை மூலம் ஆட்டமிழந்த மார்ஸ் மெல்போர்ண் மைதானத்தில் 99 ஓட்டங்களில் ரண் அவுட் மூலம் ஆட்டமிழந்த மூன்றாவது வீரராக மாறினார்.

499– ஆஸ்திரேலியாவில் தற்பொழுது நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் விராட் கோஹ்லி இதுவரை 499 ஓட்டங்களைக் குவித்துள்ளார். நான்காவது வீரராக களமிறங்கிய ஒருவர் இதுவரை ஆஸ்திரேலிய மண்ணில் 500 ஓட்டங்களை தாண்டியது இல்லை. இந்நிலையில் தொடர் முடிவடைவதற்கு ஒரு ஆட்டம்(2இன்னிங்ஸ்) மீதமிருக்கின்ற காரணத்தினால் கோஹ்லி இத் தொடரில் 500 ஓட்டங்களைத் தாண்டி பதிதாக சாதிப்பார் என்பது உறுதி.

17– இறுதியாக மெல்போர்ண் மைதானத்தில் ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்டமே சமநிலையில் முடிவடைந்தது. 17 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றயதினம் மற்றுமொரு ஆட்டம் சமநிலையில் நிறைவுக்கு வந்துள்ளது.

(ரி)

## இலக்கு காப்பாளராக அசத்துகிறார் டோனி

இந்திய கப்டன் டோனி சமீப காலமாக இலக்குக் காப்பாளராக அசத்தி வருகிறார்.

மெல்பேர்ண் டெஸ்டில் 9 இலக்குகள் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்துள்ளார் டோனி. இதற்கு முன் பேர்த் (2008 ஆஸ்திரேலியா), டாக்கா (2010 வங்கதேசம்), மும்பை (2011 மே.தீவுகள்) டெஸ்டில் இதுபோல் சாதித்தார். இதன் மூலம் நான்கு டெஸ்டில் 8 இலக்குகளுக்கு அதிகமாக வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த முதல் இந்திய இலக்குக் காப்பாளர் என்ற பெருமை பெற்றார்.

இந்தியா சார்பாக இதற்கு முதல் நயன் மோங்கியா இரு முறை (டர்பன் 1996, கொல்கத்தா 1999) இந்த இலக்கை எட்டியுள்ளார்.

(ரி)


பிரத்தியேக வகுப்பு
இணைந்த கணிதம் - 2017
ஆரம்பம் - 03.01.2015 சனிக்கிழமை, பி.ப 3.30 மணி
இடம் - 442, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரியர்: திரு சு. இலட்சுமணன்
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

விக்னா
கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L 2017
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 03.01.2015. 08.00 மணி
எமது நிறுவனத்தில் கல்வி கற்ற O/L மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

வலி மேற்கில் புதியதொரு உதயம்
Aa International College வட்டுக்கோட்டை
(யாழ்ப்பாணக்கல்லூரிக்கு அருகில்)
A/L 2017
வர்த்தகப் பிரிவு
யாழ் கொழும்பு பிரபல பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
பொருளியல்: திரு NB. கஜீந்தன்
வணிகக்கல்வி: திரு SK. பாலசபேஷ்
கணக்கீடு: திரு KB. பாலகஜன்
ஆரம்பம் 03.01.2015 -சனி மாலை 04.00 மணி


NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி யாழ்நகர்.
A/L Day Class
கலை,வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 31-12-2014 புதன் 8.00Am

ECONOMICS HALL
A/L 2017 ஆரம்பம் 03.01.2015 காலை 8.00மணி
Day Class ஆரம்பம் 05.01.2015 காலை 8.00மணி
பொருளியல் உதயன்
கணக்கீடு AP.பகீரதன்
வணிகக்கல்வி யசோதரன்
இல 108, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (ரெயில்வே ரக் அருகில்)
கிளை: ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

ICT COLLEGE
AL ICT 2017 Batch
Thursday 1/1/2015 12.30 pm
ஆரம்பம்
Admissions open....
AL ICT Repeat & Paper Class
Sunday 4/1/2015 2.00 pm
#74, Sabapathy Lane, Jaffna
Mr.R.Kumaran-B.Sc.
077 6577359
021 222 1642


## மரண அறிவித்தல்

### கந்தையா கதிரவேற்பிள்ளை



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட கந்தையா கதிரவேற்பிள்ளை 29.12. 2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் துன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், இந்திரா தேவி (கனடா, முன்னாள் ஆசிரியை காசிநாதர் வித்தியாலயம், துன்னாலை), ரவிச்சந்திரன் (சுவிஸ்), Dr. சந்திராதேவி (ஆஸ்திரேலியா), சிவச்சந்திரன் (உதவித் திட்டப் பணிப்பாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), அருட்சந்தி ரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருணகிரிநாதன் (கனடா), சர்வநாயகி (சுவிஸ்), Dr. சிவக்குமார் (ஆஸ்திரேலியா), கலாநிதி, சிவமதி (பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்.பல் கலைக்கழகம்), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, மாதரசி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரமிக்காந்த்-உமாசங்கரி, ரதினா, ராகேஸ், ஆதவன், நவீனன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆதவியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

தகவல்:
க.சிவச்சந்திரன் (மகன்)
72/27, பணிக்கர் லேன்,
திருநெல்வேலி.


விக்னா
52,ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 05.01.2015 08.00 மணி
Eco. M.C சுதாகரன்
Accun. M.R றொஜிந்தன்
B/stu. S. கிருஸ்ணா

விக்னா
52,ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
கலைப் பிரிவு
ஆரம்பம் 05.01.2015 08.00 மணி
Eco. சுதாகர்
Tam. குகன்
H/c N.T. தரன்
Log. வாகீசன்
Geo. சபிதன்
His. பிரதீப்
P/sci. ஸ்ரீரங்கநாத்
Chri. சயந்தன்
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

சாதனையாளர்களுக்கு வாழ்த்துக்கள்
Best wishes

| முழுப்பெயர் | பெறுபேறு | உயிரியல் பெறுபேற | மாவட்டம் |
|---|---|---|---|
| சோபனா கேசவன் | 3A | A | யாழ்ப்பாணம் |
| றொபேட் மன் ஜெனிபேட் | 3A | A | யாழ்ப்பாணம் |
| கோபாலச்சந்திரன் விசாகரூபன் | 3A | A | யாழ்ப்பாணம் |
| ஆன்றிரோசி திருச்செல்வம் யூட்செல்வகுணாளன் | 3A | A | யாழ்ப்பாணம் |
| கேதாரணி மகேந்திரன் | 3A | A | யாழ்ப்பாணம் |
| மயூரி ஞானபண்டிதன் | 3A | A | யாழ்ப்பாணம் |
| சந்திரகுமார் விநுசிகன் | 3A | A | யாழ்ப்பாணம் |
| துஷ்யந்தி செல்வகுமார் | 3A | A | கொழும்பு |
| சப்தமி ஜனார்த்தனன் | 2AB | A | யாழ்ப்பாணம் |
| சௌம்யா சுபரோகணன் | 2AB | A | யாழ்ப்பாணம் |
| கோபிந்தனா மகேஸ்வரன் | 2AB | A | மட்டக்களப்பு |
| பாலுசக்கர் சுந்தரராஜா | 2AB | A | மன்னார் |
| தர்சிகா சுப்பிரமணியம் | 2AB | A | முல்லைத்தீவு |
| பாலுஜா ரவிதாஸ் | 2AB | A | திருகோணமலை |
| ஜஸ்மிகா தேவநேசன் | 2AB | B | நுவரேலியா |
| துவாரகா வரதராஜா | 2AC | A | திருகோணமலை |
| சபித்தா தயாளநேசன | 2AC | A | திருகோணமலை |
| அபினா சிவரஞ்சன் | ABC | A | முல்லைத்தீவு |
| ஆரணி தயானந்தராஜா | ABC | A | மன்னார் |

NSW NSW NSW NSW NSW NSW NSW NSW

எம்மிடம் பயின்று க.பொ.த (உ/த) 2014 பரீட்சையில் சாதனை படைத்து மருத்துவ பீடத்திற்குத் தெரிவான வர்களுக்கும் மற்றும் உயிரியலில் உயர்சித்தி பெற்ற மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உயிரியல் ஆசிரியர்கள்:-
S. பொன்திவாகரன்
V. உமாசங்கர்

NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction,
Jaffna.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன்

31 டிசெம்பர் 2014 புதன்கிழமை

அழகும்
பெருந்தன்மையும்
நற்குடிப் பிறப்பும்
நற்புகழும் உடைய
தாய்மையினின்று,
சிறந்த அழகுள்ள
பெண்ணும், உரமான
ஆணும் பிறப்பார்கள்.
*-பைரன்*

# தோல்வி என்ற தடைக்கற்களை வெற்றிப் படிகளாக மாற்றுவோம்

ராஜராஜன்



மிகச் சிறிய சிலந்திப் பூச்சி தனக்கு வேண்டிய இரையைச் சிக்க வைக்கும் பொருட்டு வலை பின்னுவதைக் காண்கிறோம். ஆனால்பலதடவைகள்முயற்சிசெய்து.அதில் பலமுறை தோல்விகளையும் எதிர்கொண்டதன் பின்னரே அதன் நோக்கம் நிறைவேறுகின்றது. தனது முயற்சியின்போது கிடைத்த தோல்விகளை அந்தச் சிறிய சிலந்திப் பூச்சி கருத்தில் கொள்ளவேயில்லை. மாறாக மீண்டும் மீண்டும் முயற்சி செய்து இறுதியில் வெற்றி பெற்று விடுகின்றது.

எம்மில்பலருக்குதோல்விகளை எதிர்கொள்ளக் கூடிய மனப்பக்குவம் இருப்பதில்லை. சிறு தோல்விகள் ஏற்பட்டால் கூட இத்தகையோர் துவண்டு போய் விடுவார்கள். தன்னம்பிக்கையும் மனத்துணிவும் இல்லாமையே இதற்கான பிரதான காரணமாகும்.

எமது வாழ்க்கையில் தொடர் வெற்றிகள் கிடைத்து எல்லாமே இலகுவாகக் கிடைத்துவிட்டால் சுவாரஸ்யம் இல்லாததொரு வாழ்க்கையை வாழ வேண்டியதொரு நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுவிடும். தோல்விகள் ஏற்படும் போதுதான் நாம் அவற்றைத் தவிர்ப்பதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முனைவோம். அப்போதுதான் எமது வாழ்க்கை சுவாரஸ்யம் மிக்கதாக மாற ஆரம்பிக்கும்.

எல்லா மனிதர்களுக்கும் அவர்கள் பிறக்கும்போதே எல்லா வளங்களும்கிட்டிவிடுவதில்லை. முயற்சியும், உழைப்புமே இவர்களை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

அமெரிக்காவின் புகழ்பூத்த ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஆபிரகாம்லிங்கன் மிகச் சாதாரணமான குடும்பமொன்றில் பிறந்தவர். இளமைநாள்களில் வேதனையும், துன்பமும் கலந்த அனுபவங்களே இவருக்குக் கிடைத்தன. மிகச் சாதாரணமான வேலைகளையும் இவர் முகம் சுழிக்காது மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். இவரது உடலழகு கூட மற்றவர்களைக் கவரும் விதத்தில்அமைந்திருக்கவில்லை. ஆனால் தன்னம்பிக்கையிலும், உழைப்பிலும், துணிவிலும் மற்றவர்களை விட அவர் உயர்ந்த நிலையில் காணப்பட்டார். இவர் அரசியலில்நுழைந்தபோது ஆரம்பத்தில் வரவேற்புக் கிட்டவில்லை. தேர்தல்களில் தொடர் தோல்விகளேகிடைத்தன. ஆனால்தோல்விகளால் இவர் துவண்டுபோய் விடவில்லை. அதனையே ஏணிப் படிகளாகக் கொண்டு எட்டாத உயரத்தில் காணப்பட்ட வெற்றிக் கனியைப் பறித்துக் கொண்டார். அமெரிக்கவல்லரசின்ஜனாதிபதியாக உயர்ந்து நின்றார். லிங்கனின் வாழ்க்கை எமக்கொரு கலங்கரை விளக்கம் என்றுதான் கூறவேண்டும்.

இவ்வாறு பலரை உதாரணமாகக் கூற முடியும். ஆகவேதான் தோல்விகளையும், வேதனைகளையும் சாதனைகளாக்குவதற்கு நாம் முயன்றிட வேண்டும். மேலும்தோல்விஎன்பது ஒரு நாணயத்தின் ஒரு பக்கமே என்பதையும் வெற்றி என்பது அதன் மறுபக்கத்தில் உள்ளது என்பதையும்நாம்புரிந்துகொண்டால் எமதுவெற்றிப்பயணம்தொடர்ந்து செல்லும். தோற்றுவிடுவோமோ என்ற தோல்விப் பயத்தில் நாம் போட்டிகள் எதிலும் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருந்தால் வெற்றியும் எமது கைகளுக்குக் கிட்டாது நழுவிப் போய்விடும்.

மிகச் சிறிய சிலந்திப் பூச்சி தனக்கு வேண்டிய இரையைச் சிக்கவைக்கும் பொருட்டுவலை பின்னுவதைக் காண்கிறோம். ஆனால் பலதடவைகள் முயற்சி செய்து அதில் தோல்விகளை எதிர்கொண்டதன் பின்னரே அதன்நோக்கம் நிறைவேறுகிறது. தனது முயற்சியின் போது கிடைத்த தோல்விகளை அந்தச் சிறிய சிலந்திப் பூச்சி கருத்தில் கொள்ளவேயில்லை. மாறாக மீண்டும் மீண்டும் முயற்சி செய்து இறுதியில் வெற்றி பெற்று விடுகின்றது. அதன் நோக்கமும் நிறைவேறிவிடுகின்றது.

ஆனால் மனிதர்கள் எடுத்த எடுப்பிலேயே வெற்றி கிடைக்க வேண்டுமெனப் பேராசை கொள்கின்றனர்.

எமது நாட்டில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த போர் உயிரழிவுகளை மட்டுமல்ல மக்களின் ஆத்மாவையும் உலுக்கி விட்டது. இறுதியாக 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போர் தமிழர்களை மீளமுடியாததொரு நிலைக்குத் தள்ளி விட்டது. ஒட்டுமொத்தத் தமிழர்களும் தோல்வி கண்டதொரு இனத்தைச் சேர்ந்தவர்களாகவே பார்க்கப்பட்டனர். பலராலும் பரிகசிக்கப்பட்டனர். ஆனால்தமிழர்களின் வாழ்வு இத்துடன் முடிவடைந்துவிடவில்லை என்பதையும்நல்லதொருவாழ்வுகிடைக்குமென்ற நம்பிக்கையையும் அவர்கள் இழந்துவிடக் கூடாது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கூட போட்டியிடும் அனைவரும் வெற்றி பெற்றுவிட முடியாது. இவர்களில்யாரோ ஒருவர் தான் வெற்றிவாகைசூடப்போகின்றார். ஆகவே எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கு வெற்றியும் தோல்வியும் கலந்திருப்பதையே காணமுடிகின்றது. ஆகவேதோல்விகளையேபாடங்களாகக் கொண்டு நாம்வெற்றி என்னும் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும். இடைவழியில் இடையூறுகள் பல எமக்கு ஏற்படலாம். அவற்றைத் தாண்டிச் செல்வதுதான் எமது இலட்சியமாக அமைதல் வேண்டும்.

தமது இலட்சியத்தை அடைவதற்கு முயல்பவர்களின் கண்களில் அதனை அடைவதற்கான வெறி ஒன்றே தெரிய வேண்டும். வெற்றிக் கனியை ருசிக்க வேண்டுமானால் தோல்வி என்ற தடைக் கற்களை நாம் துணிவுடன் எதிர்கொண்டு அவற்றையே படிக் கற்களாக மாற்றிக் கொள்ள முயல்வோம்.

## புதன்பொய்கை

# மறைந்தும் மனங்களில் வாழும் பேராசிரியர்

இலங்கைத் தீவின் தமிழர்களின் பழம்பெருஞ் சிறப்புக்குரிய கலைப் பாரம்பரியங்களையும் மனித விழுமியங்களையும் எடுத்துக் காட்டுகின்ற சிறப்புக்குரிய பிரதேசமாக யாழ்ப்பாண மாவட்டம் விளங்குகிறது. கடற்றொழிலையும் விவசாயத்தையும் ஜீவனோபாயமாகவும், இந்து மதத்தைப் பிரதான சமயமாகவும், தமிழைத் தமது தனி மொழியாகவும் கொண்டுவாழ்ந்த தமிழர்களுடைய பண்பாட்டையும் கலை கலாசாரங்களையும் பேணிப் பாதுகாத்த பூமியாகும் யாழ்ப்பாணம்.

சேர். பொன். இராமநாதன், குமாரசுவாமி முதலியார், சேர். பொன். அருணாசலம், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், பேரா.கா.சிவத்தம்பி, கலைஞர் ஸ்ரீ. ம. த. ந. வீரமணி ஐயர், ஸ்ரீ.ஏரம்பு சுப்பையா போன்றவர்களையும் இதுபோல பலரையும் யாழ்ப்பாண மண் தாங்கியது. இந்த வரிசையில் வந்து புகழடைந்தவரே பேராசிரியர் வி.சிவசாமி அவர்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள சப்த தீவுகளில் ஒன்றாகிய புங்குடுதீவில் இறுப்பட்டி என்னும் ஊரில் திருக்குருமூர்த்தி விநாயகமூர்த்தி – மகேஸ்வரி தம்பதியினருக்கு புதல்வராக 1933 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி சிவசாமி பிறந்தார். தமிழ், சமயம், சமஸ்கிருதம், பண்ணிசை, சாஸ்திரம் என்ற பல்புலமைகொண்ட குடும்பத்தில் பிறந்தமையால் இவை பற்றிய ஞானம் அவரிடத்தில் இயல்பாகவே தோன்றியது. புங்குடுதீவு அமெரிக்கமிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும் பின்னர் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்திலும் அரசினர் கனிஷ்ட வித்தியாலயத்திலும் கற்றார். இதன் பின்னர் இடைநிலைக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 1950 – 1954 வரையில் கற்று தமிழ், வரலாறு, புவியியல், சமஸ்கிருதம் போன்ற பாடப் பரப்புக்களில் தேர்ச்சி பெற்றார். இங்கு டாக்டர் எம்.டி. பாலசுப்ரமணியம் மற்றும் ஆர்.பாலசுப்பிரமணிய ஐயரிடம் சமஸ்கிருத கல்வியைப் பெற்றார். இதுவே இவர் சமஸ்கிருத பேராசிரியராக உயர்வடையக் காரணமாகியது. 1955 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட சிவசாமி அவர்கள் அங்கு வரலாறு, தமிழ், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை பிரதான பாடங்களாகக் கற்றார். 1958 இல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். லண்டன் பல்கலைக்கழக சமஸ்கிருத சிறப்புப் பாடத் தேர்வில் தோற்றிச் சித்திபெற்றார்.

உத்தியோக பின்னணி – சிறப்பான கல்வியைப் பெற்ற சிவசாமி அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டப்படிப்பு பிரிவுக்கு விரிவுரையாளராக முதல் நியமனம் பெற்றார். பின்னர் 1962 – 1965 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்று உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி தொடர்ந்து 1972 – 1978 வரை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை உதவி விரிவுரையாளராகவும் பின்னர் 2 ஆம் தர விரிவுரையாளராகவும் பணியாற்றினார். அத்துடன் 1975 – 1980 வரை 2 ஆம் தர சமஸ்கிருத விரிவுரையாளராகவும் 1980 – 1989 வரை முதல்தர சமஸ்கிருத விரிவுரையாளராகவும் 1989 – 1991 வரை துணைப் பேராசிரியராகவும் 1996 – 1998 வரை பேராசிரியராகவும் யாழ். பல்கலைக் கழக சமஸ்கிருதத் துறையில் பணியாற்றினார்.

இவை தவிர 1976 – 1978 வரையான காலப்பகுதியில் சமஸ்கிருதத்துறைப் பொறுப்பாளராகவும் 1979 – 1998 வரை சமஸ்கிருத துறைத் தலைவராகவும் 1987 ஒக்ரோபர் தொடக்கம் 1988 ஏப்ரல் வரையில் நுண்கலைத்துறையின் பதில் தலைவராகவும் பணியாற்றினார். இந்தக் காலப்பகுதியே பின்னாளில் இசை, நாட்டியம் தொடர்பான படைப்புக்களை இவர் உருவாக்க காரணமாகியது. 1998 இல் ஓய்வு பெற்றதன் பின்னரும் யாழ். பல்கலைக்கழகத்தில் 1998, 1999 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சமஸ்கிருதத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளராகவும், 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமஸ்கிருத வருகை விரிவுரையாளராகவும் அதேவேளை, 2005 – 2013 வரையான காலப்பகுதியில் வரலாற்றுத்துறையின் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். இவை அவரது கற்பித்தல் தொடர்பான உத்தியோக பின்னணியே. இவை தவிர இவரது கற்பித்தல் சாராத பொறுப்புக்களும் அதிகம் என்றே கூறவேண்டும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் வெளியிடப் பட்ட 'இளஞாயிறு' இதழின் குழு உறுப்பினராகவும் (1953 – 54) பூர்வகலா பத்திரிகையின் இணை ஆசிரியராகவும் (1974 – 80) யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க செயலாளராக (1974 – 77) யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட பிரஜைகள் சங்க உறுப்பினராகவும்,(1974) இந்துசாதனம் வாரப் பத்திரிகையின் எழுத்தாளராகவும் மேற்பார்வையாளராகவும், இராமநாதன் நுண்கலைப்பீட பாடத்திட்ட குழு உறுப்பினராகவும், யாழ். பல்கலைக்கழக செனற் சபை உறுப்பினராகவும் (1976 – 78) இசை, கல்விப் பொதுத் தராதர, உயர்தர வரலாற்றுத்துறை பாடத்தேர்வாளராகவும் (1963 – 65) சமஸ் கிருதம், இந்து நாகரிக பாடத் தேர்வாளராக வும் (1975 – 79) இந்துநாகரிக முதன்மை தேர் வாள்ராகவும் (1980 – 82) புங்குடுதீவு மூத்த நயினார்



குளம் வீரகத்தி விநா யகர் ஆலய நிர்வாக சபைத் தலைவராகவும் (1989–90,2002, 2013) யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரர் ஆலய நிர்வாகச் சபைத்தலை வராகவும் (1991–2003) 1975 இலிருந்து அமரராகும் வரையிலும், சேர். பொன். இராமநாதனின் பெயரில் அமைந்த பரமேஸ்வரன் கோயிலில் உள்ள வேதாந்த படிப்பின் செயலாளராகவும் (1994 – ) யாழ்ப்பாண இந்து காங்கிரஸின் உபதலைவராகவும் (1991, 92) யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புகள் அலகின் உறுப்பினராகவும் (2005 – 2008) இருந்து இவர் பலதுறைசார்ந்த பணிகளை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட பன்முகப்பாங்கான தன் பணியாற்றுகையின் விளைவாக துறைசார்ந்த பெரியோர்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் சிறப்பான பாராட்டுதல்களையும் பெற்றார். பேராசிரியரின் 25 ஆவது வெள்ளி விழாவில் கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. பேராசிரியரின் சமஸ்கிருத இலக்கிய மஞ்சரி என்ற நூலுக்கு சாகித்திய பரிசு அரசால் வழங்கப்பட்டது. தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் என்ற பேராசிரியரது நூலுக்கு வடக்கு – கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் 1998 இல் சிறப்புப் பரிசும் 2002 இல் பேராசிரியருக்கு கௌரவ ஆளுநர் விருதும் வழங்கப்பட்டன. வேலணை பிரதேச சபையினர் 'கலைகளின் புரவலன்' என்ற கௌரவத்தை (2006 இல்) வழங்கியிருந்தனர். மேலும் பேராசிரியரின் 60ஆவது அகவையைக்கொண்டாடும்முகமாக யாழ். பல்கலைக்கழகம் அபிஞ்ஞானமாலா என்று பெயரிட்டு மலரை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக பேராசிரியரின் பல்துறைப் புலமைக்கும் அவரது முத்தமிழ் படைப்புக்கும் சிறப்புக்கும் அவரது குடும்பமும் சமூகமும் உந்துசக்தியாக அமைந்தது. பேராசிரியரிடம் காணப்பட்ட இறைபக்தியும் தேடலும் கலையுணர்வும் அவரை உயர்வித்தது எனலாம். சமஸ்கிருத துறையில் கொண்ட ஆர்வம் அதனால் அவருக்கு ஏற்பட்ட புலமை அப்புலமையின் வழியாக கிடைத்த இராமநாதன் நுண்கலைத்துறையின் சமஸ்கிருத ஆசிரிய பதவி

இதனால் பரத நாட்டியத்துறை சார்ந்த சமஸ்கிருத நூல்களைக் கற்கவேண்டிய தேவை என்பவற்றைப் பின்னணியாகக் கொண்டு பரதநாட்டிய நூல்கள் பலவற்றை இவர் படைத்தார். புதிய கீர்த்தனைகளையும் படைத்தார். அவரது எழுத்துப்பரப்பு பரந்து விரிந்தது.

எப்போதுமே வரலாற்றுப் பதிவுகளை தொகுத்துத் தருவதில் சிறப்பு வாய்ந்த இவர். இன்று வரலாறாகியுள்ளார். இவர் தந்த வரலாற்றுக் குறிப்புக்கள் இன்றும் எம்மத்தியில் உள்ளன. பழம்பெரும் படைப்பாளர்களையும் கலைஞர்களையும், அரசியல் பிரமுகர்களையும், கட்டுரை வடிவில் தந்தவர். ஸ்ரீமதி ருக்மணி தேவி அருண்டேல் சேர்.பொன். இராமநாதன் போன்றோரின் வாழ்க்கை சரித்திரங்கள் இங்கு சிறப்பாக கூறக்கூடியவை ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் தக்கவாறு பயன்படுத்தி வெற்றி கண்டவர்.

வாழ்நாள் சாதனையாளராக மணிவிழாக் கண்டவர் 81 வயதைத் தாண்டி அமரரானார். தன்னுடைய சாதனைகளின் விளைவாக அபிஞ்ஞானமாலா என்ற தனி நூலை தனக்காக ஏற்படுத்திக் கொண்டவர். அன்பு, அடக்கம், அறிவு, ஆற்றல், நேர்மை, கடமை, இன்சொல், ஆன்மிக ஈடுபாடு, மாணவர் நலன் விரும்பி என்ற நற்பண்புகளின் உறைவிடமாக விளங்கியவர். தன் வாழ்நாளின் பெரும்பகுதியை பல்கலைக்கழக வளர்ச்சியோடு இணைத்துக் கொண்டவர். யாழ்ப்பாணத்திலும், யாழ். பல்கலைக் கழகத்திலும் சமஸ்கிருத கல்வியை நிலை நிறுத்துவதில் நிலைத்து நின்றவர். பேராசான் விநாயகமூர்த்தி சிவசாமி, அவரின் படைப்புக்களூடாக எம் மத்தியில் நீண்டகாலம் வாழ்வார்.

திருமதி அம்பிகரூபன்
உமாமகேஸ்வரி
நாட்டிய கலாவித்தகர்
நுண்கலைமாணி புவனா
கலையகம்
உடுவில் தெற்கு
மானிப்பாய்

## நெஞ்சக் கதவை கொஞ்சம்.......


### தேடிய தேட்டங்கள்

கடந்த சில மாதங்களுக்கு முன் புளியங்குளத்திலிருந்து கிளிநொச்சி வரையான ஏ–9 வீதி ஓரங்களில் சிறிய சொப்பிங் பைகளிலிடப்பட்ட பாலைப்பழங்களை கைகளில் வைத்து நீட்டியபடி, பாதையில் போய் வரும் வாகனங்களைப் பரிதாபமாக ஏம் பலித்துப் பார்க்கும் சின்னஞ்சிறிசுகளைக் காணும் நிலை ஏற்பட்டது. பெரும்பாலும் இவர்கள் 10 வயதுக்குட்பட்ட பிஞ்சுகள் தான். தமக்கருகில் வைத்திருக்கும் பிளாஸ்டிக் வாளிகளில் இருக்கும் பாலைப் பழங்களை எப் படியாவது விற்றுத் தானாக வேண்டும் என்பதால் கொதிக்கும் காட்டு வெய்யிலின் அகோரம் அவர் களுக்குப் பெரிதாகத் தெரிவதில்லை. பள்ளிக்குச் செல்பவர்களோ இல்லையோ, சீசன் தொழிலானாலும் படிப்பை விட வீட்டில் அடுப்பு எரிய வேண்டும் என்பதற்காக இந்த வயதிலேயே குடும்பப் பொறுப்புணர்ந்து, உழைக்கும் பங்காளிகளாகி விட்டிருக்கிறார்கள்.

வீட்டுக்குத் தாமதமாக வந்ததை தந்தை கண்டிக்க தற்கொலை மிரட்டலை விடுத்துச் சென்ற மகன், ரயில் முன் பாய்ந்து சாவடைந்தார்; கஷ்டப்பட்டுப் படித்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவன், நண்பர்களுடன் கேணியில் குளிக்கச் சென்று நீரில் மூழ்கிச் சாவடைந்தார். இரண்டுமே அநியாயமான அவச் சாவுகள் தான். முன்னையது அகங்காரத்தினால் ஏற்பட்டது. பின்னையது ஆனந்தத்தினால் ஏற்பட்டது. இரண்டுமே பெற்றோருக்கு பேரிழப்புத்தான். ஆறிலே சாகலாம், நூறிலே சாகலாம், பதினாறில் சாவடைவது தான் கொடுமை. அத்தகைய அனுபவத்தைச் சந்திக்க நேர்ந்தோருக்குத் தான் தெரியும் இதன் வலி. தொடர்கதைபோல் நீளும் இப்படியானோரது இழப்புக்களால் அவர்களது குடும்பத்தவர்கள் பாதிக்கப்படுவது பற்றி இன்றைய பதினாறுகள் ஏன் சிந்திக்க மறக்கின்றனர். இவர்கள் மேல் பெற்றோர் காட்டும் அபரிமிதமான பாசமும், பச்சாதாபமும் தான் இதற்குக் காரணமாகின்றனவா?

இன்றைய இளசுகள் தான் எம்மினத்தின் விடியலுக்கான தூரத்தை நிர்ணயிக்க வேண்டியவர்கள். ஒழுக்கப்பிறழ்வுகளிலிருந்து இவர்கள் காப்பாற்றப்படவேண்டும். இவர்களின் அவலச் சாவுகள் நிறுத்தப்பட வேண்டும். இவர்கள் வாழ வேண்டும். இளசுகள் நாங்கள் தேடிய தேட்டங்கள். எங்களின் முதுசமான விழுமியங்களைப் பேணவேண்டியவர்கள். "தமிழனிடம் எஞ்சியிருப்பது அவனது அறிவும் சிறிதளவு தன்மானமும்தான்" என வடக்கு மாகாண சபை உறுப்பினரான மருத்துவர் ஒருவர் வேதனை சுமந்து, குமைந்து வெளியிட்டிருக்கும் கூற்று சமூக நலனில் அக்கறை கொண்டோர் அனைவரது மனங் களிலும் பதிவு செய்யப்படவேண்டிய ஒன்று. ஏனெனில் இருக் கும் சிறிதளவு தன்மானத்தையுமே இழந்து விடும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது எம் இனம்.

# ஆறாவது அறிவின் கதவைத் திறக்க தியானம் செய்யுங்கள்



தூக்கத்தின் பொழுது எம்மை அறியாமல் நாம் தியானத்தில் ஈடுபடுகிறோம். தியானம் என்பது நல்ல விழிப்புணர்வுடன் உறங்குவது.

உறக்கத்தின் பொழுது குறைந்த அளவு தான் பிரபஞ்ச சக்தியைப் பெறமுடிகிறது. தியானத்தில் ஈடுபடும் பொழுது அபரிமிதமான சக்தியைப் பெறமுடியும்.

இந்தச் சக்தி எம்முடைய உடல், மனம் மற்றும் அறிவுத்திறனை பல மடங்கு விரிவடையச் செய்கிறது. எம்முடைய ஆறாவது அறிவின் கதவைத் திறக்கவும் விரிவடையச் செய்ய வும் இது உதவுகிறது.

தியானத்தின் மூலம் எமக்குக் கிடைக்கபெறும் அதீதமான சக்தி எம்மைச் சந்தோஷப்படுத்தும். எமது ஆரோக்கியத்தை அதிகரிக்கும். முழு மனநிறைவுடன் காணப்படுவோம். மேலும் பல சிகரங்களைத் தொடச் செய்யும்.

**தியானம் என்பது ஒரு பயணம்.**

தியானத்தின்போது நாம் உணரும் வகையில் எமது உடலிலிருந்து மனதுக்கு பயணிப்போம். மனதிலிருந்து அறிவாற்றலுக்கு, அறிவாற்றலிலிருந்து எமக்குள், பின்பு அதையும் தாண்டி தியானம் மேற்கொள்ள முதலில் எமது உடல் மற்றும் மனம் சம்பந்தப்பட்ட செயல்களை நிறுத்தவேண்டும்.

தியானத்துக்காக ஒரு நாளில் இரண்டு நேரங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். (எடுத்துக்காட்டாக காலை 5 அல்லது 6 மணி. மாலை 6.30 அல்லது 7.30 மணி) முடிந்த வரை குறிப்பாக அந்த நேரத்தி லேயே தியானம் செய்ய முயற்சி செய்யவும்.

வீட்டில் ஒரு இடத்தை தியானத்துக்காகத் தேர்ந்தெடுங்கள். அது அமைதியான இடமாக இருக்க வேண்டும். அங்கு ஆசனத்தை விரித்து அதில் அமரவும். தலை, கழுத்து மற்றும் முதுகெலும்பு நேராக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். கைகள் மடி மீது இருக் கட்டும். கண்களை மூடிக் கொள்ளவும்.

சூரியன், நிலவு, நட்சத்திரங்கள், மேகங்கள் எதுவும் இல்லாத பரந்த எல்லையற்ற ஆகா யம் மங்கிய ஒளியில் இருப்பதாக சில நிமிடங்கள் கற்பனை செய்யவும். இது உங்கள் உடலையும், உள்ளத்தையும் தளர்த்தி அமை திப்படுத்த உதவும்.

இப்போது உங்கள் உணர்வு மையத்தை இதயத்துக்கு எடுத்துச் செல்லவும். அங்கு பன்னிரெண்டு இதழ்கள் கொண்ட சிவப்புத் தாமரையைக் கற்பனை செய்யவும். உங்கள் இஷ்ட தெய்வம் அதில் உயிருணர்வுடன் அமர்ந்திருப்பதாக எண்ணவும்.

இப்போது உடல், அமைதியான மனம், நம்பிக்கை, பக்தி, விவேகம், ஆகியவற்றுக்காக பிரார்த்திக்கவும். ஐந்து, பத்து நிமிடங்கள் இஷ்ட தெய்வத்தைத் தியானிக்கவும். மனம் அங்கும் இங்கும் ஓடினாலும் அதை இழுத்து வந்து இஷ்ட தெய்வத்திடம் நிறுத்தவும். பின்பு இஷ்ட தெய்வத்தின் நாமத்தை ஜெபம் செய்யவும்.

தியானத்திற்கு பிறகு உடனடியாக எழுந்திருக்க வேண்டாம். தொடர்ந்து சிறிது நேரம் அமர்ந்து மனதுக்கு அமைதி தரும் ஆன்மிக புத்தகங் களை படியுங்கள்.




# புதன்பொய்கை

# சிரித்துச் சிரித்து பேசிக் கொண்டு இருந்தாரென்றால்..

ஒருவர் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாரென்றால், அவரைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? மனிதர் கொடுத்து வைத்தவர்! தொட்டதெல்லாம் துலங்குகிறது. கவலையில்லாமல் இருக்கிறார், என்பார்கள். அதேபோல் ஒருவர் சிடுசிடு என்றோ கடுகடுப்பாகவே பேசினால்என்னநினைப்பார்கள்? பாவம், இவர், என்ன பாடுபடுகிறார்! வீட்டில் அலுவலகத் தொழிலில் என்று ஆயிரத்தெட்டுபிரச்சினைகளைவைத்துக் கொண்டு மனிதர் தள்ளாடுகிறார். அதுதான் சிடுசிடு என்று வெடிக்கிறார் என்பார்கள்.

வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்... சிரிச்சா என்ன குறைஞ்சா போய் விடும்.

ஒருவரின் அன்றாட நடவடிக்கை மூலம்அவரதுவாழ்க்கைநிலையை மனநிலையை அறியக்கூடியதாக இருக்கிறது. ஒருவரின் மனநிலைக்கும் அவரது மகிழ்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மனத்தில் மகிழ்ச்சி குறையக்குறைய உடல் நலமும் பாதிப்புறத் தொடங்கும்.

வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அவரவர் மனத்தைப் பாதிக்கக்கூடியதாக இருக்கும். அவை, மகிழ்ச்சியை அல்லது துன்பத்தைத் தரக் கூடியவையாக அமையும்.

அதனால், வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் மனத்தைப் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பாதித்தாலும் அவற்றிலிருந்து விடுபட முயல வேண்டும். ஒரு தொழிலில் லாபம் ஈட்ட வேண்டும் என்பதற்காகச் சில உத்திகளைக் கையாண்டு வெற்றி பெறுவதைப் போல், வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கவும் சில உத்திகள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்த முன்வந்தால், வாழ்வே மகிழ்ச்சிதான்.

செய்யும் செயல்கள் சீராகவும், உடலும் மனமும் வளமாகவும் கவலைகள் கழியவும் வாழ்க்கை உத்திகள் வகை செய்யும். வாழ்க்கையில்சென்றடைய வேண்டிய தூரம் அதிகம். வாழ்க்கைப்பாதைகளோ பல. எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தால் எளிதாகச் சென்றடையலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டியதும் அவரவர்களே! வாழ்க்கையில் எது எளிதாக இருக்கிறதோ அதை நாடிச் செல்வது, மனத்தின் இயல்பு. மனத்துக்கு எளிதாக இருப்பது, இரண்டு. ஒன்று திருப்தி, மற்றொன்று பேராசை. இந்த இரண்டும் மனத்தின் இரண்டு பக்கங்கள்.

மனத்தின் ஒரு புறத்தில் பேராசை இருந்தால், அதன் மறுபுறத்தில் மகிழ்ச்சியும் திருப்தியும் இருக் கிறது என்று பொருள். திருப் தியை, மகிழ்ச்சியை விரும்புகின்ற மனம்,அவற்றைப் பெறுவதற்காகக்கடுமையாக உழைக்கும். அதனால் மனத்தில் இயல்பு மாறி மன இறுக்கம், மனச்



சோர்வு, மன உளைச்சல், மனப்புழுக்கம் என்பவை தோன்றும். இவற்றைப் போக்கிவிட்டால், மனத்தின் உழைப்புக்கு உரிய திருப்தியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். மன இறுக்கம், மனச் சோர்வு, மன உளைச்சல், மனப்புழுக்கம் என்பவை எதனால் எப்படித் தோன்றின? எப்படிப் போக்குவது? என்று தெரியாமல் குழப்பிப் போகின்றவர்கள் பலர். இந்த மன இயல்பு மாற்றத்துக்கு மாமருந் தாக இருப்பது சிரிப்பு. சிரிப்புக்குச் செலவு செய்வாருண்டா? வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்றால் வாய் மூடிக் கிடக்கலாமா? சிரிப்பைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்வோம். சிரிப்பு பல வகை. அவை, நமட்டுச் சிரிப்பு, அவுட்டுச் சிரிப்பு, வெடிச் சிரிப்பு, புன்சிரிப்பு, வெறிச் சிரிப்பு, கபடச்சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, ஆணவச்சிரிப்பு, அகந் தைச் சிரிப்பு, கள்ளச் சிரிப்பு, காதல் சிரிப்பு என்று கூறப்பட்டாலும் மகிழ்ச்சிக்காகச் சிரிக் கும் சிரிப்பே சிரிப்பு.

நகைச்சுவைக்காகவும், பிறரைக் கேலி செய்வதற்காகவும் சிரிப்பு பயன்படுத்தப்படுவதுண்டு. சிலரது நகைச் சுவை, சிந்தையைத் தூண்டக் கூடியதாகவும், அறிவுக்கு விருந் தாகவும் இருக்கும். சில ரது நகைச் சுவை பொருள் பொதிந்ததாகவும் இருக்கக் காணலாம். நகைச்சுவையால் ஏற்படக் கூடிய சிரிப்பு மனத்துக்கு ஊட்டமாக அமைகிறது. மனத்தின் சுமையைக் குறைக்கிறது. உடலுக்கு ஆரோக்கியத்தை, புத்துணர்ச் சியைத் தருகிறது.

சிரிக்கச்சிரிக்க மலரும் தாமரை போல், மனம் மணம் வீசத் தொடங் குகிறது. மனத்துக்கு என்று இருக் கும் ஒரே மருந்து சிரிப்பு மட் டுந்தான். அந்தச் சிரிப்பு மருந்து கசப்போ, புளிப்போ, உவர்ப்போ,காரப்போ,துவர்ப்போ இல்லை.சிரிப்புக்குஎன்றிருப்பது ஒரே சுவை. அது இனிப்பு. இனிப்பு பிடிக்கும்போது சிரிப்பு பிடிக்காமல் இருக்குமா? சிரியுங்கள். மருந்துகளை ஆராய்ச்சி செய்த ஆராய்ச்சியாளர்கள்,மருந்து களுக்கெல்லாம்மருந்தாக இருப்பது சிரிப்பு மருந்து தான் என்று கூறி யிருக்கின்றார்கள்.







# புதன்பொய்கை

## தமிழ் எழுத்தின் வரலாறு

தமிழ் மொழியானது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக் த முற்பட்டதெனப் பலரும் கூறியுள்ளனர். சிந்துவெளி நாகரிகத்தில் மொகஞ்சதாரோ என்ற இடத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி மூலம் தமிழ் எழுத்தின் வரலாறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதன் வரலாற்றைக் கீழே பார்ப்போம். தமிழர்களைப் போலவே சீனர்களும் முற்காலத்தில் தமது மொழியைப் பயன்படுத்தியுள்ளனர். தமிழர்கள் முற்காலத்தில் சித்திர எழுத்தையே பயன்படுத்தினர். அந்தச் சித்திர எழுத்துக்களை மிகப் பழைமையான காலத்தில் அவர்கள் பயன்படுத்தி உள்ளனர். சில காலத்தின் பின்னர் படிப்படியாக பிராமி என்னும் எழுத்து வந்தது. அந்த பிராமி எழுத்தே நெடுங்காலம் வட இந்தியாவில் வழக்கில் இருந்து வந்தது. அதிலும் எவ்வளவோ கலப்பும் மாறுதலும் ஏற்பட்டு வந்தன.



இதேவேளை தென்னிந்தியாவில் பழங்காலத்தில் இருந்த எழுத்தே பழையதமிழ்எழுத்துக்களாகும். அவ்வகையான பழைய தமிழ் எழுத்துக்கள் வட்டவடிவமாக கல்லில் வெட்டிச் செதுக்கி எழுதியமையால் வட்டெழுத்து எனப்பட்டது. சிறிது காலத்தில் வட இந்திய எழுத்துக்களில் ஒலியும், எழுத்தும் மாறுபட்டு தேவநாகரி எழுத்து தோன்றியது. ஆனால் அதே சமயத்தில் தென்னிந்தியாவில் ஒலியும், எழுத்தும் அவ்வளவாக மாறவில்லை. சமஸ்கிருதம், இந்தி ஆகிய எழுத்துக்கள் தேவநாகரி எழுத்தையே பயன்படுத்தி எழுதப்படுகின்றன. பின்னர் வட்டெழுத்து புதுவகையான எழுத்தாக மாறிவிட்டது. இதனைத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் ஒரே வயிற்றில் பிறந்த இரட்டைக் குழந்தைகள் பிரிந்து வெவ்வேறாக மாறியதைப் போல் என வர்ணிக்கின்றனர்.

எமது முன்னோர்கள் நம்மைப் போல் எழுதுவதற்கு பேனை, கொப்பியைப் பயன்படுத்தவில்லை. அவர்கள் பனையோலையையும் எழுத்தாணியையும் பயன்படுத்தினர். முற்காலத்திலிருந்து இன்று வரை தமிழ் மொழியில் கிரந்த எழுத்துக்களில் கலப்பு பெரிதும் காணப்படுகின்றது. கிரந்த எழுத்து என்பது வடமொழியிலிருந்து தமிழ் மொழிக்கு வந்த எழுத்தாகும். தமிழ் மொழியையும் கிரந்த எழுத்தையும் பார்த்து தெலுங்கு எழுத்து தோன்றியதாகக் கூறப்படுகின்றது.

தெலுங்கு எழுத்தில் வளைவுகளும் சுழிகளும் பெரிதும் காணப்படுகின்றன. பழைய கோயில்களிலும், வேறு இடங்களிலும் உள்ள கல்வெட்டுக்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் நாம் தற்போது பயன்படுத்தும் எழுத்தை இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெஸ்கி என்ற வீரமா முனிவர் சீர்திருத்தினார். அதாவது ஐ, ளெ போன்ற எழுத்துக்கள் முற்காலத்தில் இல்லை. இவை காலப்போக்கில் வீரமா முனிவரால் கொண்டு வரப்பட்டவை. முன்னைய ஊன ஊல போன்ற எழுத்துகள் தற்போது னை, லை என மாறி விட்டன. எனவே தமிழ் எழுத்தின் மகிமையை உணர்ந்து அதனைச் சரியாகப் பயன்படுத்துவோம்.

ரா.நிஷாங்கன், தரம்–9,
யா/ நீர்வை அத்தியார் இந்துக் கல்லூரி.

## குரங்குகள் ராஜ்ஜியம்



அது ஒரு அடர்ந்த காடு. அங்கே ஆறு குரங்குகள் வசித்து வந்தன. ராமு, சோமு, டாம், ஜெரி, பிராட், சுலித் என அவை தமக்குத் தாமே பெயர் வைத்துக் கொண்டன. ராமு மிகவும் அழகானது, சாந்தமானது. எந்நேரமும் மகிழ்ச்சியாகவே இருப்பதற்கு அது விரும்பும். சோமுவும் அழகானதுதான். ஆனால்எப்போதுமே மற்றவர்களைச் சுரண்டிப் பார்ப்பதில் ஆனந்தம் கொள்ளும். டாம் அழகில்லை. ஆனால் ஏனைய குரங்குகளுடன்சகஜமாகப் பழகும். ஜெரி டாமின் மகள். அது டாம் போலவே நடந்து கொள்ளும். பிராட்டும் சுலித்தும் இரட்டையர்கள். இவர்கலைப் பெற்ற தாய்க் குரங்கு இவர்கள் பிறந்ததும் இறந்து விட்டது. பிராட்டும் சுலித்தும்தாய் இல்லாமல் வளர்ந்ததால் பொறுப்புடன் நடந்து கொள்ளும் தன்மையுடையன.

இந்த ஆறு குரங்குகளும் மிகவும் மகிழ்ச்சியுடனும், அன்பாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்தன. மரங்களுக்கு மரம் தாவுவது என்பது இவற்றுக்கு மிகவும் பிடிக்கும், பழங்கள், கிழங்குகள் இலைகளின் குருத்துக்கள் போன்றவற்றை விருப்பமுடன் உண்ணும் இயல்பை இவை கொண்டிருந்தன.

அவற்றுக்கிடையே சண்டை கள் வந்தாலும் உடனே சமாதானம் ஏற்பட்டு விடும். பிராட்டும் சுலித்தும் ஒரு நாளுமே சண்டையிட்டதில்லை. இப்படி இருக்கையில் ஒரு நாள் கடுமையான புயல் காற்று வீசிக் கொண்டிருந்தது. இந்த ஆறு குரங்குகளும் ஒரு மரத்தில் அமர்ந்திருந்தன. அந்த மரம் மிகவும் பெரியதாக இருந்ததால் புயலுக்குத் தாக்குப் பிடிப்பதற்கு அவற்றுக்கு உதவியாக இருந்தது. அவ்வேளை பக்கத்துக் காட்டிலிருந்த குரங்கு ஒன்று புயலால் தடுமாறி இந்தக் காட்டுக்கு வந்து விட்டது.அதன் பெயர் மரிக் என்பதாகும். அது வந்த போது ராமு இருந்த கிளை முறியவே அது கீழே விழுந்து விட்டது. அந்த ஆறு குரங்குகளுக்கும் வெவ்வேறு குணங்கள் இருந்தாலும் ஒற்றுமையாக வாழ்ந்ததால் புயல் மழையைப் பாராது உடனே கீழே குதித்து ராமுவைக் காப்பாற்றி மரத்துக்கு கொண்டு வந்தன.

புதிதாக வந்த மரிக்குக் இதைப் பார்க்க ஆச்சரியமாகவும் அதேவேளை பொறாமையாகவும் இருந்தது. அது எப்படியாவது இவர்களைப் பிரித்து விட வேண்டும்என எண்ணிக் கொண்டது. அதற்காக புயல் ஓயும் வரை ஒரு சிறிய குகையில் பதுங்கி இருந்தது. அதற்கு நல்ல அதிஷ்டம் போலும். புயல், மழை உடனே நின்றுவிட்டது. ராமு, சோமு, டாம், ஜெரி, பிராட், சுலித் ஆகிய ஆறு குரங்குகளுக்கும் நல்ல மகிழ்ச்சி அவை ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தன. சுலித் எதிர்பாராத விதமாக புதிய குரங்கை பார்த்து விட்டது. அது...

*(மீதி அடுத்த வாரம்)*

*ஸ்ரீ. தர்ஷிகன், யாழ். இந்துக் கல்லூரி.*





க.சகானா, தரம்–3 சித்தி விநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை

அ.ஆதித்தன, தரம்–3, யாழ்ப்பாணக் கல்லூரி








ச.சேயோன்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

## பழமொழிகளும் கருத்துக்களும்

* ஆனைக்கொரு காலம் பூனைக்கு ஒரு காலம்
  (காலம் மாறி வரும்)
* காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
  (சந்தர்ப்பத்தை தவற விடக் கூடாது)
* குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது
  (நற்புகழ் மங்குவதில்லை)
* அடாது செய்தவன் படாது படுவான்
  (கேடு செய்பவர் துன்பம் அனுபவிப்பர்)
* தன் வினை தன்னைச் சுடும்
  (பிறருக்குச் செய்யும் தீங்கு தனக்கே தீங்காக முடியும்)
* போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
  (மன நிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்)
* துஷ்டரைக் கண்டால் தூர விலகு
  (தீமை என்று தெரிந்தால் விலகுதல் அழகு)
* பதறாத காரியம் சிதறாது
  (நிதானமாகச் சிந்தித்துச் செய்யும் செயல் வெற்றி தரும்)
* எட்டாக் கனிக்கு கொட்டாவி விடாதே
  (கிடைக்காத ஒன்றுக்காக ஏங்குதல் ஆகாது)
* மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
  (போலியைக் கண்டு ஏமாறக் கூடாது)

அ.விசாகன்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

# புதன்பொய்கை



## 'புலம்பெயர் நாடக எழுத்துருக்கள்' நூல் வெளியீட்டு விழா சுவிஸில்







புலம்பெயர் நாடக முன்னோடிகளுள் ஒருவரான சுவிற்சர்லாந்தில் வாழும் ஏ.ஜி. யோகராஜா எழுதிய 'புலம்பெயர் நாடக எழுத்துருக்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் பேர்ண்-லங்கந்தால் நகரில் நடைபெற்றது. ஆன்மிகவாதியான எஸ். சண்முகராஜா (சண்) நூலை வெளியிட்டு வைத்தார். கலாநிதி சர்வேந்திரா தர்மலிங்கம் (சர்வே) நூலின் சமூக நோக்குப் பற்றியும், நாடக நெறியாளர் அன்ரன் பொன்ராசா நாடகம், எழுத்துரு மற்றும் நூலாசிரியர் பற்றியும், கவிஞர் தா.பாலகணேசன் நூலின் கவித்துவம் பற்றியும், பிரபல எழுத்தாளர் க. ஆதவன் காட்சிப் படிமம் பற்றியும், ப. ரவீந்திரன் (சுவிஸ் ரவி) மரபும் நவீனத்துவமும் தொடர்பிலும், நளாயினி தாமரைச்செல்வன், பெண்ணியம் தொடர்பிலும் ஆய்வுரை நிகழ்த்தினர். வெளியீட்டு உரையை திருமதி கோகிலா தவராஜா நிகழ்த்தினார்.

சிறப்புரை நிகழ்த்திய இலக்கியவாதி கல்லாறு சதீஸ், சுவிஸ் தமிழ் இலக்கியச் சங்கத்தின் சார்பில் நூலாசிரியருக்கு கலைமயிர் என்ற பட்டத்தை வழங்கி வைத்தார். நூலாசிரியர் ஏ.ஜி. யோகராஜாவின் சிறந்த படைப்புக்களுள் ஒன்றான "கடலம்மா" நாடகத்தில் இருந்து ஒரு சிறிய பகுதி கலைஞர்களால் நடித்துக் காட்டப்பட்டமை நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுவிஸ் சுனாமி சிறுவர் நிலையத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்







ஆழிப்பேரலை இடரில் பாதிக்கப்பட்ட தாயக பாடசாலைச் சிறார்களின் கல்வி மேம்பாட்டை மையமாகக் கொண்டு சுவிற்சர்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட சுனாமி சிறுவர் உதவி நிலையத்தின் 10 ஆவது ஆண்டு விழா பேர்ண்–தூண் நகரில் அண்மையில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. இடரில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான உறவுகளுக்கும், அவர்களின் துயர் துடைப்புப் பணியில் தம்மை ஈடுபடுத்தி சுவிஸ் நாட்டில் உயிர் நீத்த சுனாமி சிறுவர் உதவி நிலைய நிர்வாக சபை உறுப்பினர்களுக்குமான அஞ்சலியுடன் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுனாமி சிறுவர் உதவி நிலையத்தின் தலைவர் யோக்கிம் விமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் நிராஜ் டேவிட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தமது அமைப்பு கடந்த காலங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் தற்போது மேற்கொண்டு வரும் செயற்பாடுகளையும் தலைவர் தனது உரையில் ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார். அத்துடன் பயனாளிகளான பாடசாலைப் பிள்ளைகள் தாம் பெற்றுக் கொண்ட உதவிகள் மூலம் கிட்டிய நன்மைகள் தொடர்பாக எழுதிய கடிதங்கள் நிகழ்வில் வாசிக்கப்பட்டதுடன், அவர்களது செய்திகள் இடம்பெற்ற காணொலிகளும் காட்சிக்கு உட்படுத்தப்பட்டன. நிகழ்வில் அபிநயம், நடனம், நாடகம், மெல்லிசை உட்பட கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



# ~~100/=~~ 75/=

## இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் ஒரு பரிணாம புரட்சி

**25/= இலாபத்தில் ஜனவரி முதலாம் திகதி வெளிவரும் 'ஒளிஅரசி' சஞ்சிகையை வாங்கி கீழ்வரும் உடல், உளம், மனம், அறிவு, கல்வி, பொதுவிடயங்களை அழகாக, அளவாக, ஆனந்தமாக நுகரலாம்.**

### பக்கங்களும் உள்ளடக்கங்களும்

05 – சிறப்புக்கட்டுரை – பெண்களும் பண்டிகைகளும்
06 – சிறப்பு கவிதை – என்பாதை, அகலிகை
07 – சிரிக்கலாம் வாங்க – புதிய ஜோக்ஸ்
08, 09 – இல்லறம் நல்லறமாக – ரொமான்ஸ் இரகசியம் 13
10, 11 – குழந்தை வளர்ச்சியில் பின்பற்றவேண்டியவைகள்
12, 13, 14 – நட்சத்திர இல்லத்தரசி – பல்கலைக்கழக பீடாதிபதி எம். ஐ. எஸ். சபீனா வழங்கும் அனுபவப் பகிர்வுகள்
15 – வரலாற்றில் பெண்மணி மோனிகா செலஸ் காட்டும் வாழ்கைப் பாடம்
16, 17, 18 – உறவுகள் சுகமானது – நெடுந்தொடர்
19 – அறிவியல் – இயற்கை அதிசயத்திற்கு ஆபத்து?
20 – குறுக்கெழுத்துப் போட்டி இல. 14
22, 23 – தொழில் வழிகாட்டி – O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட கட்டுரை
24, 25 – தன்னம்பிக்கை – யார் வெற்றி பெறுவார்கள்?
26 – அழகுக் குறிப்பு – அலுவலகத்திற்கு ஏற்ற ஆடை
27 – இயக்குனர் சிகரம் – கே. பாலசந்தர்
28, 29 – குறுங்கதை – சின்ன வீடு
30, 31 – இலக்கியதேன் – வெட்கத்தைவிட்டுவிடு
32, 33 – திகில் தொடர் – இருட்டில் வைத்தகுறி
34, 35 – உலக உலா எப்போலாவுக்கு எதிராக கியூபா மருத்துவர்களின் போர்
36 – விளையாட்டு அறிவுப் போட்டி
38, 39 – சுயதொழில் – சிப்பிக்குள் பூக்கும் வருமானம்
40, 41 – நீங்கள் நலமா? பெண்களுக்கான மருத்துவ ஆலோசனை
42 – சிறப்புக் கவிதை அம்மா, விடிவு கிடைக்குமா, என்றும் மழலை
43 – சமூகசேவை – கருணை உள்ளம் ஒரு பார்வை
44, 45 – சிறுகதை – பிரச்சினை
46 – அழகுக்குறிப்பு – பெண்களும் மூக்குத்தியும்
47 – கண்டதும் கேட்டதும் – நாகரிக மனிதர்கள்
48, 49 – கட்டுரை – மாமியார், மருமகள் உறவு
50, 51 – விந்தை உலக விடயங்கள்
52, 53 – ஜனவரி மாதம் உங்களுக்கு எப்படி?
54, 55 – அம்முவின் கேள்வி பதில்
56 – 'பிசாசு' சினிமா விமர்சனம்




57 – நட்சத்திர ஜோக்ஸ் துப்பாக்கியுடன் நடந்த திருமணம்
59 – பொது அறிவு – உங்களுக்கு தெரியுமா?
60, 61 – கடல் கொள்ளையர்கள் வரலாற்றுத் தொடர்
62 – டுவிட்டரில் கிடைத்த முத்துக்கள்
63 – தையல்கலைப் பயிற்சி – பாடசாலை சீருடை
64 – ஆன்மிகம் வித்தைக்காரனும் வியாபாரியும்
65 – இம்மாத மங்கை – சமூகத் தலைவி
66 – சுவைக்க சமைப்பது எப்படி?
67 – உண்மைச் சம்பவம் சிந்திக்க வேண்டிய திருமணம்
68 – வாசகர் உள்ளங்கள்
70 – புராணக்கதை மழலைகள் அறிய வேண்டியவை
72, 73 – தரம் 5, 4 பல்திறன் அறிவுப் போட்டி – 05
74 – மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி

**பல சிறப்புக்களை தன்னகத்தே உள்ளடக்கிய 'ஒளிஅரசி' சஞ்சிகையை மாதம் ஒன்று வாங்கி எங்கள் வீட்டில் வைப்பதால் எங்கள் குடும்பம் கௌரவம் பெறுகின்றது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்...**

இப்படிக்கு
2014 ஆம் ஆண்டுக்குரிய நட்சத்திர இல்லத்தரசிகள்.

**இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்**

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு:
**077 6569617 / 011 5737592**
விளம்பர தொடர்புகளுக்கு:
**078 8864730 / 0787 273035**

# ஆலயங்களில் கோபுரத்தில் புதைந்துள்ள அறிவியல் உண்மை

**மு**ற்காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்தது. என்ன காரணம்? கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். அதன்பின் ஒளிந்திருக்கும் ஆன்மிக உண்மை தெரியவில்லை. ஆனால் அதன் பின் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என இப்போதுதான் தெரிகிறது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி செம்பு ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங் களிலும் அதில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசங்களுக்குக் கொடுக்கின்றன. நெல், உப்பு, கேழ்வரகு, தினை, வரகு, சோளம், மக்கா சோளம், சலமை, எள் ஆகியவற்றைக் கொட்டினார்கள். குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாகக் கொட்டினார்கள். காரணத்தைத் தேடிப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. வரகு மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றிருப்பது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

இவ்வளவுதானா? இல்லை, பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகின்றன. அதை இன்றைக்கு சம்பிரதாயமாகவே மட்டும் கடைப்பிடிக்கிறார்கள். காரணத்தைத் தேடினால், அந்த தானியங்களுக்குப் 12 வருடங்களுக்குத்தான் அந்த சக்தி இருக்கிறது. அதன்பின் அது செயல் இழந்து விடுகிறது. இதை எப்படி அப்போது அறிந்திருந்தார்கள்? ஆச்சரியம் தான். அவ்வளவுதானா? அதுவும் இல்லை. இன்றைக்குப் பெய்வதைப்போன்று மூன்று தினங்களா மழை பெய்தது அன்று?

தொடர்ந்து மூன்று மாதங்கள் பெய்தது. ஒரு வேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்து போனால், மீண்டும் எதைவைத்து பயிர் செய்வது? இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பில்லை. இதையே மீண்டும் எடுத்து விதைக் கலாமே! ஒரு இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடி தாங்கியோ அது தான் முதலில் எர்த் ஆகும்.

மேலும் அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கலசங்கள் இடிதாங்கிகள்.

உதாரணமாகக் கோபுரத்தின் உயரம் 50 மீற்றர் என்றால் 100 மீற்றர் விட்டம் வரைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடி தாங்காமல் காக்கப்படுவார்கள். அதாவது சுமார் 75008 மீற்றர் பரப்பளவிலிருக்கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. அது நாலாபுறமும் 75000 சதுர மீற்றர் பரப்பளவைக் காத்து நிற்கிறது. இது ஒரு தோராயமானகணக்குத் தான். இதை விட உயரமான கோபுரங்கள் இதை விட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றன.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழி நினைவுக்கு வருகிறது.

(இணையவன்)